**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©
**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

*வெளியீடு :* 18-11-2011 Issued : 18-11-2011

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, ஆகஸ்ட் 8, 2011—தொகுதி 4—எண் 2**

**Monday, the 8th August 2011—Volume 4—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **Price Rs. 3.00**

## 8-8-2011

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற்குறிப்புகள்—** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 95-96 |
| **2. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 97-127 |
| **3. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| (அ) சுற்றுச்சூழலைப் பாதுகாக்க சிறப்புத் தூய்மைப்படுத்தும் திட்டம் மற்றும் விரிவான திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்துவது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 127-128 |
| (ஆ) காற்றாலைமூலம் பெறப்படும் மின்சாரத்தை உயரழுத்தத் தொழிற்சாலைகளுக்கு வழங்குவது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 128-130 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2011 | 130-131 |
| **5. திருத்திய வரவு-செலவுத் திட்டம், 2011-2012, பொது விவாதம்—** | 131-150, 151-229 |
| *திரு. வி.சி. சந்திரகுமார் | 131-150 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 143,159,204 |

பக்கங்கள்

**5. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதம்**—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் — 144, 172-173, 191-192

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — 202,203, 149, 162,165, 167,182, 198,199

டாக்டர் சி. விஜயபாஸ்கர் — 151-166

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் — 163

*திரு. ஏ. லாசர் — 167-179

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 175-176

*திரு. ஆர். மனோகரன் — 179-189

*மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் — 186-187

திரு. சு. குணசேகரன் — 189-205

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 193

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் — 198

*திரு. க. பாலகிருஷ்ணன் — 201

*திருமதி ஆர். ராஜலட்சுமி — 205-213

*திருமதி எஸ். விஜயதரணி — 213-226

திரு. என்.டி. வெங்கடாச்சலம் — 226-229





பக்கங்கள்

**6. அறிவிப்பு**—

சட்டமன்றப் பேரவைச் செயலக வளாகத்தில் உறுப்பினர்களுக்கான ஓய்வு அறைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது — 150

**7. அரசினர் தீர்மானம்**—

பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் — 230

**8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)**—

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2011 — 230-233

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு — 231, 232, 233

திரு. கு. லிங்கமுத்து — 231

*திரு. அ. சவுந்தரராசன் — 231-232

**9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 234-235

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆடி 23

## 2011 ஆகஸ்ட் 8, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

***"அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்***
***எஞ்சாமை வேந்தற்கு இயல்பு."***

பயம் இல்லாதிருத்தல், ஏழைக்குக் கொடுக்கும் கொடை, சிறந்த அறிவு, மிகுந்த ஊக்கம் இந்த நான்கினையும் குறை இல்லாமல் நிறைவாகப் பெற்றிருப்பவர் சிறந்த ஆட்சியாளர் ஆவார்.

## 1. இரங்கற்குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. எஸ்.எஸ். கருப்பசாமி அவர்கள் 12-11-2010 அன்றும், திரு. என். சண்முகசுந்தரம் அவர்கள் 8-5-2011 அன்றும், திரு. இரா. ஆதிசுவாமி அவர்கள் 19-6-2011 அன்றும், திரு. ஜி.ஜி. குருமூர்த்தி மற்றும் திரு. மு. பரமசிவம் ஆகியோர் 26-6-2011 அன்றும், திரு. சைதை கா. கிட்டு அவர்கள் 3-8-2011 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.எஸ். கருப்பசாமி அவர்கள் சாத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1989 முதல் 1991 வரை சிறப்புறப் பணியாற்றினார்கள்.

[பேரவைத் தலைவர்] [2011 ஆகஸ்ட் 8

திரு. என். சண்முகசுந்தரம் அவர்கள் மேட்டுப்பாளையம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1962 முதல் 1967 வரை திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. இரா. ஆதிசுவாமி அவர்கள் குளச்சல் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 முதல் 1980 வரை சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. ஜி.ஜி. குருமூர்த்தி அவர்கள் பவானி தொகுதியிலிருந்து இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1957 முதல் 1962 வரையிலும், 1989 முதல் 1991 வரையிலும் சிறப்புறப் பணியாற்றினார்கள்.

திரு. மு. பரமசிவம் அவர்கள் தாரமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1971 முதல் 1976 வரை நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. சைதை கா. கிட்டு அவர்கள் சைதாப்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1996 முதல் 2001 வரை சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)



2011 ஆகஸ்ட் 8]

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**1—**

### தீயணைப்பு நிலையம்

***1565—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் வட்டத்தில் தீயணைப்பு நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதியைச் சுற்றி 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் அம்பாசமுத்திரம், தென்காசி மற்றும் சுரண்டை ஆகிய மூன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மேற்கண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலைய ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும்.

எனினும், ஆலங்குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிக அளவில் குடிசை வீடுகள் உள்ள காரணத்தாலும், மேலே குறிப்பிட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களிலிருந்து ஆலங்குளம் செல்லும் சாலைகள் நல்ல நிலையில் இல்லாததாலும், தீயணைப்பு வண்டிகள் விரைந்து செல்ல முடியாது என்பதாலும் ஆலங்குளத்தில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2011 ஆகஸ்ட் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன்.

முற்பகல் 10-05

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அருளும் உண்டு, பொருளும் உண்டு, ஆன்றோர் போற்றுகின்ற நற் குணங்களும் உண்டு, சொற்போரில் வெல்லுகின்ற திறமையும் உண்டு, அயல் நாட்டவரும் போற்றுகின்ற பெருமையும் உண்டு. பார்போற்றும் தமிழகத்தை வாழவைக்கும் பாரதத் தாய் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலுள்ள அனைத்து மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று, மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தொலைநோக்குப் பார்வையோடு நிதிநிலை அறிக்கை தந்து நீதி காத்த தாயே, என்னை மீண்டும் இரண்டாவது முறையாக ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வைத்து வெற்றிபெறச் செய்ய வைத்த தாயே, 2011 ஆம் ஆண்டு இந்த மாமன்றத்தில், முதல் வினாவில் அதுவும் எங்கள் தாயின் வாயிலாக பதில் கேட்கும் அரிய வாய்ப்பாக, ஆலங்குளம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கனவான தீயணைப்பு நிலையத்தினை அமைக்க உத்தரவிட்ட, அன்புத் தாய் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு ஆலங்குளம் தொகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஏறக்குறைய 300-க்கும் மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கிய தொகுதியாகும். இந்தத் தொகுதி வரலாற்றுச் சிறப்புமிக்க பாரதியார், வீரபாண்டிய கட்டபொம்மன், உமறுப் புலவர் ஆகியோர் பிறந்தும், வரலாறும் படைத்த அந்த பூமியாகும். அப்படி வரலாற்றுச் சிறப்புமிக்க ஒட்டப்பிடாரத்தில் இதுவரையிலும் ஒரு தீயணைப்பு நிலையம்கூட தொடங்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவுகூர்ந்து ஒட்டப்பிடாரத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் தொடங்குவதற்கு ஆணையிடுவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2011 ஆகஸ்ட் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஆலங்குளம் தொகுதியைப் பற்றியது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறையில், திண்டுக்கல் மாவட்டம் உள்ளிட்ட பகுதிகளில் ஏற்கெனவே இருந்த ஆம்புலன்ஸ் வசதி இப்போது இல்லை. 108 ஆம்புலன்ஸ் வந்த பிறகு தீயணைப்பு நிலையங்களில் இருந்த ஆம்புலன்ஸை எடுத்துவிட்டார்கள். அதேபோன்று Recovery van-உம் இல்லை. இரண்டு வாகனங்கள் மோதிக்கொள்கின்றபோது அதிலிருந்து சடலங்களை மீட்பதற்கான Recovery van இல்லை. குறிப்பாக, கிணற்றில் சிறுவர்கள் விழுந்துவிட்டால், குளத்தில் விழுந்துவிட்டால் அவர்களை எடுப்பதற்கு தண்ணீரை உறிஞ்சி வெளியில் எடுத்து விட்டுத்தான் எடுக்கிறார்கள். வெளியில் எடுப்பதற்கு diving suit என்பது மாவட்டங்களில் இல்லை. ஆகவே, பல துறைகளை உள்வாங்கி மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தத் துறைக்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதற்குப் பரிசீலிக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்தத் துணைக் கேள்வியின் மூலமாக தங்கள் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களின் பதிலை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் இதைத்தான் நான் பதிலாகச் சொல்லமுடியும். மூலக் கேள்வி ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதியைப் பற்றியது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் வேறு கேள்விகளைக் கேட்டால் அதற்கான விடை என்னிடம் தற்போது இல்லை. ஆகவே, தனிக் கேள்வி போடவும்.

[2011 ஆகஸ்ட் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**2—**

## கட்டட வசதி

*__717—திரு. ம. குணசேகரன்:__ மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை கருவூல அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சார்நிலை கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முன்நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளது. போதிய நிதி ஒதுக்கீடு பெற்று கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மூன்றாவது முறையாகத் தமிழக முதலமைச்சராகப் பதவியேற்று, தாயுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய தமிழ்நாட்டை அமைதிப் பூங்காவாக ஆக்கி, சிறப்புற ஒரு சிறந்த பட்ஜெட்டைத் தமிழகத்திற்கு அளித்து, இந்த நாட்டு மக்களை வாழவைத்துக்கொண்டிருக்கின்ற எங்களுடைய இதய தெய்வத்திற்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திற்கு எனக்கு மூன்று முறை போட்டியிட வாய்ப்பு கொடுத்து, இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த மாமன்றத்தில் என்னை இரண்டாவது



2011 ஆகஸ்ட் 8]

கேள்வியைக் கேட்கவைத்த எங்கள் அன்பு தெய்வத்திற்கு மீண்டும் ஒருமுறை என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியோடு, என்னை மூன்றாவது முறையாக வேட்பாளராக நிறுத்தி வெற்றிபெற வைத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைக் கூறி, என்னுடன் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட தோழமைக் கட்சிகளினுடைய தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் நன்றியினைக் கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியோடு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இன்றைக்கு மானாமதுரை தொகுதியில் இடத்தை ஒதுக்கி அந்தக் கருவூலத்திற்கு ஒரு கட்டடத்தைக் கட்டித் தருகிறோம் என்று சொல்லியிருக்கின்றார்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றியினைக் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை சார்நிலைக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல் தொடர்பாக, கருவூலக் கணக்கு ஆணையர், மானாமதுரை, சார்நிலைக் கருவூல அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட, புல எண் 244/1-இன் கீழ் இடம் தேர்வு செய்யப்பட்டு, மேற்படி இடத்தில் 0.06.5 ஹெக்டேர் நிலத்தில் சொந்தக் கட்டடம் கட்டிக்கொள்வதற்கு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தில் மானாமதுரை சார்நிலைக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணையினைப் பெற்று, புதிய கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைக் கூறிக்கொள்கின்றேன்.

[2011 ஆகஸ்ட் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**3—**

## வேளாண் கல்லூரி

***1432—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தொகுதியில் வேளாண் கல்லூரி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் சட்டமன்ற வரலாற்றில் ஒரு சரித்திர வரலாற்றைப் படைத்து, தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் அனைவராலும் போற்றிப் புகழுகின்ற அளவுக்கு நிதிநிலை அறிக்கையை உருவாக்கியிருக்கிற தமிழகத்தின் முதல்வர், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானு கோடி நன்றி மலர்களை அவர்கள் பாதங்களுக்குத் தெரிவித்து என் விடையை அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் சார்ந்த மாவட்டமாகத் திகழும் குமரி மாவட்டத்தில் இருக்கும் விளவங்கோடு தொகுதியில், அதிகமான வேளாண் தோட்டக்கலை சார்ந்த தொழில்கள் நிலவி வருவதால், மக்கள் அதைச் சார்ந்து வாழ்ந்து வருவதால், நிச்சயமாக அந்தத் தொகுதியில் வேளாண் மற்றும் தோட்டக்கலை சார்ந்த கல்லூரி அமைக்கப்படுமானால், அது அந்தத் தொகுதிக்கு மட்டுமல்ல; குமரி மாவட்டத்திற்கே ஒரு பெரிய உறுதுணையாக இருக்கும் என்று



2011 ஆகஸ்ட் 8]

தெரிவித்துக்கொண்டு, அவ்வாறான ஒரு கல்லூரியை அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரிடமும் அரசிடமும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதிக்கு அருகிலேயுள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் கிள்ளிகுளத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி இயங்கி வருகிறது. விளவங்கோடு தொகுதி மாணவர்கள் மேற்கண்ட கல்லூரியிலே சேர்ந்து படிக்க ஏதுவாக உள்ளது. விளவங்கோடு தொகுதி அருகிலுள்ள திருப்பதிசாரத்தில் ஒரு வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. ஆக, புதியதாக வேளாண்மைக் கல்லூரி ஒன்று உருவாக்குவதற்கு 40 கோடி ரூபாய் செலவாகும் என்பதாலும், 50 ஏக்கர் நிலம் வேண்டுமென்ற அடிப்படையிலும், வேளாண்மைக் கல்லூரிகளை பல்வேறு இடங்களிலே அமைக்க இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண் கல்லூரி அமைக்கப்படவில்லையென்றாலும், இப்போது உள்ள அந்தக் கல்லூரியை மேலும் மேம்படுத்தி வசதிகள் செய்து தரவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2011 ஆகஸ்ட் 8

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, கோடானு கோடி திட்டங்களை மக்களுக்கு அற்புதமாக அளித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த அரசிலே நியாயமான கோரிக்கையை நான் வைக்க விரும்புகிறேன். எங்களுடைய மாவட்டம் விவசாயத்திலே சிறந்த ஒரு மாவட்டமாக விளங்குகிறது. குறிப்பாக, திருவிதாங்கூர்-கொச்சி சமஸ்தான ஆட்சியின்போது நாஞ்சில் நாடு என்று சொல்லக்கூடியது கன்னியாகுமரி மாவட்டம். ஆனால், விவசாயப் பெருமக்களுக்கு எந்தவிதமான திட்டங்களும் கொடுக்கவில்லை. திருப்பதிசாரத்திலே ஓர் ஆராய்ச்சி மையத்தை வைத்திருக்கிறீர்கள். ஆனால் development-ஏ இல்லை. நான் அன்பாக வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நிச்சயமாக ஒரு வேளாண்மைக் கல்லூரி வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, முதல் கேள்விக்கு நான் தெளிவாக பதிலளித்தேன்; ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்றால் 50 ஏக்கர் நிலமும் 40 கோடி ரூபாய் நிதியும் தேவைப்படுகிறது என்று. ஆராய்ச்சி நிலையங்கள் அங்கே இருக்கின்றன. அதை விரிவுபடுத்துவதற்கு, அந்தப் பகுதி மக்கள் நலன் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 8]

**4—**

### மின்சார வசதி

***560—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, சிட்லிங் முதல் காரப்பாடி வரையுள்ள கிராமங்களுக்கு மின் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உயிரினும் மேலான தலைவி இதயதெய்வம், தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதலிலே பணிவோடு வணங்கி என் பதிலைத் தொடங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஆம். அரூர் தொகுதி, சிட்லிங் முதல் காரப்பாடி வரை நாடூர் மற்றும் நாட்டாண்வலவு ஆகிய இரு குக்கிராமங்கள் உள்ளன. இதில் சிட்லிங் கிராமத்திற்கு மின் வசதி உள்ளது. காரப்பாடி, நாடூர் மற்றும் நாட்டாண்வலவு ஆகிய மூன்று கிராமங்களுக்கும் இதுவரை மின் இணைப்பு வேண்டி விண்ணப்பங்கள் பெறப்படவில்லை. விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் வனத் துறையின் அனுமதி பெற்று மின் இணைப்புகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு சுதந்திரம் அடைந்து 64 ஆண்டுகள் ஆன பிறகும் இன்றும் மின்சாரத்தைப் பார்க்காமல் இருக்கக்கூடிய கிராமம் எனது அரூர் தொகுதியிலே உள்ள காரப்பாடி கிராமம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அதை ஏற்றுக்கொண்டார்கள். 2007 ஆம் ஆண்டு இதே மன்றத்திலே நான் வலியுறுத்தியிருக்கிறேன். வனத் துறை அனுமதி வழங்காத ஒரு காரணத்தால், 78 குடும்பங்கள், 543 பேர்

[2011 ஆகஸ்ட் 8

வாழக்கூடிய அந்த மலைப் பகுதி கிராமத்திற்கு, ஏறக்குறைய 11 கிலோ மீட்டர் தூரத்திற்கு மலையில் நடந்து செல்லவேண்டிய அப்பேர்ப்பட்ட கிராமத்திற்கு, இதுநாள் வரை 64 ஆண்டுகளாகியும் மின்சார வசதியே கிடைக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, பக்கத்திலே மலையடிவாரத்தில் இருக்கக்கூடிய நாட்டாண்வலவு, கம்பங்குடி ஆகிய பகுதிகள்கூட இன்னும் மின்சாரத்தைப் பார்க்கவில்லை. அதுமட்டுமல்ல; எனது தொகுதிக்குள் இருக்கக்கூடிய சித்தேரி மலையில் இருக்கக்கூடிய 64 சிற்றூராட்சி கிராமங்களில் 43 கிராமங்களுக்கு மின்சார வசதி இல்லாமல், O.H.T. அதாவது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு 3 ஆண்டுக் காலம் ஆகியும் இன்னும் மின் இணைப்பு வழங்கப்படாமல் குடிநீர் வசதியில்லாமல் பரிதவிக்கின்ற அவல நிலைமை இன்றைக்கும் நீடித்துக் கொண்டிருக்கிறது. இதை TWAD BOARD-இனுடைய M.D. அவர்களிடத்திலே சொன்னபோது, உயர் அதிகாரிகளை அனுப்பி அவர் விசாரணை செய்து "ஆம், உண்மை" என்று மாவட்ட ஆட்சியருடைய கூட்டத்திலே பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டது. ஆக, மின்சார வசதியில்லாமல் இன்றைக்கும் மனிதன் வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதியான குடிதண்ணீர் வசதி இல்லாமல், மின்சார வசதி இல்லாமல் அவதிப்படும் நிலைமை இன்றைக்கும் நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்திலும் நான் பணிவாகக் கேட்டுக்கொள்வதெல்லாம், இத்தனை ஆண்டுக் காலம் ஆகியும், வனத் துறையின் அனுமதியில்லாததால் மின்சாரம் வழங்க இயலவில்லை என்ற நிலையை மாற்றி, இந்த ஆட்சியிலாவது, இப்பொழுதாவது, காரப்பாடி, கம்பங்குடி, இன்னும் சித்தேரி பகுதியிலிருக்கக்கூடிய தொங்குலத்து, இருங்கடை, எலந்தங்கடை கோவிந்தங்கடை, ஆலங்கடை என்று சொல்லக்கூடிய இப்பேர்ப்பட்ட கிராமப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே



2011 ஆகஸ்ட் 8]

எந்தக் கிராமமும் மின் வசதியில்லாமல் இருக்கக்கூடாது; அனைத்துக் கிராமங்களும் மின் வசதி பெறவேண்டுமென்று ஆணையிட்டு இருக்கிறார்கள். தமிழகத்திலே அனைத்துக் கிராமங்களுக்கும், மலைப் பகுதியில் வனத் துறையின் அனுமதிக்காக நிலுவையிலிருக்கும் ஒருசில கிராமங்களைத் தவிர மற்ற அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தக் கிராமங்களுக்குக்கூட மின் வசதி செய்வதிலே மாண்புமிகு உறுப்பினரே குறிப்பிட்டதுபோல, மத்திய அரசின் வனத் துறை அனுமதி வழங்கவில்லை என்பதை அவரே குறிப்பிட்டிருக்கிறார். மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை. மத்திய அரசிடம்தான் அந்த அதிகாரம் விரிந்து கிடக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே இது நன்றாகத் தெரியும். ஏற்கெனவே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் பைக்காரா புனல் மின் நிலையத்திற்கு, ஏறத்தாழ 400 கோடி ரூபாயை செலவு செய்து, அவ்வளவு பெரிய திட்டத்தில் உற்பத்தியைத் தொடங்குகின்ற காலத்திலே மத்திய அரசின் வனத் துறை அதற்கு அனுமதி கொடுக்க மறுத்ததையெல்லாம் இங்கே அம்மா அவர்கள் பல முறை குறிப்பிட்டிருக்கிறார்கள். எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இவ்வளவு பெரிய மின் உற்பத்தித் திட்டங்களுக்குக்கூட மத்திய அரசின் வனத் துறை அனுமதி கொடுப்பதில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றம் சென்று அதற்கு அனுமதி பெற்றுத்தான் அந்த உற்பத்தியைத் தொடங்கினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த காலத்திலே-குற்றச்சாட்டாகச் சொல்லக்கூடாது கேள்வி நேரத்திலே; கடந்த ஆட்சிக் காலத்திலே--நடைபெற்ற சம்பவங்களைத்தான் நினைவுபடுத்தியிருக்கிறேன்.

அதேபோல, இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எல்லா குக்கிராமங்களுக்கும், மலைப் பகுதி கிராமங்களுக்கும் கூட மின்சார வசதி செய்துதர வேண்டும் என்றும், அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் எங்கள் துறைக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களினுடைய ஆணையின்படி நிச்சயமாக மத்திய அரசு, வனத் துறையின் அனுமதியை நிச்சயமாகப் பெறுவதற்கான முயற்சிகளை எடுத்து, மிக விரைவிலே அக்கிராமங்களுக்கு மின் வசதி செய்து தரப்படும் என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2011 ஆகஸ்ட் 8

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்கு மிக்க நன்றி. சித்தேரி மலைப் பகுதியில் நான் சொல்லி இருக்கக்கூடிய மலைப் பகுதி கிராமத்திற்கு ஒரு 30/11 கே.வி. துணை மின் நிலையத்தை ஏற்படுத்துவதன் மூலமாக மட்டுமே அங்குள்ள அந்த 62 கிராமங்களுக்கும் மின் இணைப்பும், மின்சார வசதியும், குடிநீர் வசதியும் வழங்க முடியும் என்று உயர் அதிகாரிகள் தெரிவித்து இருக்கிறார்கள். ஆக, கீரைப்பட்டியிலோ அல்லது சித்தேரி மலையிலோ 30/11 கே.வி துணை மின் நிலையத்தை அமைத்துத் தருவதற்கு இந்த ஆண்டில் இப்போதாவது எங்கள் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்ட கேள்வியினுடைய தொடர்ச்சியாக ஒரு பதிலைச் சொல்ல விரும்புகிறேன். மின் வசதி செய்ய முடியாத கிராமங்களுக்கு சூரிய சக்தியினுடைய சோலார் மின் சக்தியைப் பயன்படுத்தி மின் விளக்குகள் கொடுப்பதற்கும் இந்த அரசு உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் எடுத்துச் சென்று, உரிய ஆணையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில், குறிப்பாக புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி உள்ளிட்ட அனைத்துக் கிராமங்களிலும் இருக்கக்கூடிய விவசாய மின் இணைப்புக்குரிய மின்மாற்றிகள், கிட்டத்தட்ட அறுபதுக்கும் மேற்பட்ட பழைய மின்மாற்றிகள்



2011 ஆகஸ்ட் 8]

பழுதாகி, இரண்டு மாதங்களுக்கும் மேலாகி விவசாயிகள் பாதிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் மாற்றி புதியதாக மின்மாற்றி வழங்கப்படுமா என்பதனைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு துணைக் கேள்விகள் கேட்கும் உறுப்பினர்கள் மூலக் கேள்விக்குத் தொடர்புடைய துணைக் கேள்விகளைக் கேட்க வேண்டும் என்று ஏற்கெனவே புத்தாக்கப் பயிற்சியிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அதை நிச்சயம் கடைப்பிடிக்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு விரிவான பதிலை எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையிலே நான் பதிலாகத் தருகிறேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், ஆதிவாசிகள், மலை ஜாதியினர் குடியிருக்கக்கூடிய பகுதிகளில் மின்சார இணைப்பு வழங்குவதற்கு வன இலாகாவினரால் அனுமதி மறுக்கப்படுகிறது என்பது பொதுவாகவே இருந்து வருகிறது. எனவே, மின் இணைப்பு பெறுவதற்கு மத்திய அரசின் வனத் துறை தாராளமாக அனுமதி வழங்க வேண்டும் என்ற அடிப்படையில், நம்முடைய தமிழக சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** இது ஒரு கொள்கை முடிவு என்பதால், முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு உங்களுடைய கோரிக்கையை எடுத்துச் சென்று, இதுகுறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முடிவு செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2011 ஆகஸ்ட் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மின் இணைப்பு இல்லாத கிராமங்களுக்கு, குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. மின்னிணைப்பு இல்லாமல் இன்னும் அப்படி எத்தனை கிராமங்கள், குடியிருப்புகள் இருக்கின்றன என்பதையும், எவ்வளவு காலத்திற்குள் அதைச் செய்யலாம் என்பதற்கான திட்டம் உண்டா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடர்ந்த வனப் பகுதியில் உள்ள ஓரிரு கிராமங்களைத் தவிர மற்ற அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்யப்பட்டிருக்கிறது. வனத் துறை அனுமதிக்காத கிராமங்களுக்கு மட்டும்தான் இன்னும் மின் இணைப்பு தரப்படவில்லை. மத்திய அரசின் வனத் துறையிடம் விரைவான அனுமதி பெறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**5—**

### கூட்டுக் குடிநீர்

***592—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2011 ஆகஸ்ட் 8]

(அ) கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண தொண்டனாகிய என்னை வளர்த்து, ஆளாக்கி, வாழ்வளித்து இந்த மாமன்றத்தில் எங்கள் அன்னையின் முன்பாக பதில் கூறுகின்ற வாய்ப்பினை நல்கிய எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடை: (அ) ஆம். (ஆ) தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட மற்றும் தரமான குடிநீர் வழங்கும் வகையில் ரூ.1928.80 கோடி அமைப்புச் செலவிற்கும், ரூ.63.67 கோடி பராமரிப்புச் செலவிற்கும் 29-1-2010 நாளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ4) துறையின் அரசு ஆணை (நிலை) எண் 19-இல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் மற்றும் ஃபுளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டம் நல்ல முன்னேற்ற நிலையில் உள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் இவ்விரு மாவட்டங்களில் உள்ள 30 இலட்சம் மக்கள் பயன்பெறுவர். இத்திட்டம் முழுமையாக, குறிப்பிட்ட கால அளவிற்குள் முடிக்கப்பட்டு, 2012-இல் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டு அந்த இரு மாவட்ட மக்களுக்கும் பயன்பெறச் செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் நிலத்தடி நீரில் அதிக அளவு ஃபுளோரைடு கலந்திருப்பதால் அந்த நீரைக்

*[2011 ஆகஸ்ட் 8*

குடிக்கின்ற பொதுமக்கள் பற்சிதைவு நோய், எலும்பு நோய், மூட்டு வலி எனப் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். ஆகவே, பாதுகாக்கப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது அந்த இரண்டு மாவட்ட மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. கடந்த ஆட்சியாளர்களுக்கு எதையெடுத்தாலும் அவசர கோலம். சட்டமன்றத் தேர்தலை மனதிலே கொண்டு அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பல்வேறு திட்டங்கள், கடந்த கால ஆட்சியிலே அறிவிக்கப்பட்ட திட்டங்களும், அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களும் வெறும் அறிவிப்போடுதான் இருந்தன. இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்கூட, கடந்த மூன்று ஆண்டுக் காலமாக அதற்கான பணிகள் நிறைவேற்றப்படாமல் வெறும் கானல் நீராகத்தான் அந்த இரண்டு மாவட்ட மக்களுக்கும் இருந்தது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பலமுறை ஆய்வு மேற்கொண்டு, அந்தப் பணிகள் தற்போது வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, 2012 ஆம் ஆண்டுக்குள் அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு, இந்த இரண்டு மாவட்ட மக்களுடைய குடிநீர்த் தாகம் தீர்த்து வைக்கப்படும் என்று அறிவித்தமைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி ஆகிய இரு மாவட்ட மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒகேனக்கல் ஆற்றிலிருந்து நாளொன்றுக்கு எடுக்கப்படும் நீரின் அளவு எவ்வளவு என்பதையும் ஒரு நபருக்கு நாளொன்றுக்கு சராசரியாக எத்தனை லிட்டர் குடிநீர் வழங்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளொன்றுக்கு ஒகேனக்கல் ஆற்றிலிருந்து 160 எம்.எல்.டி. தண்ணீர், அதாவது 16 கோடி லிட்டர் தண்ணீர் உறிஞ்சப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, இரண்டு மாவட்ட மக்களுக்கும் வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படுகின்ற குடிதண்ணீர், 



*2011 ஆகஸ்ட் 8]*

கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்களுக்கு நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் தண்ணீரும், பேரூராட்சி கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்கு நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு 70 லிட்டர் தண்ணீரும், நகராட்சிகளில் வாழ்கின்ற மக்களுக்கு நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டர் தண்ணீரும் முழுமையாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) நீங்கள் முதலிலேயே கையைத் தூக்கியிருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் தங்கள் வீட்டிற்குத் தனியாகப் பெறும் குடிநீர் இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்தி, மாதந்தோறும் குடிநீருக்குக் கட்டணம் வசூலிக்கப்படுமா அல்லது இலவசமாக குடிநீர் வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை. தனிக் கேள்வி போடவும். மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களிடம் பதில் இருக்கிறதா? பதில் இருந்தால் சொல்லுங்கள்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டத்தில் கிராமப் புறங்களில் இருக்கின்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஒரு கிலோ லிட்டர் தண்ணீருக்கு அதாவது ஆயிரம் லிட்டர் தண்ணீருக்கு, 3 ரூபாய் கட்டணமும், நகராட்சிப் பகுதிகளில் வழங்கப்படுகின்ற தண்ணீருக்கு ஒரு கிலோ லிட்டர், அதாவது ஆயிரம் லிட்டர் தண்ணீருக்கு 4.50 ரூபாய் கட்டணமும் அந்தந்த உள்ளாட்சி அமைப்புக்களுக்குக் கட்டப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2011 ஆகஸ்ட் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு காவிரி ஆற்றிலிருந்து பெங்களூரு மாநகரத்தினுடைய குடிதண்ணீர்த் தேவைக்கு கர்நாடக அரசுக்கும், இந்த கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களுக்கு ஒகேனக்கல் திட்டத்திற்கென நமக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டு நீர் பகிர்வு செய்துகொள்ளப்பட்டது. கர்நாடக அரசு பெங்களூருவினுடைய குடிநீர்த் திட்டத்தை நான்கே ஆண்டுகளில் நிறைவேற்றியது. ஆனால், 1998 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் போடப்பட்டும் இன்றுவரை காலதாமதம் செய்தும், பெரும் செலவுக்கு வழிவகுத்தும் இதில் அக்கறை காட்டாமல், அன்றிருந்த அரசின் காரணமாக தமிழ்நாடு அரசுக்குப் பெரும் நிதிச் சுமை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இதுகுறித்து இந்த அரசு விரிவான விசாரணை நடத்தி பொறுப்பானவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஒரு நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். கடந்த ஆட்சியாளர்கள் அவர்களுடைய மெத்தனப் போக்கினால் பல்வேறு சூழ்நிலைகளில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் நிலுவையில் இருந்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நிலைகளில் பதில் கூறியிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து இந்த அரசு செயல்படுத்தும் என்பதை எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்னால் திட்டமிடப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக்



2011 ஆகஸ்ட் 8]

குடிநீர்த் திட்டத்தில் புதிதாக வளர்ச்சியடைந்த பகுதிகளுக்கும், புதிதாக உருவான ஊர்களுக்கும் இணைப்பு வழங்க, இந்தத் திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா? ஒரு கால வரம்பை நிர்ணயித்து அந்தக் காலக்கட்டத்திற்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்முயற்சிகளை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 முதல் 2006 வரையில் இருந்த கழக அரசு, தமிழ்நாட்டில் எங்கெல்லாம், எந்தெந்தக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி இல்லை என்பதை ஆய்வு செய்து, மொத்தம் 3 முறை அந்த 5 ஆண்டுக் காலத்தில் ஆய்வு செய்து, ஒவ்வொரு முறையும் எத்தனை குடியிருப்புகளுக்குக் குடிநீர் இல்லை என்பதைக் கணக்கெடுத்து, ஒரு காலவரம்பு நிர்ணயித்து அந்தக் காலவரம்பிற்குள் அந்தக் குடியிருப்புகளுக்கெல்லாம் குடிநீர் வசதி செய்து தர வேண்டுமென்ற ஓர் இலக்கையும் வைத்துக்கொண்டு அதனை முழுமையாக நிறைவேற்றியது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான கழக அரசின் பதவிக் காலம் முடிகின்ற தறுவாயில் குடிநீர் வசதி இல்லாத குடியிருப்புக்கள் இல்லை என்ற நிலையைத்தான் உருவாக்கிவிட்டுச் சென்றது. ஆனால், அதன் பின்னர் புதிய புதிய குடியிருப்புகள் உருவாகியிருக்கின்றன. ஆகவே, பொதுவாக 50 குடும்பங்கள் இருக்கின்ற ஓர் இடத்தை ஒரு habitation—ஒரு குடியிருப்பு என்று எடுத்துக்கொண்டு அதற்குக் குடிநீர் வசதி செய்து தருகிறோம். ஆகவே, நாங்கள் ஆட்சிக்கு வந்து, இப்போது இன்னும் 3 மாதங்கள்கூட ஆகவில்லை. இரண்டரை மாதங்கள்தான் ஆகியுள்ளன. எந்தெந்தப் புதிய குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி இல்லை என்று ஆய்வு மேற்கொண்டு விரைவிலேயே அந்தக் குடியிருப்புகளுக்கெல்லாம் குடிநீர் வசதி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 8

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில் தமிழகத்தில் முதல்முறையாக மிகச் சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களுடைய உளப்பூர்வமான பாராட்டுகளை இந்த நல்ல நேரத்திலே பணிவன்போடு உரித்தாக்கிக்கொள்கிறேன். குடிநீரைப் பொறுத்தவரையில், கிராமப்புற மக்களுக்கு 40 லிட்டர் என்றும், பேரூராட்சிப் பகுதி மக்களுக்கு 70 லிட்டர் என்றும், நகராட்சிப் பகுதி மக்களுக்கு 90 லிட்டர் என்றும் இப்போது அளவு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. சில காலம் முன்பு வரை கிராமப்புற மக்களுக்கு 55 லிட்டர் என்கிற அளவில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. சமீபத்தில் மத்திய அரசு அதை மாற்றி அமைத்திருக்கிறது. பொதுவாக கிராமப்புற மக்களுக்குத்தான் அதிகமாக குடி தண்ணீர் வசதி தேவைப்படுகிற சூழ்நிலையில், பேரூராட்சிப் பகுதி மக்களுக்கு வழங்குவதைப்போன்று 70 லிட்டர் குடி தண்ணீர் கிராமப்புறங்களுக்கும் கிடைப்பதற்கு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மத்திய அரசுக்கு எழுதி, அனுமதி பெற்று அந்தப் பணியைச் செய்து கொடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, அந்தத் திட்டத்தின் அடிப்படையில் 40 லிட்டர் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. நீர் வளம் கூடுதலாக இருக்கின்றபட்சத்தில் 70 லிட்டர் என்பதை 90 லிட்டராக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கொடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 8]

**6—**

## தொழிற்சாலை

***109—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில் கறிவேப்பிலை பவுடர் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களது குல தெய்வமாக எங்களை வழி நடத்திச் செல்கிறார்கள். 'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், மீண்டும் தர்மம் வெல்லும்' என்பதை நிரூபித்து (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் பேராதரவைப் பெற்று தமிழகத்தில் மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள எங்கள் குடும்பக் குல தெய்வம், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து வணங்கி எனது பதிலைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மேட்டுப்பாளையம் பகுதியில் கறிவேப்பிலை பவுடர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐக்கிய நாட்டு சபைகளில் அங்கம் வகிக்கும் தலைமை நாடாக விளங்கும் அமெரிக்கத் திருநாட்டினுடைய வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் அவர்கள் நேரில் வந்து வெற்றியைச் சமர்ப்பிக்கிற அளவுக்குப் பெருமை பெற்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை

[2011 ஆகஸ்ட் 8

வணங்கி, இரண்டாவது முறையாக இந்த மாமன்றத்திற்கு என்னை அழைத்து வந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது நன்றியைத் தெரிவித்து, எனக்கு வாக்களித்த மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். மேட்டுப்பாளையம் தொகுதி விவசாயப் பகுதி. இப்பகுதியில் விவசாயிகளின் முக்கியமான விளைபொருட்களாக விளங்குவது கறிவேப்பிலை, வாழை. கறிவேப்பிலைக்கு விலை சீராக இல்லாத காரணத்தினால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். ஆரம்ப காலத்தில் தென்னிந்தியா மற்றும் ஸ்ரீலங்காவில் மட்டும் உணவுப் பொருளாகப் பயன்பட்டு வந்த நிலையில் காலப்போக்கில் இன்று உலகம் முழுவதும் பயன்பாட்டில் உள்ளது. இது உணவுப் பொருளாக மட்டும் இல்லாமல், இதனைப் பதப்படுத்தி பவுடராகச் செய்தால் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய நல்ல வாய்ப்பு உள்ளது. இதனால், சர்க்கரை வியாதி உட்பட பல்வேறு நோய்களைக் கட்டுப்படுத்த முடியும். அபூர்வ மருத்துவ குணம் கொண்ட இந்த கறிவேப்பிலை பவுடர் தொழிற்சாலையை அமைக்கிற பட்சத்தில் உணவுப் பொருளாகவும் மருத்துவப் பொருளாகவும் பயன்படுத்தப்படும் இந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் பகுதிக்குட்பட்ட காரமடை வட்டாரத்தில், சுமார் 1,089 எக்டேர் பரப்பில் கறிவேப்பிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. எக்டேருக்கு சுமார் 25 முதல் 30 மெட்ரிக் டன் வரையில் மகசூல் கிடைக்கிறது. அவை தனியாரால் மொத்தமாகக் கொள்முதல் செய்யப்பட்டு மேட்டுப்பாளையம் உள்ளூர் சந்தை மற்றும் கோவையிலுள்ள சந்தைகளில் விற்பனை செய்யப்படுகிறது. எனவே, மேட்டுப்பாளையம் பகுதியில் கறிவேப்பிலை பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 8]

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் ஏற்கெனவே இயங்கி வந்த, ஆசியாவிலேயே மிகப் பெரிய செயற்கை பட்டு நூல் தொழிற்சாலை South Indian Viscose மற்றும் Ramakrishna Steels, மதராஸ் போர்ஜிங், இராஜலட்சுமி மில் போன்ற தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டு 10,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழந்து இருக்கிறார்கள். இதனைக் கருத்தில்கொண்டு மேட்டுப்பாளையம் தொகுதியிலே அதிகமாக வாழை சாகுபடியாகிற காரணத்தினால், வாழைத் தண்டைப் பயன்படுத்தி. . .

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராஜ், கறிவேப்பிலைக்கும், வாழைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** வாழையைப் பயன்படுத்தி நூல் இழை, ஃபைபர் மற்றும் சணல் ஆகியவற்றைத் தயாரித்து, அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் வாழ்வாதாரத்தைப் பெருக்குகிற வகையிலே அங்கே ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழைக்கும், கறிவேப்பிலைக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கேட்டீர்கள். இருந்தாலும், இது அவர்களுடைய ஆதங்கம். மேட்டுப்பாளையம் பகுதியில் தகுதியுள்ள தொழில் முனைவோர் எவரேனும் தனியாகத் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008-இன்படி முதலீட்டு மானியம் எனத் தகுதியான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மதிப்பில் 15 சதவிதமும், குறைந்த அழுத்த மின் மானியம் என 20 சதவிகிதம் வரையிலும் முதல் 3 ஆண்டுகளுக்குச் சலுகைகள் வழங்கப்படும். மேலும், தொழில் தொடங்க விரும்பும் தொழில் முனைவோருக்கு பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை மானியத்துடன் கடன் உதவி, அதாவது தொழில்

*[2011 ஆகஸ்ட் 8*

*அமையும் இடத்தைப் பொறுத்து அதிகபட்சமாக 35 சதவிகிதம் வரை மற்றும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாய் வரை 15 சதவிகித மானியத்துடன் கடன் உதவியும் பெற்றுத் தர கோயம்புத்தூர் மாவட்டத் தொழில் மையம் வாயிலாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கூற விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கறிவேப்பிலை கேள்வியை கறிவேப்பிலை என்று மட்டும் பார்க்காமல், அது ஒரு "Oleoresins" ஆகப் பார்க்க வேண்டும். இன்றைக்கு என்னுடைய விருதுநகர் தொகுதியிலிருந்து மட்டுமே ரூபாய் 1,200 கோடிக்கு "Oleoresins" ஏற்றுமதியாகிறது. அது மிளகாயிலிருந்து எடுத்து 'Pizza" போன்ற உணவுப்பொருளுக்கு அனுப்புவதாக இருந்தாலும் சரி, கறிவேப்பிலையிலிருந்து எடுத்தாலும் சரி, அதுவும்கூட உணவுப் பொருள்களுக்கு support dish-ஆகத்தான் உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தத் துறையில் தமிழகத்திற்கு ஒரு தலைமை நிலை இருந்தது. இன்று அது குறைந்து வருகிறது. அதனால், எங்கெல்லாம் "Oleoresins" என்ற வகையில் விவசாயத் தொழிலுக்கு வாய்ப்பு இருக்கிறதோ, அங்கெல்லாம்— இது export-oriented ஆக இருக்கக்கூடிய விஷயம்—இதை முதன்மைத் தொழிலாகத் தமிழகத்தில் கொண்டு வர வாய்ப்பு இருக்கிறது. மேட்டுப்பாளையத்திலே கறிவேப்பிலையாக இருக்கலாம்; விருதுநகரிலே மிளகாயாக இருக்கலாம்; மற்ற இடங்களிலும் இருக்கலாம்; இன்றைக்கு கேரளாவிலிருந்தும், ஆந்திராவிலிருந்தும் நம்மைவிட அதிகமாக ஏற்றுமதி செய்கிறார்கள்; இதற்கு ஒரு முன்னுரிமை கொடுத்து இந்தத் தொழில் வளம் பெற அரசு சார்ந்த முதலீடுகளை, தனியார் சார்ந்த முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு ஒரு திட்டம் கொண்டுவர வேண்டும். பத்தாண்டுகளுக்கு முன் உருவாக்கிய இத்துறை சார்ந்த Food Park இயங்காமல் இருக்கிறது. இந்தத் துறைக்காக ஏற்படுத்தப்பட்ட Food Park, அருப்புக்கோட்டை-விருதுநகர் சாலையில் இருக்கிறது. அதையும்கூட கவனித்து இந்தத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.



*2011 ஆகஸ்ட் 8]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து, கறிவேப்பிலை பல்வேறு பொருள்களை, பல்வேறு உணவுப் பொருள்களைத் தயாரிக்க உபயோகப்படுகிறது என்று கூறினார்கள். அதைப் பொறுத்தவரையில், அந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் அல்ல; வேறு எந்தத் தொழிலாக இருந்தாலும், சிறு தொழில்கள் மூலமாகப் பல்வேறு வகைகளில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், நாங்களும் அந்தத் துறையினை வலுப்படுத்தக்கூடிய வகையிலே, மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் பல்வேறு தொழில் முனைவோர்களை வரவழைத்து எந்தத் தொழிலானாலும் ஊக்குவிக்கக்கூடிய வகையிலே, நீங்கள் சொல்லக்கூடிய அந்தக் கறிவேப்பிலை தொழிலுக்கும் தனியார் முன்வருவார்களேயானால் உரிய வகையிலே அரசு அவர்களுக்கு உறுதுணையாக இருந்து நிச்சயமாகப் பயன்படும் என்பதை அன்போடு கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் பகுதியில் கறிவேப்பிலை உற்பத்தி என்பது விவசாயிகளினால் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றது. கறிவேப்பிலை என்பதைக் குழம்பு வைப்பதற்கு மட்டும் பயன்படுத்துவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. மருத்துவ குணம் மிக்க அந்தக் கறிவேப்பிலையை பவுடர் பண்ணி வைத்துக்கொண்டு, காலையில் walking போவதற்கு முன்னால் Diabetic patients இரண்டு ஸ்பூன் பவுடரை பச்சைத் தண்ணீரில் போட்டுக் குடித்துவிட்டு walking போனால், உடம்பில் சர்க்கரை அளவு increase ஆகாது என்பது மருத்துவர்கள் சொன்னது. அதனால் உற்பத்தி அதிகம் ஆகக்கூடிய வகையில், கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் பகுதியில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு Diabetic patients-ஐ காப்பாற்றக்கூடிய முறையிலேயாவது அப்படி ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா எனக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[2011 ஆகஸ்ட் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்தில் கறிவேப்பிலையை ஆதாரமாகக் கொண்டு ஒரு தொழிற்சாலை அமைப்பது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**7—**

## தனி வட்டம்

***965—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிகரற்ற தலைவராக, மூன்றாவது முறையாக, தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவோடு பொறுப்பேற்று, எங்கள் குடும்ப தெய்வமாக, இதய தெய்வமாக, முதல்வராகப் பதவி வகித்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு, கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் முதன்முதலாக, முதல் நாளன்று பதிலளிக்க வாய்ப்புக்கொடுத்த எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் பாதம் பணிந்து முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2011 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடை: திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைப்பது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் இதுபற்றி முடிவெடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தென்கோடியில் ஒரு சிறு கிராமத்தில் பிறந்த என்னை அரசியலில் அறிமுகப்படுத்தி, பெருமை மிக்க இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினராக வாய்ப்பளித்த என் இதய தெய்வமே, புவியாளப் பிறந்த புரட்சிக் கலைஞரே, தரணி ஆளப் பிறந்த தமிழ் மகனே (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் தன்மானத் தலைவரே, கலை உலகைக் காப்பாற்றிய கர்ணரே, வறியவருக்கு வாரி வழங்கும் வள்ளலே, ஏழைகளின் இதயமே, என் வாழ்வின் உதயமே, தங்களை வாழ்த்தி வணங்குகிறேன்.

பெருமை மிக்க இந்தச் சட்டமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தொண்டர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளின் தொண்டர்களுக்கும் எனது அன்பான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு, தனி வட்டம் அமைப்பது பரிசீலனையில் இருக்கிறது என்றால், எந்தக் காலக்கட்டத்திற்குள் அது உருவாக்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-இன்படி ஒரு தனி வட்டம் அமைக்கப்பட வேண்டுமென்றால், 250 சதுர கிலோ மீட்டர் முதல் 2000 சதுர கிலோ மீட்டர் வரை பரப்பளவு இருக்கவேண்டும். மக்கள் தொகையைப் பொறுத்தவரையில், ஒரு இலட்சம் முதல் 5 இலட்சத்து 50 ஆயிரம் வரை இருக்கவேண்டும். அதேபோல், குறைந்த அளவு 30 கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். மாண்புமிகு

[2011 ஆகஸ்ட் 8

உறுப்பினர் கேட்பது, சேரன்மகாதேவி கோட்டத்தில், ராதாபுரம் வட்டத்தில் உள்ளது. திசையன்விளை குறுவட்டத் தலைமையிடமாகவும், ராதாபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்டதாகவும் உள்ளது. திசையன்விளை குறுவட்டத்தில் 8 வருவாய்க் கிராமங்களும், அதன் அருகில் உள்ள வள்ளியூர் குறுவட்டத்தில் கோவன்குளம் கிராமம் மற்றும் சமூகரங்கபுரம் குறுவட்டத்தில் உள்ள கோட்டைக் கருங்குளம் பகுதி 1 மற்றும் 2, நாங்குநேரி வட்டம், விஜய நாராயணபுரம் குறுவட்டத்தில் 8 கிராமங்கள், மூலக்கரைப்பட்டி குறுவட்டத்தில் உள்ள இராமகிருஷ்ணபுரம் ஆகிய கிராமங்கள் திசையன்விளைக்கு அருகில் உள்ளன. எனவே, மேற்கண்ட கிராமங்களை உள்ளடக்கி திசையன்விளை தனி வட்டமாக அமைய வாய்ப்புள்ளது. மாண்புமிகு உறுப்பினர் கோரியவாறு உத்தேசிக்கப்பட்டுள்ள திசையன்விளையைத் தனி வட்டமாகப் பிரிப்பதற்கு அரசாணையில் குறிப்பிட்டுள்ள அளவுகளின்படி 338.64 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகவும், மக்கள் தொகை ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 115 ஆகவும் உள்ளது. திசையன்விளை ராதாபுரத்திலிருந்து 23 கிலோ மீட்டர் தொலைவிலும், நாங்குநேரியிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. ஆனால், கிராமங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், 20 கிராமங்கள் மட்டும்தான் உள்ளன. அதாவது அரசு ஆணையின்படி நிர்ணயிக்கப்பட்ட 30 கிராமங்களைவிடக் குறைவாக இருந்தாலும், பொதுமக்கள் நலன் கருதி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில், திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன்அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அருமையான விளக்கத்தைக் கொடுத்து, எங்களின் நீண்டகால எதிர்பார்ப்பை நிறைவேற்றித் தருவதாக வாக்களித்த அமைச்சர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் எங்கள் தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 8]

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதியில் இருக்கக்கூடிய காளையார்கோவில் நகரம் என்பது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமாகும். வெள்ளையர்களால் முதன்முதலில் பலியிடப்பட்ட உடையணத்தேவர் அரசாண்ட மண். அவர் வீரமரணம் அடைந்த இடமும் காளையார்கோவில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வி திருநெல்வேலி மாவட்டம் சம்பந்தப்பட்டது.

**திரு. சு. குணசேகரன்:** சொல்லிவிடுகிறேன். அதைப்போல மதுரை கோபுரம், பெரிய கோபுரத்தை, கோயிலைக் கட்டி தலைநகரமாகக் கொண்டு மருதுபாண்டியர் வாழ்ந்த மண். முதன்முதலாக சுதந்திரப் போராட்டத்தில் வெள்ளையர்களை எதிர்த்து மனித வெடிகுண்டாகப் பயன்படுத்திய ஒடுக்கப்பட்ட இனத்தைச் சார்ந்த வீரத்தாய் குயிலி பிறந்த மண், காளையார்கோவில். அந்தக் காளையார்கோவிலினுடைய வரலாற்றுப் பெருமைகளைச் சிறப்பிக்கும் விதமாக நமது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் காளையார்கோவிலைத் தனி வட்டமாக அறிவித்து அந்த மக்களுக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று தங்களின் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கும் சம்பந்தம் இல்லாமலிருப்பதால் தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலேயே பொள்ளாச்சி வட்டம் என்பது மிகப் பெரிய வட்டமாகும். நிருவாக நலன் கருதியும், பொதுமக்களுடைய நலன் கருதியும் அந்த வட்டத்தை இரண்டாகப்

பிரித்து கிணத்துக்கடவுவைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய வட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு மீண்டும் சொல்லுகின்றேன். ஏற்கெனவே புத்தாக்கப் பயிற்சியிலேயே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்விகளைத் தயவுசெய்து தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லியிருப்பதைப்போல, இதற்கும் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்க வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில், சுதந்திரம் அடைந்து 64 ஆண்டுகள் ஆகியும் கல்லூரி இல்லாத குறையினைப் போக்கி, ஒரு கல்லூரியைத் தொடங்கி வைத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனக்கு உறுதுணையாக இருந்த திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளரும், நன்னிலம் சட்டப் பேரவை உறுப்பினருமான மாண்புமிகு அண்ணன் காமராஜ் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம் என்பது 29 ஊராட்சிகளையும் ஒரு பேரூராட்சியையும் கொண்ட ஊராட்சி ஒன்றியம் ஆகும். அந்த ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பொதுமக்கள் வட்டாட்சியரைச் சந்திக்க வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 28 கிலோ மீட்டர் தூரம் வந்து திருத்துறைப்பூண்டி நகருக்குத்தான் வரவேண்டிய சூழல் இருக்கிறது. அதனால் பல்வேறு





வேலைப்பளுவின் காரணமாக—ஒரு Certificate வாங்க வேண்டுமென்று சொன்னால்கூட ஒரு நாள் ஆகிறது—அந்த நிலையை மாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கவனிக்கவும். இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### (அ) சுற்றுச்சூழலைப் பாதுகாக்க சிறப்புத் தூய்மைப்படுத்தும் திட்டம் மற்றும் விரிவான திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்துவது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் அனைவரும் சுகாதாரமான சுற்றுச்சூழலில் வசிப்பதை உறுதி செய்வது எனது தலைமையிலான அரசின் முக்கிய நோக்கம் ஆகும். எனவேதான், மேதகு ஆளுநர் உரையில், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும், கிராமப்புறங்களையும், நகர்ப்புறங்களையும் தூய்மைப்படுத்த ஒரு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், 4-8-2011 அன்று, இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட, 2011-2012 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு-செலவு மதிப்பீட்டில், "சென்னையிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மைக்காக ஒரு விரிவான திட்டம் தயாரித்து, கரிம சேமிப்புக்காகக் கிடைக்கப் பெறும் நிதியையும் பயன்படுத்தி, இத்திட்டத்தைச் செயல்படுத்த இவ்வரசு திட்டமிட்டுள்ளது" என்று குறிப்பிட்டிருந்தோம்.

தற்போது, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள சுற்றுச்சூழல் குறித்த ஒட்டுமொத்த நிலையை நேரடியாகத் தெரிந்துகொள்ளும்பொருட்டு, நான் 5-8-2011 அன்று ஹெலிகாப்டரில் சென்று, வான் வழியாக ஆய்வு செய்தேன். அப்போது, பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களையும் பார்வையிட்டேன். இந்த ஆய்வின்போது, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் ஏராளமான குப்பைகள் கொட்டிக் கிடந்தது தெரியவந்தது. மேலும், சென்னை மாநகரைச் சுற்றியுள்ள சில பகுதிகளில், குடியிருப்புகளைச் சுற்றி, மழை நீர் மற்றும் கழிவு நீர் தேங்கியுள்ளதையும் கண்டறிந்தேன். மிகவும் அசுத்தமாக இருந்தது. எனவே, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள மக்கள் சுகாதாரமான சூழலை உடனடியாகப் பெறுவதற்கு ஏதுவாக, முதற்கட்டமாக, தேங்கியுள்ள குப்பைகளை உடனடியாக அகற்றவும், குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியுள்ள அசுத்தமான நீரை அகற்றுவதற்குமான சிறப்புத் தூய்மைப்படுத்தும் திட்டம், அதாவது-Mass Cleaning Programme ஒன்று செயல்படுத்தப்படும். இந்தத் தூய்மைப்படுத்தும் பணிகள், மூன்று மாத காலத்திற்குள் செய்து முடிக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதனைத் தொடர்ந்து, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், 2011-2012 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு-செலவு மதிப்பீட்டில் குறிப்பிட்டவாறு, விரிவான திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10-55*

## (ஆ) காற்றாலைமூலம் பெறப்படும் மின்சாரத்தை உயரழுத்தத் தொழிற்சாலைகளுக்கு வழங்குவது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழகத்தின் மின் நிலைமை, நாளுக்கு நாள் மோசமடைந்து, அனைத்துத் தரப்பு மின் நுகர்வோர்களுக்கும் பல மணி நேர மின் தடை அமலில் இருந்தது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். வீட்டுப் பயனீட்டாளர்களுக்கு, சென்னை மாநகரத்தில் ஒரு மணி நேர மின் தடையும், மாநிலத்தின் பிற பகுதிகளில் மூன்று மணி நேர மின் தடையும், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது இருந்தது என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.





எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றவுடன், மின் நிர்வாகத்தில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக, சென்னை நீங்கலாக, மாநிலத்தின் பிற இடங்களில் இருந்த மூன்று மணி நேர மின் தடை, 1-7-2011 முதல் இரண்டு மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

உயரழுத்தத் தொழிற்சாலை மற்றும் வணிகப் பயனீட்டாளர்களுக்கு தேவை மற்றும் பயனீட்டு அளவில் 20 விழுக்காடு மின் தடை அமலில் இருந்து வந்தது. உச்சகட்ட நுகர்வு நேரமான மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான காலத்தில், அனைத்து உயரழுத்தத் தொழிற்சாலைகளுக்கும் மின் வாரியக் கட்டமைப்பிலிருந்து 10 விழுக்காட்டிற்கு மிகாமல் விளக்கு மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்காக, மின்சாரம் கடந்த 20-8-2010 முதல் வழங்கப்படுகிறது. அதாவது, மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான உச்சகட்ட நுகர்வு நேரத்தில், உயரழுத்தத் தொழிற்சாலைகளுக்கு 90 விழுக்காடு மின் தடை அமல்படுத்தப்பட்டு வந்தது. தற்போதும், உயரழுத்தத் தொழிற்சாலைகள் மற்றும் வணிகப் பயனீட்டாளர்களுக்கு, இந்த மின் கட்டுப்பாட்டு முறைகள் நடைமுறையில் உள்ளன.

காற்றாலைமூலம் பெறப்படும் மின்சாரத்தின் மொத்த உற்பத்தித் திறன், 6,007 மெகா வாட் ஆகும். ஆனால், காற்றாலைமூலம் பெறப்படும் மின்சாரம் எப்போதும் ஒரே அளவில் கிடைப்பதில்லை. காற்று அதிகமாக உள்ள ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில், அதிலும், காற்று அதிகமாக வீசக்கூடிய நேரங்களில், காற்றாலைமூலம் பெறப்படும் மின்சாரம், அதிக அளவில் இருக்கும். இவ்வாறு காற்றாலைமூலம் பெறப்படும் மின்சாரத்தின் அளவு, மின்சாரத் தேவை குறைவாக உள்ள இரவு நேரங்களில்தான் அதிகமாகக் கிடைக்கும். எனவே, பல நேரங்களில் இவ்வாறு கிடைக்கக்கூடிய மின்சாரத்தைப் பயன்படுத்த இயலாமல் போய்விடுவது உண்டு. இதன் காரணமாக, காற்றாலைமூலம் மின்சாரம் தயாரிப்போர், அந்த மின்சாரத்தை, விற்க இயலாத நிலை ஒரு பக்கமும், மின்சாரத் தேவை உள்ளோர் அதனைப் பெற இயலாத சூழ்நிலை ஒரு பக்கமும் நிலவுவது உண்டு. உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைச் சேமித்து வைக்க இயலாது என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். எனவே, மின்சாரத் தேவை குறைவாக உள்ள நேரங்களில் கிடைக்கப் பெறும் அதிக அளவு மின்சாரத்தை, தேவை உள்ளவர்களுக்கு வழங்குவதுதான் சிறந்த மின் நிர்வாகம் ஆகும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஆகஸ்ட் 8

ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் காற்றாலைமூலம் இரவு நேரங்களில் பெறப்படும் அதிக அளவு மின்சாரத்தை, தற்போது பயன்படுத்த எனது தலைமையிலான அரசு ஒரு செயல் திட்டத்தை வகுத்துள்ளது. இதன்படி, காற்றாலைமூலம் இரவு நேரங்களில் பெறப்படும் சுமார் 100 மெகா வாட் மின்சாரம், உயரழுத்தத் தொழிற்சாலைகளுக்கு இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை 20 விழுக்காடு மின் தடையை விலக்கிக் கொண்டு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) காற்றாலைமூலம் இவ்வாறு பெறப்படும் மின்சாரம் முழுவதும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதால், தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இந்த மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்ள இசைவு தெரிவிப்பவர்களுக்கு இது வழங்கப்படும்.

இந்தச் செயல்திட்டம் இன்று, அதாவது 8-8-2011 முதல் நடைமுறைப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் உயரழுத்தத் தொழிற்சாலைகளுக்கு சுமார் 100 மெகா வாட் அளவுக்கு நிவாரணம் கிடைப்பதுடன், காற்றாலைமூலம் மின் உற்பத்தி செய்பவர்கள் அந்த மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்பதன்மூலம் பயன்பெறுவர். மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம், மின் தேவை மற்றும் மின் பயனீட்டு அளவுக் கட்டணமாகச் சுமார் 10 கோடி ரூபாய் வருவாய் ஈட்டும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-00*

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2011

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2011 ஆகஸ்ட் 8] [திரு. செல்லூர் கா. ராஜு]

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011-2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

***திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னை உரையாற்ற வைத்து அழகு பார்க்கும் என் இதய தெய்வம், தமிழகச் சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலைவர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இது நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதம். ஆளுநர் உரையின்மீதான விவாதம் அல்ல.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது என்னைப் பேசவைத்து அழகு பார்த்த என் இதய தெய்வம் என்று சொல்லியிருக்கிறேன். தவறாக நினைக்க வேண்டாம். மாண்புமிகு புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களை வணங்குகிறேன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவரின் வாக்கினை நினைவில் கொண்டுள்ளேன். எனவே, என்னை இந்தப் பேரவையில் 2011-2012 ஆம் ஆண்டு திருத்திய நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் உரையாற்றுவதற்கு அனுமதி அளித்து எனக்கும், நான் சார்ந்து இருக்கின்ற ஈரோடு கிழக்கு தொகுதி பொதுமக்களுக்கும், பெருமையைத் தேடிக் கொடுத்த மாண்புமிகு புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியினைத் தெரிவித்து மீண்டும் அவரை வணங்கி என் உரையைத் துவக்குகிறேன்.

2011-2012 ஆம் ஆண்டு திருத்திய நிதிநிலை அறிக்கையை நானும், நான் சார்ந்திருக்கின்ற தேசிய முற்போக்கு திராவிடக் கழகமும் மிக்க மகிழ்வோடு வரவேற்கின்றோம். ஏனென்றால், என் தலைவர் மாண்புமிகு கேப்டன் அவர்கள், 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் நாள் மதுரையிலே தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் என்கின்ற இயக்கத்தைத் துவக்கியபோது "வறுமையை ஒழிப்பேன்" என்கின்ற கொள்கை முழக்கத்தை முன்வைத்துத்தான் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் என்கின்ற இயக்கத்தை உருவாக்கினார். அந்த உயரிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக 6 ஆண்டுக்காலம் கடுமையாகப் போராடினார். இன்று அமைந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தன்னுடைய நிதிநிலை அறிக்கையில், "தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஒவ்வொரு குடும்பமும் நேரடியாகப் பயன்பெறும் வகையில் வறுமை ஒழிப்புத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும்" என்று சொல்லியிருப்பது எங்கள் தலைவர் மாண்புமிகு கேப்டன் அவர்களின் 6 ஆண்டுக் கால போராட்டத்திற்கும், தன்னுடைய பிறந்த தினத்தை "வறுமை ஒழிப்புத் தினமாக" கடைப்பிடித்தமைக்கும் கிடைத்த அங்கீகாரமாகக் கருதுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)



குறிப்பாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் மற்றும் தோழமைக் கட்சிகளின் கூட்டணியோடு தமிழகச் சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்தபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள திட்டங்களை நிறைவேற்ற நிதி எங்கே இருக்கிறது என்று ஏளனம் பேசினார்கள்; ஏகடியம் செய்தார்கள். ஆனால், இன்று தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் செயல்படுத்துகின்ற வகையிலே, திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் மாதந்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை ரூபாய் ஐநூறிலிருந்து ரூபாய் ஆயிரமாக உயர்த்தியது; ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு ரூபாய் 25 ஆயிரமும், பட்டப் படிப்புப் படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகை ரூபாய் 50 ஆயிரமும், அத்துடன் தாலிக்கு என்று நான்கு கிராம் தங்க நாணயமும் வழங்குவது; மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் ஆயிரத்திலிருந்து இரண்டாயிரமாக உயர்த்தியது; ஊர்க்காவல் படையினருக்குத் தினப் படி ரூபாய் அறுபத்தைந்திலிருந்து ரூபாய் 150 ஆக உயர்த்தியது; வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு 12 ஆயிரம் ஜெர்சி கலப்பினக் கறவை மாடுகள் வழங்குவது; ஒன்றரை இலட்சம் குடும்பங்களுக்கு ஆறு இலட்சம் வெள்ளாடுகள் வழங்குவது அல்லது செம்மறி ஆடுகள் வழங்குவது; மீன்பிடி அல்லாத காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு ரூபாய் 4 ஆயிரம் சிறப்பு உதவித் தொகை வழங்குவது; வன விலங்குகளால் ஏற்படும் மனித உயிர் இழப்புக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை ரூபாய் ஒன்றரை இலட்சத்திலிருந்து ரூபாய் 3 இலட்சமாக உயர்த்தி வழங்கியது;

முற்பகல் 11-05

பொது விநியோகத் திட்டத்தில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், கோதுமை மாவு, மசாலாப் பொட்டலங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து வழங்குவது; சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கு மூன்று சதவிகித வட்டித் தள்ளுபடியில் கடன் வழங்குவது; அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியர்க்கு இரண்டு சீருடைகளும், ஒரு ஜோடி காலணிகளும் இலவசமாக வழங்குவது; அரசு கேபிள் டி.வி.-க்குப் புத்துயிர் கொடுத்து ஒளிபரப்புத் தொடங்குவது: மின்வெட்டு படிப்படியாகக் குறைக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட்

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2011 ஆகஸ்ட் 8

மாதத்திற்குள் தமிழ்நாட்டில் மின்வெட்டு அறவே நீக்கப்படும் என்பது; கிராமங்களில் சூரிய சக்தியில் எரியும் ஒரு இலட்சம் தெரு விளக்குகள் அமைப்பது; சூரிய சக்தியுடன்கூடிய அறுபதாயிரம் பசுமை வீடுகள் கட்டுவது; தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூர் வழியாக கன்னியாகுமரி வரை கிழக்குக் கடற்கரைச் சாலையை மேம்படுத்துவது;

கோயில்களில் ஒரு கால பூஜையை நிரந்தரமாகச் செய்வதற்கு வைப்பீட்டுத் தொகையை ரூபாய் 25,000—இலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தியது; கோயில் அர்ச்சகர்கள், பூசாரிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ரூபாய் 750/—இலிருந்து ரூபாய் 1,000/— ஆக உயர்த்தியது; 10 மற்றும் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்க்கு ரூ.1,500/—உம், 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்க்கு ரூ.2,000/—உம் ஊக்கத் தொகை வழங்குவது; அரசுப் பள்ளிகளில் பயிலும் 11, 12 ஆம் வகுப்பு மற்றும் அரசுக் கல்லூரி மாணவ, மாணவியர்க்கு இலவசமாக Laptop வழங்குவது; ஏழையெளிய பெண்களுக்கு வழங்கப்படும் மகப்பேறு நிதி உதவித் தொகையை ரூ.6,000/—இலிருந்து ரூ.12,000/—ஆக உயர்த்தியது; அரசு விடுதிகளில் தங்கிப் படிக்கும் பள்ளி மாணவ, மாணவியர்க்கு வழங்கப்படும் மாத உணவுப் படியை ரூ.450/—இலிருந்து ரூ.650/— ஆக உயர்த்தியது;

அதுபோல், கல்லூரி மாணவ, மாணவியர்க்கு வழங்கப்படும் மாத உணவுப் படி ரூ.550/-இலிருந்து ரூ.750/-ஆக உயர்த்தியது; பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்கு வழங்கப்படும் ரூ.22,200/-லிருந்து ரூ.50,000/-ஆக உயர்த்தியது;சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த உலமாக்கள் ஓய்வூதியத்தை ரூ.750/-இலிருந்து ரூ.1,000/-ஆக உயர்த்தியது; இலங்கைத் தமிழர்களுக்கான மாதாந்திர உதவித் தொகையை ரூ.400-லிருந்து ரூ.1,000/-ஆக உயர்த்தியது; நெசவாளர்களுக்கான ஓய்வூதியத்தை ரூ.450/-லிருந்து ரூ.1,000/-ஆக உயர்த்தியது போன்ற திட்டங்கள் தமிழக மக்கள் நெடு நாட்களாக எதிர்பார்த்த திட்டங்களாகும். இத்திட்டங்கள் எங்களுக்கும் உகந்த திட்டங்களாகும்.

கடந்த 2006 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தே.மு.தி.க. தனித்துப் போட்டியிட்டபோது மக்களிடத்திலே கொடுக்கப்பட்ட தேர்தல் அறிக்கையிலே இதுபோன்ற திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அறிக்கை வெளியிடப்பட்டது. அதன்பின் கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் எங்கள் தலைவர் மாண்புமிகு கேப்டன் அவர்கள் நடத்திய போராட்டங்களில் உரையாற்றும்போதும், அவர்



2011 ஆகஸ்ட் 8] [திரு. வி.சி. சந்திரகுமார்]

கொடுத்த அறிக்கைகள், பேட்டிகள் என எல்லாவற்றிலும் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளித்திருந்தார். அதை நிறைவேற்ற வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடும், தமிழகத்தில் நடந்து வந்த சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும்; தமிழ்நாட்டை யார் ஆளக்கூடாது என்பதைக் குறிக்கோளாகக் கொண்டும், இன்றைய ஆட்சி தமிழ்நாட்டில் மலர வேண்டுமென்ற ஒரே குறிக்கோளோடும் செயல்பட்டவர் எங்கள் தலைவர் மாண்புமிகு புரட்சி கலைஞர் கேப்டன் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நலத் திட்டங்கள் செயல்படுவதைக் கண்டு நாங்களும் பெருமையடைகிறோம்.

கடந்த ஆட்சியில், சென்னை சங்கமம் என்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சி ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாட்டிலுள்ள பல முக்கியத் தொழில் நிறுவனங்கள் தமிழ் மையம் என்ற தனியார் அமைப்பிற்கு பல கோடி ரூபாயை நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். அவற்றையெல்லாம் விசாரித்து, எதற்காக இந்த நன்கொடைகள் எல்லாம் வழங்கப்பட்டன; இதன்மூலம் யார், யார் ஆதாயம் பெற்றார்கள் என்பதைக் கண்டறிந்து அவர்களின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு மூலம் உருவாக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு Micro Finance என்று சொல்லக்கூடிய தனியார் நிதி நிறுவனங்கள் கடன் கொடுத்து வருகின்றார்கள். அரசினுடைய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தனியார் நிறுவனங்கள் எந்த அனுமதியின்பேரில் கடன் கொடுக்கிறார்கள்? மகளிருக்கு நன்மை செய்வதற்காக இந்தக் கடன் கொடுக்கப்படுவதில்லை. அதற்கு மாறாக, அவர்களை மிரட்டி, உருட்டி, கந்து வட்டி, மீட்டர் வட்டி, நாள் வட்டி, காலதாமத வட்டி என்ற பெயரிலே, கடன் பெற்ற மகளிர் குழுக்களைக் கொடுமைப்படுத்துகின்றனர். இதில் குறிப்பாக பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதனால் பல குடும்பங்களில் கணவன்-மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு பிரிந்து வாழ்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, Micro Finance என்று சொல்லக்கூடிய தனியார் நிதி நிறுவனங்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நில அபகரிப்பு விவகாரத்தில் காவல் துறையில் தனிப் பிரிவை உருவாக்கியதுபோல, இதற்கும் காவல் துறையில் ஒரு தனிப் பிரிவை உருவாக்கினால் பாதிக்கப்பட்ட பெண்கள் பல்லாயிரக்கணக்கில் புகார் அளிப்பார்கள்.

கடந்த ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் L.S.S., சொகுசுப் பேருந்து, தாழ்தளப் பேருந்து, Express, P.P. எனப் பல்வேறு பெயர்களில் பேருந்துகளை இயக்கியும், சென்னை மாநகரில் கலர் கலராக போர்டுகளை வைத்துப் பேருந்துகளை இயக்கியும் பொது மக்களை ஏமாற்றி மறைமுகமாகப் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தினார்கள். அதைச் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை அண்ணாசாலையில் தி.மு.க.-வின் அண்ணா அறிவாலயத்தின் முன்புறத்திலிருந்து தேனாம்பேட்டை சிக்னல் தாண்டி தி.மு.க.-வின் அன்பகம் மற்றும் வோல்டாஸ் பில்டிங் வரை போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமாக உள்ளது. அதைக் குறைத்திட அண்ணா அறிவாலயம் முன்புறம் ஆரம்பித்து, தேனாம்பேட்டை சிக்னல் தாண்டி தி.மு.க.வின் அன்பகம் மற்றும் வோல்டாஸ் பில்டிங் வரை மேம்பாலம் அமைக்கப்பட வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதேபோல அண்ணா அறிவாலயத்திற்குப் பின்புறம் உள்ள ரோடு நேராக வந்து அண்ணா அறிவாலயத்திற்குப் பின்புறம் வந்தவுடன் திசைமாறிச் செல்கிறது. அதன் காரணமாகவும் தேனாம்போட்டை சிக்னல் அருகில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, அந்த ரோட்டை திசை மாறிச் செல்லாமல் நேரடியாக அண்ணா அறிவாலயம் வழியாக வெளியே கொண்டு வந்து அண்ணா சாலையில் இணைக்க வேண்டும். இந்தத் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனி முக்கியத்துவம் கொடுத்து நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அண்ணா அறிவாலயத்தின் முன்புறமுள்ள பூங்காவை அரசு கையகப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-10*

ஏழைப் பெண்களுக்கென அறிவிக்கப்பட்ட திருமண உதவித் திட்டம் படிக்காத பெண்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். ஏனென்றால், கல்வி கற்க வசதியில்லாத காரணத்தினால்தான் அந்தப் பெண்கள் கல்வி கற்காமல் உள்ளார்கள். எனவே, அந்தப் படிப்பை வரைமுறையாக வைத்து உதவித் தொகை பெறுவதற்குத் தகுதி இல்லையென்று நிராகரிப்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தடுத்து நிறுத்தி, அவர்களுக்கும் திருமண உதவித் தொகை வழங்க வேண்டும். ஏனென்றால், உண்மையாகவே வறுமையின் பிடியில் சிக்கி, திருமணம் செய்ய இயலாமல் இருக்கின்ற பெண்கள்





இவர்கள்தான். எனவே, படித்த மற்றும் பட்டப் படிப்புப் படித்த பெண்களுக்கு 25,000 ரூபாய், 50,000 ரூபாய் என வழங்குவதுபோல, படிக்காத பெண்களுக்கும் திருமண உதவித் தொகை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை மாணவ, மாணவிகளுக்கு வழங்கக்கூடிய சைக்கிள்களை எட்டாவது வகுப்பிலேயிருந்து வழங்கினால், சுமார் ஐந்தாண்டுக் காலம் அந்த சைக்கிள்கள் அவர்களுக்குப் பயன்படுவதாக இருக்கும். ஆனால், தற்போது கொடுக்கப்படும் சைக்கிள்கள் இரண்டு ஆண்டுகளிலேயே யாருக்கும் உபயோகமில்லாமல் ஓரங்கட்டி வைக்கப்படுகின்றன. இல்லையென்றால், பழைய சைக்கிள்கள் என்று விற்பனைக்கு வந்துவிடுகின்றன. எனவே, அதைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டினுடைய தொன்மையான வீர விளையாட்டு கபடி விளையாட்டாகும். கபடி வீரர்களுக்கென, வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுத்து ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் கடந்த ஆட்சியில் இரத்து செய்யப்பட்டுவிட்டன. எனவே, கபடி விளையாட்டை தமிழக அரசு ஊக்குவிக்கும் வகையில், வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுத்து, விளையாட்டு வீரர்களுக்கான வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டில், கபடி வீரர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் கடந்த 30 ஆம் தேதி காலையில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரும், தி.மு.க. சட்டமன்றக் குழுத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்படாமலேயே, கைது செய்யப்பட்டுவிட்டதாகக் கூறி தி.மு.க.-வைச் சார்ந்தவர்கள் திடீரென ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதும் சாலை மறியல் செய்தனர். அதன் காரணமாக, வேலைக்குச் செல்கின்ற தொழிலாளர்கள், பள்ளிக்குச் செல்கின்ற மாணவ, மாணவியர் மற்றும் பொது மக்கள் என அனைத்துத் தரப்பினரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். எனவே, இதுபோன்ற போராட்டங்களை அனுமதி இல்லாமல் நடத்துபவர்கள் மீதும், சாலை மறியல் செய்பவர்கள் மீதும் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல் திட்டமிட்டபடி அக்டோபர் மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் மறு சீரமைப்புமூலம்

சீரமைக்கப்படும் என்று ஓர் அறிவிப்பு வெளியானதோடு சரி; ஆனால், இன்று தமிழகத்தில் பல இடங்களில் உள்ளாட்சி அமைப்புகளைச் சீரமைக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. உதாரணத்திற்கு, ஈரோடு ஒன்றியத்தில் 11 பஞ்சாயத்துகள் இருந்தன. அவற்றில், ஈரோடு மாநகராட்சி விரிவாக்கத்தில் 5 பஞ்சாயத்துகள் சென்றுவிட்டன. தற்போது ஈரோடு ஒன்றியம் 6 பஞ்சாயத்துகள் மட்டுமே உள்ள ஒரு சிறிய ஒன்றியமாக உள்ளது. அதுபோல், சென்னிமலை ஒன்றியம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஈரோடு மேற்கு, பெருந்துறை, காங்கேயம் என மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்குள் இடம் பெற்றுள்ளன. இவை போன்றவற்றைச் சீரமைக்க வேண்டும்.

அதேபோல், கடந்த ஆட்சியில் மாநகராட்சி மேயர், ஒன்றியப் பெருந்தலைவர், நகராட்சித் தலைவர், பேரூராட்சித் தலைவர் ஆகிய பதவிகளுக்கு வார்டு உறுப்பினர்களைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டது. தற்போது நடைபெறுவதாக அரசு அறிவித்துள்ள உள்ளாட்சித் தேர்தல் கடந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்ட முறையில் நடத்தப்படுமா அல்லது நேரடியாக பொதுமக்களே தலைவரைத் தேர்வு செய்யும் முறைப்படி நடைபெறுமா எனத் தமிழக மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்டது தெங்குமரஹடா என்கின்ற மலை கிராமம். அந்தக் கிராமம் மிகவும் பின்தங்கியுள்ள கிராமம் ஆகும். பெயரளவில் கோத்தகிரிக்குக் கட்டுப்பட்டு இருந்தாலும், அந்தத் தெங்குமரஹடா கிராம மக்கள் தங்களுடைய அனைத்து வேலைகளுக்கும் ஈரோடு மாவட்டத்திலுள்ள பவானிசாகர், புளியம்பட்டி, சத்தியமங்கலம் ஆகிய ஊர்களுக்குத்தான் வருகிறார்கள். அந்தக் கிராமத்திலிருப்பவர்கள் ஜாதிச் சான்றிதழ் வாங்க வேண்டுமென்றால்கூட, பவானிசாகர், புளியம்பட்டி, மேட்டுப்பாளையம் வழியாக 100 கிலோ மீட்டர் தூரம் சுற்றித்தான் கோத்தகிரி சென்று அதிகாரிகளைச் சந்திக்க வேண்டும். இல்லையென்றால், கால்நடையாகக் காட்டுப் பாதையிலும், மலைப் பாதையிலும் நடந்து கோத்தகிரி சென்று அதிகாரிகளைப் பார்க்க வேண்டும். இவ்வாறு பல நடைமுறைச் சிக்கல்களை அந்தக் கிராமம் சந்தித்து வருகிறது. இதுபோன்ற காரணங்களால், அங்கே இருக்கின்ற பள்ளிக்கு ஆசிரியர்கள் வருவதில்லை. ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு



மருத்துவர்கள் வருவதில்லை. ஏதேனும் ஒரு காரணத்தைச் சொல்லி விடுமுறையில் சென்றுவிடுகிறார்கள். தெங்குமரஹடாவில் இருந்து பவானிசாகர் பகுதிக்கு வரக்கூடிய வனப் பகுதியிலுள்ள சாலைகள் மிகவும் மோசமான நிலையிலுள்ளன. இரண்டு அடி, மூன்று அடி ஆழங்களில் சாலைகளில் குழிகள் உள்ளன. இவற்றையெல்லாம் சீர்படுத்திட, அந்தப் பகுதி மக்களுடைய நெடுநாள் கோரிக்கையான தெங்குமரஹடாவை ஈரோடு மாவட்டத்துடன் சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்க்கின்ற பட்சத்தில் அந்தக் கிராம மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய ஈரோடு கிழக்குத் தொகுதி முழுக்க முழுக்க நகர்ப்புறத்தை உள்ளடக்கிய தொகுதியாகும். கிராமப்புறங்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்களையும், மக்கள் நலத் திட்டங்களையும் அறிவித்துள்ளீர்கள். அந்தத் திட்டங்கள் நகர்ப்புறத்தில் வாழும் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களும் பயன்பெறும் வகையிலே விரிவுபடுத்தப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு ஒருங்கிணைந்த நீதிமன்றம் மூன்று தளங்களைக் கொண்டுள்ளது. அதில் நான்காவதாக ஒரு தளம் கட்டப்பட வேண்டும். இதுவரையிலும் லிஃப்ட் வசதியும் செய்யப்படவில்லை. நீதிமன்றங்களின் அடிப்படைத் தேவையான தளவாடச் சாமான்கள் போதிய அளவில் இல்லாமலும், பழுதடைந்தும் உள்ளன. அவற்றையும் ஏற்படுத்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு அரசு மருத்துவமனை சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும். தற்போது அதில் உள்ள நோயாளிகளை அழைத்துச் செல்லக்கூடிய லிஃப்ட் இரண்டும் பழுதடைந்துள்ளன. அவற்றை உடனடியாகச் சரிசெய்து தரவேண்டும்.

முற்பகல் 11-15

ஈரோடு அரசு மருத்துவமனையில் செவிலியர் மருத்துவக் கல்லூரி ஒன்று துவக்குகின்ற அளவிற்குத் தகுதி இருக்கிறது. அதைப் பயன்படுத்தி செவிலியர் மருத்துவக் கல்லூரியைத் துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோல், ஈரோட்டில் இதுவரையிலும் அரசுக் கல்லூரி இல்லை. எனவே, அரசுக் கலை அறிவியல் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி தொடங்க

வேண்டும். ஈரோடு மாவட்டம் உருவாகி சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாகி உள்ளது. இதுவரையிலும் ஈரோடு மாவட்டத்தில் எந்த ஒரு பல்கலைக்கழகமும் இல்லை. எனவே, புதியதாக ஒரு பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தித் தரவேண்டும்.

ஈரோடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களின் வளர்ச்சிப் பணிகளுக்காக 1980-இல் பெரியார் மாவட்டம் உதயமானபோது, அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால், பெரு நகரங்களைத் தவிர்த்து மற்ற நகரங்களும் அதன் சுற்றுப்புறங்களும் வளர்ச்சியடைய ஏதுவாகவும், அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டியும், பொதுப் பணித் துறையினுடைய கட்டட வட்டம் என்று சொல்லக்கூடிய PWD Building Circle, ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு துவக்கப்பட்டு, கடந்த 30 ஆண்டுகளாக, 2010 ஆம் ஆண்டு வரை ஈரோட்டில் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது.

இக்கட்டட வட்டம் சிறப்பாக இயங்குவதற்குரிய உள்கட்டமைப்பு வசதிகளான அலுவலகக் கட்டடங்கள், கண்காணிப்புப் பொறியாளர்களுக்கான குடியிருப்புகள் ஆகியவற்றைப் பெற்று சிறப்பாகச் செயல்பட்டு வந்த நிலையிலே, போதிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாத கோவைக்கு செம்மொழி மாநாட்டினைக் காரணம் காட்டி அன்றைய ஆட்சியாளர்களால் மாற்றம் செய்யப்பட்டது.

கோவையில், ஏற்கனவே பொதுப் பணித் துறையினுடைய நீர்வள ஆதார அமைப்பின் தலைமைப் பொறியாளர் அலுவலகமும், கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகமும் செயல்பட்டு வந்த நிலையில் பொதுப் பணித் துறையினுடைய கட்டட அமைப்பின் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தைக் கோவைக்கு மாற்றம் செய்தது அதிகாரக் குவிப்பிற்கு வழிவகை செய்கிறது. எனவே, கடந்த ஆட்சியில் மாற்றப்பட்ட கோவையில் இயங்கும் பொதுப் பணித் துறையின் கட்டட வட்டத்தை, அதாவது PWD Building Circle என்று சொல்லக்கூடிய அந்தப் பிரிவினை ஈரோட்டிற்கு மீண்டும் மாற்றம் செய்து தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களையும், எங்களுடைய ஈரோடு பகுதியினுடைய அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோட்டின் மையப் பகுதியில் சுமார் ஒரு ஏக்கருக்கும் மேல் எந்தவிதப் பயன்பாடும் இல்லாத காலியிடமும், அதில் ஒரு சில பழைய காலக் கட்டடங்களும் ஈரோடு மாநகராட்சிக்குச் சொந்தமாக



அதன் கட்டுப்பாட்டில் உள்ள அந்த இடத்தின்மூலம் மிகக் குறைந்த அளவே மாநகராட்சிக்கு வருமானம் வருகிறது. அதற்கு அருகில் உள்ள கட்டடங்கள் தனியாருக்குச் சொந்தமானவை. அதன்மூலம் இலட்சக்கணக்கான ரூபாய் வருமானம் தனியாருக்கு வருகிறது. அப்படி இருக்கின்றபோது மேற்கண்ட இடத்தில் ஜவுளி வணிக வளாகம் கட்டினால், அதன்மூலம் ஈரோடு மாநகராட்சிக்கு மிகப் பெரிய அளவில் வருமானம் வரும். அதேநேரத்தில் வாகனம் நிறுத்துமிடம் அமைகின்றபோது—அந்தச் சுற்றுப் பகுதியிலே வாகனம் நிறுத்துவதற்கு இடமே கிடையாது—அதன் மூலமும் மிகப் பெரிய அளவிலே வருமானத்தை ஈட்ட முடியும். எனவே, ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா அருகில் உள்ள கனி மார்க்கெட்டில் ஜவுளி வணிக வளாகம் உருவாக்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு மாநகராட்சியின் ஒரு எல்லையில் காவிரி ஆறு ஓடுவதுபோல மற்றொரு எல்லையில் சுமார் 7 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பெரும்பள்ளம் ஓடை ஓடுகிறது. 30 ஆண்டுகளுக்கு முன்பு வரை இப்பகுதிவாழ் தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் அந்த ஓடை நீரைக் குளிப்பதற்கும், குடிப்பதற்கும் பயன்படுத்தி வந்தனர். ஆனால், தற்போது முழுக்க முழுக்க கழிவுநீர், சாக்கடை நீர் கலந்து கழிவு நீர் ஓடையாக மாறிவிட்டது. எனவே, சேலத்தில் திருமணிமுத்தாறு எப்படிக் கழிவுகளுடன் இருந்ததை மாற்றி, கால்வாய் அமைத்துச் சரிசெய்து, இன்றைக்குச் சிறப்பாக உள்ளதோ, அதுபோல, ஈரோடு பெரும்பள்ளம் ஓடைப்பகுதியில் ஏழு கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாய் அமைத்து ஈரோடு மாநகரத்தின் நடுவில் உள்ள சுகாதாரமற்ற ஓடைப் பகுதியைத் தூய்மையான பகுதியாக மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், தேர்தல் பிரச்சாரத்திற்காக ஈரோடு மாவட்டம், சித்தோடு பகுதியில் உரையாற்றும்போது ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை மற்றும் எம்.ஜி.ஆர். சிலை அருகில் மேம்பாலம் அமைப்பதாகத் தொகுதி மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளார்கள். ஈரோட்டின் மையப் பகுதியாக உள்ள அரசு மருத்துவமனை அருகில் உள்ள ஐந்து ரோடு சந்திப்பு மிகவும் நெரிசலான பகுதியாக உள்ளது. வாகனங்களில் செல்வோரும், நடந்து செல்வோரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த இடத்தில் ஒரு மேம்பாலம் அமைத்தால் மட்டுமே மேற்படி பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் எனப் பொதுமக்கள் கருதுகிறார்கள். எனவே, இதையும் நிறைவேற்றித் தர வேண்டும்.

ஈரோடு மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு, அதன் வார்டுகளின் உத்தேசப் பட்டியல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஏகப்பட்ட குளறுபடிகள் செய்யப்பட்டுள்ளன. ஈரோடு மாநகராட்சியில் ஈரோடு கிழக்கு, மேற்கு தொகுதிகள் வருகின்றன. இதைத் தொகுதி அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரித்து, அதன் பிறகு அந்தந்தத் தொகுதிகளுக்குட்பட்ட மாநகராட்சிப் பகுதிகளைத் தெருக்கள் வாரியாகக் கணக்கெடுத்து வார்டுகளைப் புதியதாகப் பிரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதியதாக வார்டுகளைப் பிரித்து அமைத்தால் மட்டுமே வளர்ச்சிப் பணிகள் சிறப்பாக இருக்கும். அதை விடுத்து தற்போது பிரித்துள்ளதைப் போல் வார்டுகளை உருவாக்கினால் நிச்சயமாக அதில் பல்வேறு குளறுபடிகளும், மக்கள் நலப்பணிகளைச் செய்வதில் இடையூறுகளும் ஏற்படும்.

ஒருசில பொது வார்டுகளைப் பெண்கள் வார்டுகளாக மாற்றியுள்ளனர். ஒரு சில பொது வார்டுகளைத் தனித் தொகுதி வார்டுகளாக மாற்றியுள்ளனர். ஒரு சில தனித் தொகுதி வார்டுகளைப் பொது வார்டுகளாக மாற்றியுள்ளனர். இதெல்லாம் கடந்த ஆட்சியாளர்களுடைய கைங்கரியத்திலே நடைபெற்றிருக்கிறது. உதாரணத்திற்கு, ஈரோடு நகராட்சியில் பழைய வார்டு எண் 33-இல் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தாழ்த்தப்பட்ட மக்கள் நான்கு பேர் மட்டுமே உள்ளதாகப் பட்டியல் திருத்தப்பட்டுள்ளது. ஆனால், சுமார் 50 ஆண்டுக் காலமாக அந்த வார்டில் ஈரோடு நகராட்சியில் வேலை பார்க்கும் துப்புரவுத் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் சுமார் 1000-க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். எப்படி அந்தத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அங்கு இல்லை என மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் காண்பிக்கப்பட்டதென்பது தெரியவில்லை. கடந்த ஆட்சியில் இருந்தவர்கள் அந்த வார்டில் ஒரு குறிப்பிட்ட நபர் போட்டியிடவே இத்தகைய ஏமாற்று வித்தைகளைச் செய்துள்ளதாக அறிகிறேன். இதைப் போன்று குழப்பங்கள் பல வார்டுகளிலும் உள்ளன.

தற்போது பிரிக்கப்பட்டுள்ள வார்டுகள் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பிரிக்கப்பட்டுள்ளன. ஆனால், தற்போது விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள அனைத்துப் பகுதிகளும் இந்த 10 ஆண்டுக் காலத்தில் மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்றுள்ளன. அதன் காரணமாக மக்கள் நெருக்கம் அதிகமாகியுள்ளது, அதனால் பிரிக்கப்பட்டுள்ள வார்டுகள் வாக்காளர்கள்



அடிப்படையில் பிரிக்கப்படாததால் ஒரு வார்டில் அதிகமான வாக்காளர்களும், ஒரு வார்டில் குறைவான வாக்காளர்களும் இருப்பதைப் போன்ற நிலை உருவாகியுள்ளது. எனவே, தெருக்களின் அடிப்படையிலும், வாக்காளர்களின் அடிப்படையிலும், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியும் வார்டுகளைப் புதியதாகப் பிரித்தால் மட்டுமே (குறுக்கீடு) சரியான வார்டுகளை அமைக்க முடியும்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாநகராட்சியில், ஒரு பகுதியில் கூடுதலான வாக்காளர்களையும், ஒரு பகுதியில் குறைந்த வாக்காளர்களையும் கொண்டு வார்டுகள் பிரிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே பலமுறை ஆய்வு செய்து, பல ஊராட்சிகளை அந்த மாநகராட்சியில் சேர்த்திருக்கின்ற காரணத்தினால் - ஊராட்சிப் பகுதியினுடைய மக்கள் தொகையைப் பார்க்கின்றபோது - population அங்கே குறைவாக இருக்கின்ற காரணத்தால், அங்கு குறைந்த வாக்காளர்களைக் கொண்டு ஒரு வார்டு என்றும், அதிக மக்கள் தொகை உள்ள பகுதிகளை, அந்தப் பகுதியிலே இருக்கின்ற வாக்காளர்களைக் கொண்டு வாக்காளர்கள் அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே சேர்க்கப்பட்டிருக்கின்ற அந்த வார்டுகள், எதிர்காலத்திலே மக்கள் தொகை மிகுந்த பகுதியாக வளரும் என்ற காரணத்தினால், அங்கே குறைந்த வாக்காளர்களை வைத்து, அந்த வார்டுகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** பதிலளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. ஈரோடு மாவட்டத்தில் உள்ள கரும்பு ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் பணத்தை இன்னும் கொடுக்காமல் பல ஆண்டுகளாக இழுத்தடித்து

வருகின்றன. இதன் காரணமாக, விவசாயிகள் அவ்வப்போது ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் என நடத்தி வருகின்றனர். கடந்த ஆட்சியில் செய்த தவறுகள், தற்போது உள்ள அரசுக்குத் தவறான பெயரை உண்டாக்கக்கூடிய நிலையுள்ளது. எனவே, கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையை ஆலை நிருவாகம் உடனே கொடுக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகள், எந்தெந்தப் பகுதிகளிலே சரியாக விவசாயிகளுக்குக் கரும்புப் பணத்தைக் கொடுக்கவில்லையோ, அவற்றையெல்லாம் உடனடியாக வழங்க வேண்டுமென்று அந்த ஆலைகளுக்கெல்லாம் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. அதேபோல, கடந்த ஆண்டு மஞ்சள் விவசாயிகளுக்கு, மஞ்சள் விளைச்சல் அதிக விலையைப் பெற்றுக் கொடுத்தது. ஆனால், இந்த ஆண்டு, கடந்த ஆண்டு மஞ்சள் விற்ற விலையில் பாதி அளவுக்குத்தான் விலை கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது. தற்போது, கடந்த இரண்டு ஆண்டுகளைவிட, அதிக அளவு மஞ்சளை விவசாயிகள் பயிர் செய்துள்ளனர். அதன் காரணமாக, வருகின்ற ஆண்டு இன்னும் மஞ்சள் விலை குறைந்து விடுமோ என்கின்ற அச்சம் விவசாயிகளிடத்தில் ஏற்பட்டுள்ளது. எனவே, அதற்குக் காரணமான, ஆன்-லைன் வர்த்தகம் என்று சொல்லக்கூடிய இடைத்தரகர்களின் வியாபாரத்திலிருந்து மஞ்சள் வியாபாரத்தைத் தடை செய்ய வேண்டும். அதேபோல, விவசாய விளைபொருட்களையும், அத்தியாவசிய உணவுப் பொருட்களையும், அந்த வியாபாரத்திலிருந்து காப்பாற்ற, அதைத் தடை செய்ய, மத்திய அரசை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோட்டில், விசைத்தறித் தொழில், குடிசைத் தொழிலாகப் பல்லாண்டுக் காலமாக நடைபெற்று வருகிறது. கடந்த ஆட்சியின்



அலங்கோலத்தால் கடும் மின் வெட்டைச் சந்தித்து, தொழிலே செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், ஏற்கெனவே கடுமையாகப் பாதிக்கப்பட்ட விசைத்தறியாளர்களின் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல noise pollution என்ற காரணத்தைச் சொல்லி, திடீர் திடீரென்று சமீப காலமாக தொழில் துறை அதிகாரிகளால் மூடப்படுகின்றன. இதனால், சிறு விசைத்தறியாளர்கள் தொழிலே செய்ய முடியாத அவல நிலையில் உள்ளனர். அதை நம்பியுள்ள தொழிலாளர்கள் வேலையிழந்து தங்கள் வாழ்வாதாரத்தைத் தொலைத்து நிற்கின்றனர். இதை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கைத்தறி நெசவாளர்களுக்குத் தற்போது உள்ள விலைவாசி உயர்வினை அடிப்படையாகக் கொண்டு, 30 சதவிகிதம் கூலியை உயர்த்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் தள்ளுபடி மானியத்தை உயர்த்தி, அதில் 10 சதவிகிதம் நேரடியாக நெசவாளர்களுக்குக் கொடுக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்குக் குழுக் காப்பீட்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு 4 சதவிகிதம் நிதியுதவி அளித்து வந்தது. ஆனால், கடந்த ஆட்சியில் 2007 ஆம் ஆண்டு முதல் இது இரத்து செய்யப்பட்டுள்ளது. அதுபோல, ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியில் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆனால், ஒரு வருடமானாலும், அந்தக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் கொடுக்கப்பட வேண்டிய மருத்துவ சிகிச்சைக்குரிய தொகையை கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுப்பதில்லை. இதையெல்லாம் அரசு சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோட்டில், மாவட்டப் பத்திரப் பதிவு அலுவலகம் மற்றும் சார் பதிவாளர் அலுவலகம் என இரண்டு இடங்களில் செயல்படுகிறது. அவற்றிற்குச் சொந்தக் கட்டடம் இல்லாமல், வாடகைக் கட்டடத்தில் சுமார் 50 ஆண்டுக் காலமாக இயங்கி வருகின்றன. மிக அதிக வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய பத்திரப் பதிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லாதது ஏன் எனப் பொதுமக்கள் மத்தியிலே ஒரு கேள்வி எழுந்துள்ளது. எனவே, அரசுப் பத்திரப் பதிவு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடமோ அல்லது அரசுக்குச் சொந்தமான வேறு துறைகளின் சொந்த இடத்திற்கோ மாற்றம் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு கிழக்குத் தொகுதியில் கூட்டுறவு வங்கிகளில் டெபாசிட் செய்தவர்களுக்கு, அதன் முதிர்வு காலம் முடிந்த பின்பும் டெபாசிட்

தொகை திருப்பித் தரப்படாமல் உள்ளது. பல ஆண்டுக் காலமாக அதற்குரிய வட்டியும் தரப்படவில்லை. எனவே, டெபாசிட் செய்தவர்களுக்கு டெபாசிட் தொகையும், அதற்குரிய காலம் வரை வட்டியும் திரும்பக் கிடைத்திட ஆவன செய்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

ஈரோடு மாவட்டத்தில் உள்ள வனப் பகுதியில் வசித்து வரும் பொது மக்கள் அங்கு செல்வதற்குத் தடை செய்யப்படுகிறது. பல ஆண்டுக் காலமாக விவசாயம் செய்து வரும் விவசாயிகள் மகசூலை நகரப் பகுதிக்குக் கொண்டு வருவதற்கும், விவசாயம் செய்யத் தேவையான டிராக்டர் போன்ற வாகனங்களைக் கொண்டு செல்வதற்கும் தடை விதிக்கப்படுகிறது. உதாரணத்திற்கு, சத்தியமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட புதுபீர்கடவு ஊராட்சியிலே பூதிக்குப்பம் என்ற ஊர் உள்ளது. அங்கே, 600 குடும்பத்திற்கும் மேற்பட்டவர்கள் பல ஆண்டுக் காலமாக வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு 1960 ஆம் ஆண்டிலேயே அரசாங்கம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2 ஏக்கர் நிலத்தை விவசாயம் செய்துகொள்ள இலவசமாக வழங்கியுள்ளது. ஆனால், அதில் விவசாயம் செய்வதற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டு, வன விலங்குகளை விரட்டியடிப்பதைப்போல அந்த மக்களை அந்தப் பகுதியிலிருந்து வெளியேற வேண்டுமென்று சொல்லி விரட்டியடிக்கின்றார்கள். இதன்மீது நடவடிக்கை எடுத்து விதிக்கப்பட்ட தடையை நீக்கம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு கிழக்குத் தொகுதிக்கு உட்பட்ட வீரப்பன்சத்திரம் நகராட்சியில் மாரியம்மன் கோவிலுக்குப் பின்புறம் உள்ள இடத்தில் பேருந்துகள் வந்து செல்லும் வகையில் பேருந்து நிலையம் அமைக்க வேண்டும். அந்தப் பகுதியில் அதிக அளவில் ஏழை விசைத்தறித் தொழிலாளர்களும், நடுத்தர வர்க்கத்தினரும் வசித்து வருகின்றனர். அவர்கள் வெளியே செல்வதற்கு இருக்கக்கூடிய ஒரே வசதி பேருந்து வசதி மட்டுமே. எனவே, அவசியம் அந்தப் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், அந்த நகராட்சிப் பகுதியில் தினசரி காய்கறி அங்காடிகள், ஈரோடு-சத்தியமங்கலம் மாநில நெடுஞ்சாலையில் தினசரி நடைபெற்று வருகிறது. எனவே, நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் தினசரி காய்கறி அங்காடிக் கட்டடம் அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



பிராமண பெரிய அக்ரஹாரம் பேரூராட்சியில் சட்டத்திற்குப் புறம்பாக தோல் சந்தை நடைபெற்று வருகிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஏனெனில், அந்தச் சந்தையின் மூலம் தனிநபர்கள் பலன் அடைந்து கொண்டிருக்கின்றார்கள். அதனால், பேரூராட்சிக்கு எந்தவிதமான வருமானமும் இல்லை. எனவே, அரசு தலையிட்டு தோல் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள பிராமண பெரிய அக்ரஹாரம் பேரூராட்சியில் ஒருங்கிணைந்த தோல் சந்தை அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு மாநகராட்சியில் உள்ள சத்தி ரோடு, பெருந்துறை ரோடு, ஈ.வி.என். ரோடு, காவேரி ரோடு ஆகிய நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ரோடுகளில் கடந்த ஆட்சியில் அதிகாரத்தில் இருந்தவர்களின் ஆதரவோடு குறுகிய ரோடுகளில் 4 அடி உயரத்தில் 3 அடி அகலத்தில் ரோடுகளின் நடுவில் சுமார் 10 கி.மீ. தூரம் தடுப்புச்சுவர் அமைக்கப்பட்டு, அதில் ஒளியூட்டும் விளக்குகளுடன்கூடிய சுமார் 1,500 விளம்பர போர்டுகள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் தனியார் நிறுவனங்களிடம் இலட்சக்கணக்கில் பணம் பெற்றுக்கொண்டு, விளம்பரம் செய்ய தனியார் ஏஜென்சிகளுக்கு அனுமதி கொடுத்துள்ளனர். அதன்மூலம் அரசுக்கு எந்த வகையிலும் வருவாய் இல்லை. அதேநேரத்தில் ரோடுகளின் நடுவில் இந்த விளம்பர ஒளியூட்டும் போர்டுகளால் ரோடுகளில் நடந்து செல்பவர்களும், இரு சக்கர வாகனங்களில் செல்பவர்களும் கவனம் திசைமாறி அடிக்கடி விபத்துக்குள்ளாகிறார்கள். எனவே, உடனடியாக ரோட்டின் நடுவில் வருமான நோக்கில் விளம்பரம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ள விளம்பர போர்டுகளை அப்புறப்படுத்த வேண்டும்.

ஈரோடு மாவட்டம், கருங்கல்பாளையம் பகுதியையும், நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் பகுதியையும் இணைக்கும் வகையில் காவிரி ஆற்றின் குறுக்கே இன்னும் ஓர் இணைப்புப் பாலம் வேண்டும் என்று கூறியிருந்தேன். ஈரோட்டின் குடிசை மாற்று வாரியம்மூலம் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிந்துவிழக்கூடிய நிலையில் உள்ளன. அவற்றைச் சீர்செய்ய வேண்டும். மேட்டூரிலிருந்து ஈரோட்டிற்குக் குழாய்மூலம் குடிநீர் கொண்டுவரும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள் பல்வேறு காரணங்களால் பயன்படுத்த முடியாமல் உள்ள சென்னிமலை ரோட்டில் இருந்து பெருந்துறை ரோட்டை இணைக்கின்ற 60 அடி சாலைத் திட்டம்,

ஈரோடு இரயில்வே நுழைவு பாலத்திலிருந்து கச்சேரி வீதியை இணைக்கும் 60 அடி சாலைத் திட்டம், ஈரோடு இரயில் நிலையத்தில் இருந்து பிரஃப் ரோட்டை இணைக்கும் 80 அடி சாலைத் திட்டம் போன்றவற்றை அரசு பரிசீலித்துச் செயல்படுத்த வேண்டும்.

திருப்பூர் சாயக் கழிவுப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் அளித்து ரூபாய் 200 கோடி வட்டியில்லாக் கடனாகக் கொடுத்து அப்பிரச்சினைக்குத் தீர்வு கண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஈரோட்டின் ஜவுளி, சாயம், பிளீச்சிங், தோல் தொழிற்சாலைகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நேரடியாகவும், மறைமுகமாகவும் பலர் பாதிக்கப்படுகின்றனர். சமீப காலமாக ஈரோட்டில் சாயத் தொழிற்சாலைகளும், பிளீச்சிங் பட்டறைகளும், தோல் தொழிற்சாலைகளும் இடிக்கப்பட்டும், இயந்திரங்கள் உடைக்கப்பட்டும் வருகின்றன. மேற்படி ஆலைகள் சீல் வைக்கப்பட்டு முடக்கப்படுகின்றன. எனவே, இதைக் கருத்தில் கொண்டு திருப்பூரைப் போன்று ஈரோட்டிற்கும் ஒரு மாற்றுத் தீர்வு காண, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோட்டில் பேருந்து நிலையம் விரிவாக்கப்பட வேண்டும். ஏனென்றால், 40 ஆண்டுகளுக்கு முன்பு குறைந்த அளவு பேருந்துகள் வந்து செல்லும் வகையில் கட்டப்பட்டது. அதனால் கடும் இட நெருக்கடி ஏற்படுகின்றது. எனவே, 10 ஆண்டுக் காலம் பேருந்து நிலையத்திற்கு அருகில் லாரிகளை நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஈரோடு மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தை, பேருந்து நிலைய விரிவாக்கம் செய்ய பயன்படுத்திக்கொள்ளலாம். இதையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சரி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு வழங்கும் நல உதவிகளெல்லாம் பெறுகின்ற மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்க வேண்டுமென்று அரசு விதி இருக்கின்றது. ஆனால், கடந்த ஆட்சியாளர்களால் தேர்வு செய்யப்பட்டவர்கள் மட்டுமே இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். உண்மையாக வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் பெயர்கள் அப்பட்டியலில் இல்லை. அதனால், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நலத் திட்டங்கள் உரியவர்களுக்குப்



போய்ச் சேர்வதில் மிகப் பெரிய தடை ஏற்பட்டுள்ளது. எனவே, அதை மாற்றியமைத்து உண்மையாக வறுமைக் கோட்டிற்குக் கீழே, யார் யார் இருக்கின்றார்கள் என்பதைக் கண்டறிந்து அவர்களை அப்பட்டியலில் சேர்க்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆட்சியில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் பட்டியல் என்று எதுவும் இல்லையென்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) பிற மாநிலங்களிலெல்லாம் ரேஷன் கார்டுகளுக்குக்கூட அரிசி அல்லது கோதுமை வழங்குவதில்கூட, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு ஒரு விலை, வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு ஒரு விலை என்று நிர்ணயித்து இருவேறு விலைகளில் வழங்குகிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் மட்டும்தான் மொத்தம் உள்ள அத்தனை ரேஷன் கார்டுகளுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எந்தவிதமான பாகுபாடுமின்றி, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் என்று எதையும் குறிப்பிடாமல், வரையறுக்காமல் எல்லோருக்கும் ஒரேவிதமான நீதி வழங்கப்படுகிறது. இப்போது யாருக்குமே விலை இல்லை. எல்லோருக்கும் இலவசமாக அரிசி வழங்கப்படுகிறது. ஆகவே, B.P.L.—Below Poverty Line—இல் வசிக்கும் குடும்பங்கள் என்று மத்திய அரசு ஏதோ ஒரு பட்டியலைத் தயாரித்து வைத்திருக்கிறது. அந்தப் பட்டியலைத் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தமிழக அரசால் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் என்ற பட்டியல் தயாரிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. ஏனென்றால், நான் சொல்வது தமிழ்நாடு முழுவதும் உள்ள எங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் முதியோர் ஓய்வூதியத் தொகை, விதவைகளுக்கான ஓய்வூதியத் தொகை என்று

சொல்லி பல்வேறு திட்டங்களுக்கெல்லாம் பரிந்துரை விண்ணப்பங்களை அனுப்புகின்றபோது அங்கே இருக்கின்ற அதிகாரிகள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் பட்டியலில் பெயர் இல்லை என்று சொல்லி அதைத் திருப்பி அனுப்பியதற்கெல்லாம் முதல்வர் அவர்களுடைய இந்தப் பதிலின் மூலமாக நிச்சயமாக தமிழ்நாட்டில் இருக்கின்ற ஏழை எளியோர்களுக்கு உதவிகள் கிடைக்கும் என்பதை இந்த இடத்திலே நிச்சயித்துக் காண்பித்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எங்கள் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** இதுவரையிலும் எனக்கு ஒரு வாய்ப்பு கொடுத்து, பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்தப் பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற மிகப் பெரிய வாய்ப்பை எனக்குக் கொடுத்து, என்னை இந்தத் தமிழகம் மட்டுமல்ல; உலகம் எங்கும் அறியச் செய்த என்னுடைய தலைவர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கும் நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. அறிவிப்பு

### சட்டமன்றப் பேரவைச் செயலக வளாகத்தில் உறுப்பினர்களுக்கான ஓய்வு அறைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை உறுப்பினர்களின் வசதிக்காகப் பேரவைச் செயலக வளாகத்தில் புதுப் பொலிவுடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆண்கள் ஓய்வு அறை மற்றும் புதுப்பிக்கப்பட்டு மாற்றி அமைக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மகளிர் ஓய்வு அறை ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று தங்கள் திருக்கரங்களால் திறந்து வைத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் இவற்றினைப் பயன்படுத்திக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கின்றேன்.





## 5. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருடைய விழி அசைவில் எங்களுக்கு வீரம் பிறக்கிறதோ, யாருடைய விரல் அசைவில் எங்களுக்கு விவேகம் பிறக்கிறதோ, யாருடைய குரல் அசைவில் எங்களுக்கு மகிழ்ச்சி பிறக்கிறதோ, யாருடைய மன அசைவில் எங்களது கொள்கை நாளும் வளர்கிறதோ, அந்தச் சாதனை விரலுக்குச் சொந்தக்காரர், சரித்திரக் குரலுக்குச் சொந்தக்காரர், வல்லமையோடு வாரி வழங்குகின்ற வான் மேக நெஞ்சம் கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) கள்ளச் சிந்தை கொண்டோரின் பகையைத் துள்ளி எழுந்து, துண்டாடி, தூள் தூளாக்கும் ஆற்றல் படைத்த எங்கள் அம்மா, இந்த நாட்டிலே தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு என்று சிறியதோர் கடுகுபோல உள்ளம் கொண்டு, கடுகுக்கு நேர்மூத்த துவரை உள்ளம் கொண்டு, இன்னும் சொல்லப்போனால், புன்மை உள்ளம் கொண்டு இப்படிக் குறுகிய எண்ணம் கொண்டோரையெல்லாம் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே மரண அடி கொடுத்து, ஓட ஓட விரட்டி, ஈடு இணையில்லா இமாலய வெற்றியைப் பெற்று, தொண்டு உள்ளம், தூய உள்ளம், அன்பு உள்ளம், பெரிய உள்ளம், சேவை உள்ளம், இரக்க உள்ளம் எனத் தமிழ்கூறும் நல்லுலகம் சொல்லுகின்ற, தொல்லுலக மக்கள் எல்லாம் ஒன்றே என்று எண்ணுகின்ற அம்மா! அம்மா! அம்மா! என்று அழைக்கின்ற தாய் உள்ளம் கொண்டு தமிழகத்தை உய்விக்க வந்த அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தாயே, தமிழே, தன்னிகரில்லாத் தலைவியே, ஊனே, உயிரே, ஒப்பில்லா ஓவியமே, நான் தங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே, மருத்துவக் கல்லூரியிலே எங்கோ ஒரு மூலையிலே அம்மாவின் எளிய தொண்டனாய் இருந்த என்னை புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினராக்கி, தற்பொழுது புதுக்கோட்டை மாவட்டத்திலே மயில் கோட்டையாம் முருகப் பெருமான் வீற்றிருக்கும் மலைக் கோட்டையாம், விராலிமலை தொகுதியிலிருந்து அம்மாவின் விழி அசைவால், அம்மாவின் விரல் அசைவால், அம்மாவின் பேரருளால், அம்மாவின்

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2011 ஆகஸ்ட் 8

ஆசியால் இரண்டாம் முறையாக இப்பேரவையிலே உரையாற்ற வாய்ப்புத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் மீண்டும் பணிவோடு வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையைப் படிக்கின்றபொழுது, அந்த அறிக்கையை உற்று நோக்கிச் சுவைக்கின்ற போது, கரும்பைப் போல இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்று எனக்குப் பாராட்ட மனம் வரவில்லை. ஏனென்று சொன்னால், கரும்பிலேகூட அடிக் கரும்பு இனிக்கும், நுனிக் கரும்பிலே இனிப்பின் சுவை கொஞ்சம் குறையும் என்பார்கள். ஆகையினாலே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபோது, எந்தப் பக்கம் கடித்தாலும் ஒரே மாதிரி இருக்கின்ற வெல்லக் கட்டியாக இருக்கிறது நம்முடைய நிதிநிலை அறிக்கை என்று சொன்னால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், 100 மாதங்களிலே செய்ய வேண்டிய திட்டங்களை, 100 மாதங்களிலே அளிக்க வேண்டிய சலுகைகளை, 100 மாதங்களிலே செய்ய வேண்டிய பணிகளை இன்றைக்கு நூறே நாட்களிலே செய்து சாதனைப் படைத்திருக்கிறது நம்முடைய அம்மா அரசு என்று சொன்னால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே இந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு அம்மா அரசு தயாரித்துள்ளது என்பதை நாம் எண்ணுகின்றபோது கொஞ்சம் வியப்பாகவும், மலைப்பாகவும் இருக்கின்றது. ஏனென்று சொன்னால், கடந்த ஆட்சியாளர்களால் சிதைக்கப்பட்ட, சீரழிக்கப்பட்ட நிதி ஆதாரங்களைச் சீர்படுத்துகின்ற, செம்மைப்படுத்துகின்ற சவால்கள் ஒருபுறம்; இந்தத் தமிழ் மக்களுடைய மகிழ்ச்சிக்கும், தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கேற்ப வளர்ச்சித் திட்டங்களை வகுத்து, வெற்றிப்பாதையிலே தமிழகத்தை நெ.1-ஆக வழி நடத்திச் செல்கின்ற கடமை ஒருபுறம்; கழகத்தினுடைய தேர்தல் அறிக்கைமூலம் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை எள்ளளவு அல்ல, எள் முனையளவும் குறையாது நிறைவேற்றுகின்ற சவால்கள் ஒருபுறம்; ஆக இப்படி இந்த முப்பரிமாணங்களையும் தன்னுடைய எண்ணத்திலே நிறுத்திக்கொண்டு சிலை வடிக்கின்ற ஒரு சிற்பியைப்போல, இன்னும் சொல்லப்போனால், ஒரு சிற்பி



2011 ஆகஸ்ட் 8] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

சிலையை வடிக்கின்றபோது அந்தச் சிலையினுடைய கண்களைத் திறக்கின்றபோது எவ்வளவு கவனத்தோடு செயல்படுவாரோ அப்படி ஒரு கவனமுள்ள ஒரு முதலமைச்சரின் தலைமையின்கீழ் இந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய அரசு தயாரித்திருக்கிறது என்று சொன்னால், இப்படிப்பட்ட ஒரு கவனமுள்ள முதலமைச்சர் இந்தியாவில் வேறு யாரும் அல்ல; இந்தியாவைக் கடந்தும் யாரும் அல்ல, அது நம் அம்மா அவர்கள் மட்டும்தான் என்பதை நான் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முறையாக நம்முடைய மாநில வரவு-செலவுத் திட்டத்தினுடைய அளவு சுமார் ஒரு இலட்சம் கோடி ரூபாயை விஞ்சும் வரலாற்றுச் சாதனையைத் தொலைநோக்குப் பார்வைகொண்ட நம்முடைய அரசு நிகழ்த்திக் காட்டியிருக்கிறது என்பதையும் இந்த அவையில் நான் பணிவோடு பதிவுசெய்ய விரும்புகின்றேன். ஏறத்தாழ ரூ.8,900 கோடிக்குப் புதிய திட்டங்களையும், புதிய சலுகைகளையும் மக்களுக்கு அறிவித்திருந்தபோதிலும், மக்களுக்கு வாரி வழங்கிய போதிலும், கடந்த ஆண்டு ஏற்பட்ட 2,720 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்கி, 2011-2012 ஆம் ஆண்டில் சுமார் 173.87 கோடி ரூபாய் வருவாய் உபரி ஏற்படக்கூடிய, Revenue Surplus ஏற்படக்கூடிய வகையிலே வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளதை இன்றைக்கு ஆன்றோர்கள் பாராட்டிக் கொண்டு இருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை பத்தி எண் 18-இல் குறிப்பிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரையில், கடந்த 2007-2008 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட 9 விழுக்காடு வளர்ச்சியை எட்ட முடியாமல் 7.80 விழுக்காடு மட்டுமே எட்ட முடிந்தது என்றும், ஆனால், தற்போது முதன்மைத் துறை, உற்பத்தித் துறை ஆகியவற்றின்மூலமாக கணிசமான ஒரு வளர்ச்சியை எட்டவும், திட்டப் பணிகளைச் செம்மையாகவும், சீராகவும் செயல்படுத்தி, வரும் ஆண்டுகளில் பத்து விழுக்காட்டிற்கும் மேலாக ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சி-Economic Development-ஐ அடைய வழிவகைகள் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள நம்பிக்கை, இன்றைக்குப் பொருளாதார நிபுணர்களுடைய வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. எனினும், கடன் சுமை அதாவது

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2011 ஆகஸ்ட் 8

GSDP 13-வது நிதிக் குழு நிர்ணயம் செய்த அளவான 24.50 விழுக்காட்டிற்குக் குறைவாக, அதாவது 20.39 விழுக்காடு என்ற அளவில்தான் அந்தக் கடன் சுமை உற்பத்தியில் உள்ளது என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இப்படி கவனமாகக் கையாண்டுள்ள நிதிநிலை அறிக்கையைப் பற்றி— "காமாலைக் கண்களுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாக இருக்கும்" என்று சொல்வார்கள்; அதுபோல், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் வீணாக இந்த பட்ஜெட்டைப் பற்றி—கொஞ்சம் விமர்சனம் செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு சிறிய உதாரணத்தை இங்கே உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். ஏறத்தாழ நான்கு குருடர்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு யானை எப்படி இருக்கும் என்பதைப் பார்த்து வரலாம் என்று சென்றார்களாம். நான்கு குருடர்களும் இணைந்து யானையின் அருகில் சென்றிருக்கிறார்கள். அதில் ஒரு குருடன் முதலில் யானையினுடைய காதைப் பிடித்துப் பார்த்து, "இந்த யானை முறம் போல் இருக்கிறது" என்று சொன்னானாம். மற்றொருவன், யானையினுடைய உடம்பைத் தடவிப்பார்த்து, "இல்லை; இந்த யானை என்பது சுவர்போல் இருக்கிறது" என்று சொன்னானாம். மூன்றாவது குருடன், அந்த யானையினுடைய காலைப் பிடித்துப் பார்த்து "இல்லை, இல்லை; யானை என்பது தூண் போல் இருக்கிறது" என்று சொன்னானாம். நான்காவது குருடன், அந்த யானையினுடைய வாலைப் பிடித்துப் பார்த்து, "இல்லை, இல்லை; இந்த யானை என்பது ஒரு கயிறுபோல் இருக்கிறது" என்று சொன்னானாம். அப்படி, கண் இருந்தும் குருடராக, காது இருந்தும் செவிடராக உள்ளவர்களை இன்றைக்கு மக்கள் தூக்கி எறிந்துவிட்ட வரலாறு, இந்தச் சட்டமன்றத் தேர்தலில் நடந்திருக்கின்றது. எதிர்க் கட்சி வரிசையில் அமர்ந்து குறை சொல்லும் தகுதிகூட அவர்களுக்கு இல்லை என்று வெளியில் நிற்க வைத்து, இருக்கைக்காக இடம் தேடி அலைந்து திரிகின்ற ஒரு அவல நிலையினை இன்றைக்கு மக்கள் அவர்களுக்குப் பாடமாகப் புகட்டியுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவர்களெல்லாம் விழலுக்கு நீர் ஊற்றும் விளைச்சல் தெரியாதவர்கள், விழலுக்கு நீர் ஊற்றிப் பழக்கப்பட்டவர்கள், புழல்



2011 ஆகஸ்ட் 8] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

சிறையைப் புகலிடமாக்க நினைப்பவர்கள். ஆகையினால் அவர்களுடைய கருத்துகளுக்கு நாம் மதிப்பளிக்கத் தேவையில்லை என்பதை இந்த நேரத்திலே நான் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை உற்று நோக்குகின்றபோது, பொருளாதார மேதைகள் உற்று நோக்குகின்றபோது ஒரு பொருளாதார மேம்பாடு என்பது, சேவைத் துறையின் மூலமாக மட்டுமே உந்தப்படுகின்றது என்பது அறியப்படுகிறது. சேவைத் துறையினுடைய அதிக வளர்ச்சியைப் பெற, ஒன்று முதன்மைத் துறை, மற்றொன்று தொழில் துறை ஆகியவற்றில் கணிசமான வளர்ச்சியை எட்ட வேண்டும் என்பதுதான் பொருளாதாரக் கோட்பாடு. அப்படிப் பெறக்கூடிய வளர்ச்சிதான் நிலைத்த வளர்ச்சியாகவும், நீடித்த வளர்ச்சியாகவும் sustainable growth என்று சொல்கிறோமே, அப்படி நிலைத்த வளர்ச்சியாகவும், நீடித்த வளர்ச்சியாகவும் இருக்கும். பொருளாதார வல்லுநர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை உற்று நோக்குகின்றபோது, முதன்மைத் துறைகளான விவசாயத் துறை, கால்நடைத் துறை, மீன் வளத் துறை, பாசனத் துறை, வனத் துறை போன்ற துறைகளிலே ஏறத்தாழ தொலைநோக்குப் பார்வையிலே திட்டங்களை அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள் நம்முடைய அம்மா அவர்கள் என்பது தெரிய வருகிறது.

தொழில் துறையிலே வளர்ச்சியை எட்டுவதற்கு மின் சக்தித் துறையிலேயும், infrastructure என்று சொல்லக்கூடிய கட்டுமானத் துறையிலேயும், தகவல் தொழில்நுட்பத் துறையிலேயும் இந்த அரசினுடைய தொலைநோக்குப் பார்வை, இந்த vision இன்றைக்கு விரிந்து கொண்டே செல்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த அறிக்கையை அலசி ஆராய்ந்து உற்று நோக்குகிறபோது, விவசாயத் துறையிலே வளர்ச்சியை எட்ட வேண்டும் என்பதை முதல் அடித்தளமாக வைத்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. மேட்டூரிலே முன்னதாகவே அணை திறக்கப்பட்டு, 2011-2012-இலே உணவு உற்பத்தி 115 இலட்சம் மெட்ரிக் டன் என்ற இலக்கினை இன்றைக்கு நிர்ணயித்துள்ள செயல்; விவசாயிகளுடைய தனி நபர் வருமானத்தை இரண்டு அல்லது மூன்று மடங்காக உயர்த்திட உறுதி கொண்டு, இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டுள்ள முறை; அதைத் தாண்டி திருந்திய நெல் சாகுபடித்

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2011 ஆகஸ்ட் 8

திட்டம்; நவீன முறையிலே கரும்பு உற்பத்தித் திறனை உயர்த்துகின்ற செயல்; பி.டி. பருத்தி பரவலாக்குதல், அடர் நடவு முறை, துல்லிய பண்ணையம், பசுமைக் குடில் போன்ற புரட்சிகரமான திட்டங்கள்; அதுமட்டுமல்லாமல், வட்டியில்லா பயிர்க் கடன் 3 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்படும் என்ற (மேசையைத் தட்டும் ஒலி) உயர்ந்த இலக்கை நிர்ணயித்த வரலாறு; அதுமட்டுமல்லாமல் 1,25,000 ஏக்கர் பரப்பளவிலே நுண்ணீர்ப் பாசன முறை; இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது, பாடினாரே,

“என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய்ப் பாடுபடு வயற்காட்டில்
உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்”

என்று இந்த வரிகளுக்கேற்ப, விவசாயப் புரட்சிக்கு வித்திட்டுள்ள நிதிநிலை அறிக்கையை இன்றைக்கு வேளாண் துறை வல்லுநர்களும், வேளாண் வித்தகர்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல; இதே முதன்மைத் துறைகளிலே ஒன்றான கால்நடைத் துறையை எடுத்துக்கொண்டோமேயானால், கால்நடைத் துறையிலே பால் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய ஒரு வெண்மைப் புரட்சி; 60,000 கறவை மாடுகள் இலவசம் என்ற ஒரு மாபெரும் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) 155 நடமாடும் கால்நடை மருத்துவ மையங்கள், 355 கால்நடை துணை மையங்களை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துகின்ற அற்புதத் திட்டங்கள், ஓசூரிலே உலகத் தரம் வாய்ந்த கோழி வளர்ப்பு மற்றும் மேலாண்மை மையம், ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு தலா ரூ.12 ஆயிரம் மதிப்புள்ள ஆடுகள் இலவசம், பருத்தித் தீவன உற்பத்தித் திட்டம் என்று திட்டங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

அதேபோல, இதே முதன்மைத் துறைகளிலே உள்ள மீன் வளத் துறையைப்பற்றி பாடியிருக்கிறாரே புரட்சித் தலைவர், “வெள்ளி நிலாவே விளக்காய் எரியும், கடல்தான் எங்கள் வீடு” என்று வாழும் மீனவர் குடும்பங்களிலே விளக்கேற்றுகின்ற வண்ணமாக மீன் வளத் துறையிலே 500 புதிய மின்விசைப் படகுகள் (deep sea tuna liners) என்று சொல்லக்கூடிய ஆழ்கடல் சூரை மீன்பிடி தூண்டில் படகுகள் மானியமாக ஒவ்வொருவருக்கும் 5 இலட்சம் ரூபாய் எனப் புதிய திட்டங்கள், 13 நகரங்களில் மீன் பதப்படுத்தும்



2011 ஆகஸ்ட் 8] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

பூங்காக்கள், மீனவர்களுக்கான உதவித் தொகையை உயர்த்தி வழங்குதல் போன்ற அற்புதமான திட்டங்களை தொலைநோக்குப் பார்வையோடு அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்து, முதன்மைத் துறைகளிலே ஒன்றான பாசனம் மற்றும் வெள்ளத் தடுப்புத் திட்டத்தின்கீழ், “Dam Rehabilitation and Improvement Project” என்று சொல்லக்கூடிய அணைக்கட்டு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.745.49 கோடி மதிப்பிலே 104 அணைகள் புனரமைக்கப்படும் என்கிற அருமையான, வரவேற்பான திட்டம்.

நதிநீர் இணைப்பு என்பதை நம்முடைய அரசு, இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசு முதன்மையாகக் கையிலே எடுத்திருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாக இந்த பட்ஜெட்டிலே அறுதியிட்டுக் கூறப்பட்டிருக்கிறது.

கட்டளைக் கதவணையை குண்டாறு ஆற்றுடன் இணைக்கின்ற பணி தொடங்கும் என்ற அறிவிப்பு, பல ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருந்த நதிநீர் இணைப்பு, நதிநீர் இணைப்பு என்ற கோரிக்கைக்கு வலுவூட்டக்கூடிய, அந்தக் கோரிக்கைக்கு நம்பிக்கை கொடுக்கக்கூடிய அறிவிப்பாக இந்த பட்ஜெட்டிலே நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். முதற் கட்டப் பணிக்கு ரூ.3,787 கோடி, இரண்டாம் கட்டப் பணிக்கு ரூ.1,379 கோடி, வெள்ளத் தடுப்புப் பணிக்காக ரூ.5,161 கோடி ரூபாய் என மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்படும் என்று சொன்னாலும், மத்திய அரசினுடைய உதவிக்குக் காத்திராமல் மாநில அரசே இந்தப் பணியை உடனடியாகத் தொடங்க 60 கோடி ரூபாய் ஒதுக்கியதிலிருந்து (மேசையைத் தட்டும் ஒலி) நதியின் வேகத்தைவிட எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மிக வேகமாகச் செயல்படுகிறது என்பதை இன்றைக்கு ஆன்றோர்களும், சான்றோர்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-45

முதன்மைத் துறை மட்டுமல்லாது, இந்தச் சேவைத் துறைக்கு உதவுகின்ற தொழில் துறையிலே வளர்ச்சியை எட்டுவதற்கு புதிய தொழிற் கொள்கை 2011-ஐ உருவாக்குதல்; ஆளுநர் உரையில் அறிவித்தவாறு 2025 தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரித்தல்; தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தை உருவாக்குதல்;

புதிய நில எடுப்புக் கொள்கைமூலம் தொழிற் பூங்காக்களை உருவாக்குதல்; சிமென்ட் உற்பத்தியை 5 இலட்சம் டன்னிலிருந்து 15 இலட்சம் டன்னாக உயர்த்த நடவடிக்கை; இவை மட்டுமின்றி, திறன் வளர்ப்பு, வேலைவாய்ப்பு, தொழில் முனைவோருக்கான மேம்பாடு ஆகியவற்றில் நம் அரசினுடைய தொலைநோக்குத் திட்டங்களையெல்லாம் உற்று நோக்குகின்றபோது "Leadership is action; not position" என்று அறிஞர் Donald சொன்ன வைர வரிகள்தான் என்னுடைய நினைவிற்கு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு மதிப்பும் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் மிக்க நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுவதற்கு இன்றைக்கு சிலருக்கு மனமில்லை. பாராட்டுவதற்கு அவர்களுக்கு மனமில்லை. காரணம் என்னவென்று சொன்னால், பாகிஸ்தான் ஒருபோதும் பாரதத்தைப் பாராட்டப் போவதில்லை. பயிர்களைப் பாராட்டி களைகள் ஒருபோதும் கைகொடுப்பதில்லை. R.D.X. ஒருபோதும் அகிம்சையைப் பாராட்டியதில்லை. திருடர்கள் ஒருபோதும் போலீசைப் பாராட்டியதில்லை. ஆகையினாலே, இவர்களும் அப்படித்தான் என்ற கருத்தை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்று சொல்வார்கள். இன்றைக்கு அந்த உயரிய கொள்கைக்கேற்ப உணவு மானியத்திற்கு ரூபாய் 4,500 கோடி, இலவச மிக்சி, கிரைண்டர், ஃபேன் வழங்குவதற்கு ரூபாய் 1,250 கோடி, சத்துணவுத் திட்டத்திற்கு ரூபாய் 1,246 கோடி, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களுக்கு ரூபாய் 2,842 கோடி, மின்சார வாரியத்திற்கு ரூபாய் 2,196 கோடி, பள்ளி மாணவ மாணவியர் மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கு இலவசமாக மடிக் கணினி—Laptop—வழங்கிட ரூபாய் 912 கோடி, சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்கு ரூபாய் 1,851 கோடி, போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூபாய் 304 கோடி, ஆயிரம் கிராமங்களிலே சூரிய சக்தி தெருவிளக்குகள் அமைத்திட ரூபாய் 248 கோடி, 60,000 பசுமை வீடுகள் கட்ட ரூபாய் 180 கோடி. மகப்பேறு மருத்துவத் திட்டத்திற்கு ரூபாய் 596 கோடி, ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் மகப்பேறு சேவை புரிய கூடுதலாக 3 செவிலியர்கள் நியமனம், ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துகின்ற "Upgradation of hospitals" என்ற அற்புதமான திட்டம், "Blood Storage Centre" என்ற இரத்த சேமிப்பு மையங்கள், N.R.H.M. என்னும் தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழே பல ஆயிரம் கோடி ரூபாய் . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசுமைக் குடில் திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1,080 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் 180 கோடி ரூபாய் என்று சொன்னார். 1,080 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** அதேபோல 75 சிறிய நகரங்களிலே நகர்ப்புற சுகாதார நிலையங்கள் "Hospital on wheels" என்று சொல்லக்கூடிய நடமாடும் மருத்துவமனை என்ற புதிய திட்டம். தொலைதூரக் கிராம மக்களுக்கு இதுவரை எட்டாக் கனியாக இருந்து வந்த மருத்துவ சேவை, இனி உள்ளங்கை நெல்லிக்கனியாக ஆகிவிடும் அற்புதமான திட்டங்கள். முதலமைச்சர் அம்மா அவர்களின் விரிவான பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் - ஆண்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 4 ஆண்டுகளுக்கு 4 இலட்சம் ரூபாய் தேவையென்றால் ஒரு இலட்சம் ரூபாயை நீட்டிக்கின்ற வசதியுடன் கூடிய அருமையான திட்டம். பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என்று இன்றைக்குத் திட்டங்களின் குவியலாக நம்முடைய நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்பதை நான் இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகின்றேன்.

நபிகள் நாயகம் ஒருமுறை தன்னுடைய சீடர்களைப் பார்த்து இந்த உலகத்திலே வலிமையானது எது என்று கேட்டார். உடனே, ஒரு சீடன் சொன்னான்; இந்த உலகத்திலே வலிமையானது மலை என்று சொன்னான். உடனே இன்னொரு சீடன் சொன்னான். இல்லை, இல்லை. அந்த மலையை உடைக்கக்கூடிய ஆற்றல் படைத்தது உளி என்று சொன்னான். ஆகையினாலே, இரும்புதான் இந்த உலகத்திலே வலிமையானது என்று சொன்னான். உடனே மற்றொரு சீடன் சொன்னான்; இல்லை, இல்லை. இரும்பு அல்ல, இந்த இரும்பை உருக்கக்கூடிய ஆற்றல் படைத்தது நெருப்பு.

ஆகையினாலே, இந்த உலகத்திலே வலிமையானது நெருப்பு என்று சொன்னான். இன்னொரு சீடன் சொன்னான்; நெருப்பையே அணைக்கக்கூடிய ஆற்றல் நீருக்கு உள்ளது. ஆகையினாலே, இந்த உலகத்திலே வலிமையானது நீர் என்று சொன்னான். இன்னொரு சீடன் சொன்னான்; நீரல்ல, நீரையே அசைத்து அலைகளாக மாற்றக்கூடிய ஆற்றல் படைத்தது காற்று. ஆகையினாலே, இந்த உலகத்திலே வலிமையானது காற்று என்று சொன்னான். இறுதியிலே, நபிகள் நாயகம் சொன்னார்; "அன்புச் சீடர்களே, நான் பொறுமையோடு சொல்கிறேன். இந்த உலகத்திலே வலிமையானது மலையுமல்ல; மலையை உடைக்கின்ற இரும்புமல்ல; இரும்பை உருக்குகின்ற நெருப்புமல்ல; நெருப்பை அணைக்கின்ற நீருமல்ல; நீரை அசைக்கின்ற காற்றுமல்ல. இந்த உலகத்திலே வலிமையானது என்பது, இடக் கைக்குத் தெரியாமல் வலக் கையாலே கொடுத்து உதவுகின்ற உதவும் கரங்கள்தான் இந்த உலகத்திலே வலிமையானது" என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட உதவுகின்ற கரங்களை, கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்களைக் கொண்ட ஒரே தலைவி இந்தியாவிலே ஒருவர் இருக்கிறார் என்றால், அது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் என்பதை இந்த அவையிலே நான் பதிய வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) "பரிதாபப்படும் இதயத்தைவிட உதவும் கரங்களே உன்னதமானவை" என்று அன்னை தெரசா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆக, அன்னை தெரசா சொன்ன அந்த உதவும் கரங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் வீட்டைக் கொடுத்த அந்த உதவும் கரங்கள், நபிகள் நாயகம் சொன்ன உதவும் கரங்கள்தான் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உதவும் கரங்களாக மாறி இன்றைக்கு 8,900 கோடி ரூபாய் திட்டங்களை இந்த நாட்டு மக்களுக்காக அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் விரிவாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஒரு நாட்டினுடைய முதுகெலும்பு கல்வி என்பதை உணர்ந்து, கல்வி கற்கக்கூடிய ஒரு மாணவனுக்கு அல்லது கல்வி கற்கக்கூடிய ஒரு மாணவிக்கு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்னென்ன பணிகளையெல்லாம் செய்திருக்கின்றது என்று எண்ணிப் பார்க்கின்றபொழுது, சாதாரணமாக பள்ளிக்கூடத்திற்குச்



செல்லக்கூடிய ஒரு மாணவனுக்கு, ஒரு நல்ல பள்ளிக்கூடத்தை இன்றைக்கு இந்த அரசு நிர்மாணித்து இருக்கிறது. பள்ளிக்கூடத்தின் நிலையை உயர்த்தி இருக்கின்றது. நல்ல பள்ளிக்கூடங்களைக் கட்டிக் கொடுத்திருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், பள்ளிக்கூடத்திற்குச் செல்லக்கூடிய மாணவனுக்கு ஏற்கெனவே அம்மா அவர்கள் சைக்கிள் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அம்மா அவர்கள் பஸ் பாஸ் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது, இந்த ஆண்டு 2 செட் சீருடை; அதுவும் 6ஆம் வகுப்பு படிக்கும் மாணவனுக்கு பேன்ட், 6ஆம் வகுப்பு படிக்கும் மாணவிக்கு சல்வார் கமீஸ். அடுத்த ஆண்டு நான்கு செட் சீருடைகள். அதுமட்டுமல்லாமல், பள்ளிக்கூடத்திற்குச் செல்கின்ற குழந்தைகளுக்கு, இரண்டு ஜோடி காலணிகள் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பு. பள்ளிக்கூடத்திற்குச் சென்றதற்குப் பின்னாலே மதியம் அந்த மாணவர்களுக்கு சத்துணவு. இன்னும் சொல்லப்போனால், விடுதியிலே தங்கக்கூடிய மாணவர்களுக்கு நல்ல விடுதி வசதி. அந்த விடுதிக்குச் சொந்தக் கட்டடம். அந்தச் சொந்தக் கட்டடத்திலே படிக்கக்கூடிய ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற உதவித் தொகை 200 ரூபாய் அதிகரிப்பு. இவை எல்லாவற்றையும்விட, மடியிலே தூக்கிச் செல்வதற்கு, பிளஸ் 2 மாணவர்களுக்கு, அரசுப் பள்ளியிலோ அல்லது அரசு உதவிப்பெறும் பள்ளியிலோ படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மடிக் கணினி. இதையும் தாண்டி, இவ்வளவு சலுகைகளையும் பெற்றாலும்கூட, ஒரு வேளை இந்தக் குழந்தைக்குப் பண வசதியின்மையாலோ, வறுமையாலோ ஒரு வேளை பள்ளிக்குச் செல்ல முடியாவிட்டால் என்னாவது என்று உற்று நோக்கி, உன்னதமான தலைவியின் எண்ணத்திலே உதித்த திட்டம்தான், பள்ளிக்குச் செல்லக்கூடிய அந்தக் குழந்தைகளுடைய இடைநிற்றலைத் தடுப்பதற்கு, பத்தாம் வகுப்பு படிக்கக்கூடிய மாணவ, மாணவியருக்கு 1,500 ரூபாய், பிளஸ் 1 படிக்கக்கூடிய மாணவ, மாணவியருக்கு 1,500 ரூபாய், பிளஸ் 2 படிக்கக்கூடிய மாணவ, மாணவியருக்கு 2000 ரூபாய் என (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபொழுது, இனிக் கொடுப்பதற்கு என்ன இருக்கிறது என்று சொல்கின்ற அளவிலே, அந்த மாணவ, மாணவியருக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எல்லாவற்றையும் கொடுத்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு, பிளஸ் 2 படிக்கக்கூடிய ஒரு மாணவனுக்கு, ஒரு பேனா வாங்குவதற்கோ அல்லது பென்சில் வாங்குவதற்கோ அல்லது பரீட்சை நேரத்திலே, தேர்வு நேரத்திலேகூட அவனுக்கு ஒரு காபி குடிக்கவேண்டுமென்று

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2011 ஆகஸ்ட் 8

சொன்னாலும்கூட, அந்தச் சிரமத்தை உணர்ந்து, அவன் யாரிடமும் கை நீட்டி நிற்க வேண்டியதில்லை என்பதை உணர்ந்து, சுமார் 2,000 ரூபாய் அந்தப் பள்ளிக் காலங்கள் வரை, ஒரு எட்டு மாதங்கள் என்று வைத்துக்கொண்டால், மாதம் ஒன்றுக்கு சுமார் 200-இலிருந்து 250 ரூபாய் அந்த மாணவனுக்குக் கிடைக்கிறது. நானெல்லாம் 10-ஆவது வகுப்பு படிக்கின்றபோதுகூட, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாவது வகுப்பு, பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்குக் கைச் செலவுக்காக இந்தப் பணத்தை அரசு கொடுக்கவில்லை. இடைநிற்றலை நிறுத்த வேண்டும் என்பதற்காக, பத்தாவது வகுப்பு படிக்கும் மாணவ, மாணவியருக்கு வைப்பு நிதியில் 1,500 ரூபாயும், பிளஸ் 1 மாணவ, மாணவியருக்கு வைப்பு நிதியில் 1,500 ரூபாயும், பிளஸ் 2 படிக்கின்ற மாணவ, மாணவியருக்கு வைப்பு நிதியில் 2,000 ரூபாயும், ஆக மொத்தம் 5,000 ரூபாய், அந்த மாணவரோ, மாணவியோ படிப்பை முடித்து, பன்னிரெண்டாவது வகுப்பைப் படித்து முடித்து, வெளியே வரும்போது, அவை மொத்தமாக வட்டியுடன் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு பணிவோடு நன்றிகளைச் சொல்லிக்கொண்டு, இந்த மாணவ சமுதாயம் என்றைக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, இன்றைக்கு எந்த அம்மாவும், உலகத்திலே இப்படி, இவ்வளவு பெரிய தொகையை, இந்த நாட்டிலே, இந்தியாவிலே, உலகத்திலே எந்தத் தாயும் கொடுக்காத அளவிற்கு அள்ளிக் கொடுத்திருக்கின்ற அம்மாவாக, எங்கள் அம்மா அவர்கள் இருக்கிறார்கள் என்ற கருத்தையும் இந்த நேரத்திலே சொல்லிவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி). இந்த மாணவர்களுக்கு எல்லாம் கொடுத்தாகிவிட்டது அம்மா, இன்னும் ஒன்றேயொன்று மட்டும்தான் கொடுக்கவில்லை. 100 மார்க் நாம் கொடுக்கவில்லை, அம்மா. ஆனால், நிச்சயமாக அம்மா அவர்கள் உருவாக்கிய இந்தச் சூழலில்



2011 ஆகஸ்ட் 8] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

படிக்கின்ற அந்த மாணவ, மாணவிகள் நிச்சயமாக அந்த மதிப்பெண்களைப் பெறக்கூடிய ஒரு நல்ல சூழல் உருவாகி, அந்த மதிப்பெண்ணைப் பெற்று, இந்த நாட்டிற்கும், அம்மா அவர்களுக்கும் பெருமை சேர்க்கின்ற, 'ஏடு தூக்கி, நாடு காக்கின்ற' நாளைய தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரங்களாக அவர்கள் இந்த அம்மா அரசாலே உருவாக்கப்படுவார்கள் என்ற கருத்தை இந்த அவையிலே நான் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடே பாராட்டுகின்ற நல்ல பட்ஜெட். . . .

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் கல்வியை ஊக்குவிப்பதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்களுடைய கல்வியை ஊக்குவிக்கவேண்டுமென்று, அவர்களுடைய கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, மிகப் பெரிய புரட்சிகரமான திட்டமாக, பெண்கள் பட்டயப் படிப்பு முடித்தவர்களுக்கும், டிகிரி படிப்பை முடித்தவர்களுக்கும் 50 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையுடன் தாலிக்குத் தங்கம் 4 கிராம் கொடுக்கின்ற ஒரு புரட்சிகரமான திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதைத் தெரியப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்துத் திட்டங்களையும் அடுக்கிக்கொண்டே போனால் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் எனக்கு அவ்வளவு நேரம் ஒதுக்க மாட்டார்கள் என்ற காரணத்தினாலே திட்டங்களை நான் சுருக்கமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடே பாராட்டுகின்ற நல்ல பட்ஜெட். இன்னும் சொல்லப்போனால் சத்தான பட்ஜெட். முத்தான பட்ஜெட். ஐந்து முறை முதல்வராக இருந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி மட்டும் தன்னுடைய குடும்பப் பத்திரிகையிலே ஏனோ அறிக்கை மட்டும் விட்டுக்கொண்டிருக்கின்றார். ஐந்து முறை இந்த நாட்டை ஆண்டவர்தானே? நீங்களும் சட்டமன்ற உறுப்பினர்தானே? உங்களையும் திருவாரூர் மக்கள் தெரியாமல் தேர்ந்தெடுத்துவிட்டார்கள்தானே? இந்த அவைக்கு வந்து உங்கள் கருத்தை அன்போடு சொல்லலாம் அல்லவா? வரமாட்டேன் என்கிறீர்களே! தண்டவாளத்தில் தலைவைத்தேன் என்கிறீர்கள், இந்தச் சட்டமன்றத்திலே கால்கூட வைக்கமாட்டேன் என்கிறீர்களே. ஆனால், எங்கள் அம்மா அவர்கள் கடந்த ஆட்சியிலே அவை முழுவதும் நரிகளாக நீங்கள் நிறைந்திருந்தபோதும் சிங்கமாக வந்தார்களே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மா அவர்கள் சிங்கிளாக வந்தாலும், சிங்கமாக வந்தார்களே! அந்தத் தைரியம், அந்தத் திராணி உங்களுக்கு இருக்கின்றதா என்று நான் கேட்கின்றேன். அப்படி எதிர்கொண்டுவருகின்ற போர்ப் படைகளை எதிர்த்து நிற்கின்ற ஆற்றல் படைத்தவர் எங்கள் முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சரி, நீங்கள்தான் வரவில்லை. நீங்கள் அனுப்பிய உங்கள் பிள்ளை, தளபதி, தளபதி, தன்னைத்தானே தளபதி என்று சொல்லும் அவரும் இந்த அவைக்கு வருவதில்லை. என்ன சொல்கிறார்? அவரும் இன்னும் ஸ்கூல் பிள்ளை மாதிரியே இருக்கின்றார். இங்குதான் உட்காருவேன். அங்குதான் உட்காருவேன். நாங்கள் ஒன்றாகத்தான் உட்காருவோம் என்று அழுகிறார், அடம் பிடிக்கின்றார். இவையெல்லாம் முன்பே தெரிந்துதான், உங்கள் நடவடிக்கைகளெல்லாம் இப்படித்தான் இருக்கும் என்பதை உணர்ந்துதான் சட்டமன்றத்திலே எதிர்க்கட்சி அந்தஸ்தைக்கூட மக்கள் உங்களுக்குத் தர மறுத்துவிட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திட்டங்களே இல்லை, திட்டங்களே இல்லை, பக்கங்கள்தான் நிறைந்திருக்கின்றன" என்று இன்றைக்குத் தன்னுடைய குடும்பப் பத்திரிக்கையிலே அறிக்கை விட்டுக்கொண்டிருக்கின்றார் ஒரு தலைவர். நான் அன்போடு அவரிடத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விஜயபாஸ்கர் அவர்கள், அடிக்கடி முன்னாள் முதலமைச்சரின் குடும்பப் பத்திரிகையைப் பற்றி இங்கே குறிப்பிட்டுக்கொண்டிருக்கின்றார். இந்த நாட்டில் யாருமே அந்தக் குடும்பப் பத்திரிகையைப் படிப்பதில்லை. அவர் என்ன சொல்கின்றார் என்று அதைப் பற்றிக் கவலைப்படவும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உறுப்பினர் மட்டும் ஏன் இவ்வளவு நேரத்தை வீணடித்துக்கொண்டு தவறாமல் அதைப் படித்து, இங்கே சட்டமன்றத்தின் நேரத்தையும் வீணடித்துக்கொண்டு, அதற்கெல்லாம் இங்கே பதில் சொல்லிக்கொண்டு இருக்கின்றார் என்று தெரியவில்லை. அவர் அந்த முன்னாள் முதலமைச்சரின் குடும்பப் பத்திரிகையைப் படிப்பதற்காகச் செலவிடுகின்ற நேரத்தை பயனுள்ளதாக வேறு ஏதாவது ஒரு நல்ல புத்தகத்தைப் படிக்கச் செலவிடலாம் என்பதை அவருக்கு அறிவுறுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** பள்ளியிலே வரலாறுகள் படிக்கின்றபோது, அந்தக் காலத்திலே, நேதாஜி, காந்திஜி, நேருஜி என்று மாணவர்கள் படித்த காலம் போய், இன்றைக்கு 2ஜி, 3ஜி என்று படிக்கின்ற காலமாகிவிட்ட இந்தக் காலத்திலே, திட்டங்கள் இல்லை என்று சொல்வது, 2ஜி மந்திரிகளையெல்லாம் மாஜி மந்திரிகளாக ஆக்குகின்ற திட்டங்கள் இதில் இல்லைதான். அலைக் கற்றை ஒதுக்கீடுகளையெல்லாம் பணக் கற்றை ஒதுக்கீட்டுத் திட்டங்களாக ஆக்குகின்ற திட்டங்கள் இல்லைதான். திகாருக்குச் செல்லும் புகார் திட்டங்கள் இங்கே இல்லைதான். உங்கள் கழகக் கொள்கையாம் நில அபகரிப்பு, நில ஆக்கிரமிப்புத் திட்டங்கள் இங்கே இல்லைதான். இட்லிக்கடையில் தொடங்கி நகைக்கடை வரை அச்சுறுத்திப் பணம் பறிக்கும் அற்புதத் திட்டங்கள் இல்லைதான். டாட்டாவை மிரட்டி வோல்டாஸ் கட்டடங்களை வளைக்கும் திட்டங்கள் இல்லைதான். செம்மொழி மாநாட்டைத் தம்மொழி மாநாடாக ஆக்கும் மாபெரும் திட்டங்கள் இல்லைதான். தனிப்பட்ட ஒருவரின் கவிதைகளைப் பாடநூல் ஆக்கும் பரந்த

திட்டம் இல்லைதான். அண்ணா சமாதியிலே மேடையாக்கி காலை சிற்றுண்டி முதல், மதிய உணவு வரை இடைவேளையிலே உண்ணாவிரதம் இருக்கின்ற உலக திட்டங்கள் இல்லைதான். தனி ஒரு குடும்பம் வாழ தன்னிகரில்லா திட்டம் இல்லைதான். நான் ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போன நிதி, வந்த நிதி, பங்கு நிதி, அந்த நிதி, இந்த நிதி என எந்த நிதியானாலும் திகாரிலே ஒரு நாளாவது இருக்க வேண்டும் என்பதுதான் விதி. அங்கே போய் அவர்கள் ஆறுதல் சொல்லவேண்டியதுதான் அவர்களுடைய கதி என்பதை இந்த நேரத்திலே அன்போடு சொல்லிக்கொண்டு வீணாய் விமர்சனம் செய்வோரே உங்களுக்கு உரக்கச் சொல்லுகின்றேன்; உரைக்கட்டும் என்பதற்காகச் சொல்லுகின்றேன். ஆக்குவது அம்மா; அழிப்பது நீங்கள். உருவாக்குவது அம்மா; உருக்குலைப்பது நீங்கள். சீரமைப்பது அம்மா; சீரழிப்பது நீங்கள். விதைப்பவர் அம்மா; சிதைப்பவர் நீங்கள். ஊருக்கு உழைப்பவர் அம்மா; உங்களுக்கு உழைப்பவர் நீங்கள். தமிழ் மக்களுக்காக அம்மா; தான் பெற்ற மக்களுக்காக நீங்கள். உண்மைக்கு அம்மா; ஊழலுக்கு நீங்கள் என்பதை இந்த அவையிலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதே அவையிலே அம்மா அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்கள் “Talent is God given, be humble. Fame is man given, be thankful”. திறமை என்பது கடவுளால் கொடுக்கப்பட்டது; அடக்கத்தோடு இருங்கள். புகழ் என்பது மக்களால் கொடுக்கப்படுவது; அவர்களுக்கு நன்றியோடு இருங்கள். Talent is God given என்பது போல, Amma is God given! Amma is God given! கடவுள் தந்த கொடைதான் அம்மா. இறைவன் தந்த வரம்தான் அம்மா. தங்களின் சாதனை சிகரத்திற்கு முன்னாலே இமயத்தின் குடுமிகூட கொஞ்சம் இறக்கமாய்த் தெரிகிறது அம்மா. தங்களின் சாதனை சிகரத்திற்கு முன்னாலே இமயத்தின் குடுமிகூட கொஞ்சம் இறக்கமாய்த் தெரிகிறது அம்மா. உலக அரசியல் நோக்கர்கள் எல்லாம் உங்களைச் சுற்றியே உலா வருவதால்; உலக அரசியல் நோக்கர்கள் எல்லாம் உங்களைச் சுற்றியே உலா வருவதால் பூமத்தியக் கோடாய் மாறியது இந்தப் புனித ஜார்ஜ் கோட்டை; பூமத்தியக் கோடாய் மாறியது இந்த புனித ஜார்ஜ் கோட்டை என்று சொல்லி, பட்ஜெட்டைப், பாராட்டி அம்மா அவர்களை வணங்கி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.



2011 ஆகஸ்ட் 8]

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

***திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கங்கள். இது என்னுடைய முதல் பேச்சு என்பதனால் என்னுடைய வெற்றிக்கு உழைத்தவர்களுக்கும், உதவியவர்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியைக் கூறி பின்பு, நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்துகளை, கட்சியினுடைய நிலைப்பாட்டைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

பெரியகுளம் தொகுதியில் நான் சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளேன். அந்தத் தொகுதி மக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய வெற்றிக்காக, தேனி மாவட்டம் வந்து எனக்கு வாக்களிக்க வேண்டுமென்று பெரியகுளம் தொகுதி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்ததுடன் தமிழகத்தில் ஒரு புதிய அரசு அமைய வேண்டியதன் அரசியல் தேவையை அழுத்தமாகப் பதிவுசெய்து என்னுடைய வெற்றிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அன்றைய பொதுச் செயலாளரும், இன்றைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாவது முறையாக மகத்தான வெற்றி பெற்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாண்புமிகு உறுப்பினரின் கன்னிப் பேச்சில் தலையிடக்கூடாது; இருப்பினும், ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்; அதனால்தான் குறுக்கிடுகிறேன். நான் அன்றைய பொதுச் செயலாளர், இன்றைய பொதுச் செயலாளர். நான் இருக்கின்ற வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர்; பிறகுதான் முதலமைச்சர் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னைத் தெளிவுபடுத்தியதற்கு மிக்க நன்றி. ஆட்சியில் அமர்ந்துள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. அதுபோல என்னுடைய தொகுதியின் சொந்தக்காரரும், போடி தொகுதியின் மாபெரும் வெற்றியாளரும் என்னுடைய வெற்றிக்கு உழைத்தவருமான மாண்புமிகு முதல்வர் அவர்களினுடைய அன்புக்குரியவருமான அமைச்சர், நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என்னுடைய அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரியகுளம் தொகுதியில் என்னுடைய வெற்றிக்கு சிறப்புமிகு பிரச்சாரத்தைச் செய்து, தேசிய முற்போக்கு திராவிடக் கழகத் தொண்டர்களை உற்சாகமாகத் தேர்தல் பணியில் ஈடுபடுத்திய தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தினுடைய நிறுவனத் தலைவரும், மாண்புமிகு எதிர்கட்சித் தலைவருமான மரியாதைக்குரிய கேப்டன் விஜயகாந்த் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுபோல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேனி மாவட்டச் செயலாளரும், ஆண்டிப்பட்டி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரும், என்னுடைய வெற்றிக்கு உழைத்தவருமான மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தங்கத் தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய வெற்றிக்கு உழைத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடலேறுகளுக்கும், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் செயல் வீரர்களுக்கும் மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மனித நேய மக்கள் கட்சி, புதிய தமிழகம், அகில இந்திய ஃபார்வர்டு பிளாக், சமத்துவ மக்கள் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக் கழகம் மற்றும் தோழமைக் கட்சியினருக்கும் என்னுடைய மனமுவந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-05*

2011-2012 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ளார்கள். மூன்று மணி நேரம் போனதே தெரியவில்லை. பரீட்சைக்குப் படித்து வெற்றியையே குறிக்கோளாகக் கொண்ட, தேர்வையே குறிக்கோளாகக்



கொண்ட சிறந்த மாணவனைப் போன்று அவருடைய அந்த அறிக்கையினுடைய சமர்ப்பிப்பு, வாசிப்பு என்பது இருந்தது. அறிக்கை ஆர்வத்தைத் தூண்டியது. அனைத்துத் துறைகள் குறித்தும் ஓர் அலசல்; அதன்மீது ஆக்கப்பூர்வமான அறிவு சார்ந்த திட்டமிடல்; அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளத்தக்க நிதிநிலை அறிக்கை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும் எனது சார்பிலும் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறேன்; ஏற்கிறேன்.

அறிக்கையின் 19-ஆவது பத்தியில் 11-ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முதல் 4 ஆண்டுகளில் முதன்மைத் துறையின் வளர்ச்சி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது சரியான நிர்ணயிப்பே! இதைக் கணக்கில் கொண்டு, புதிய அரசு பயிரிடு திறன், பாசனத் திறன் பயிரிடு நில அளவு உயர்வு, இவற்றின்மூலம் உற்பத்தி உயர்வை 85 இலட்சம் டன்னிலிருந்து 115 இலட்சம் டன்னாக உயர்த்திடத் திட்டமிடல், இவை வரவேற்கப்பட வேண்டிய அம்சங்கள்.

அதேபோல, விளைநிலப் பாதுகாப்பு, விதை மானிய உயர்வு, வட்டியில்லா பயிர்க் கடன் உயர்வு, நுண்ணுயிர் பாசன விவசாயிகளுக்குப் பாசனத்திற்கு மானிய உயர்வு இவை அனைத்தும் விவசாய மேம்பாடு மற்றும் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகுக்கும்.

அதே நேரத்தில், கரும்பு, நெல் போன்ற பெரும்பகுதி விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்குக் கட்டுப்படியான விலையை அரசு உயர்த்தி அறிவித்திருந்தால் விவசாயிகளின் மகிழ்ச்சி மேலும் அதிகரித்திருக்கும். அரசு இதைப் பரிசீலித்து கரும்பு, நெல் போன்றவற்றிற்குப் புதிய விலை உயர்வை அளித்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

நில மோசடிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கைகள் எடுக்கும் இவ்வரசின் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. அப்பாவி மக்கள், ஏமாற்றப்பட்டவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையை இன்றைய அரசின் நடவடிக்கைகள் ஏற்படுத்தி இருக்கின்றன.

அதே நேரத்தில், அரசு நிலங்களை வளைத்துப் போட்டு செல்வாக்கு உள்ளவர்கள், உயர் பொறுப்பில் இருப்பவர்கள், வருவாய்த் துறை அதிகாரிகளைப் பயன்படுத்தி 30, 40 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பினாமிகள் பெயரில் பல இலட்சம் ஏக்கர் நிலங்களை அபகரித்து வைத்துள்ளனர். அதனால்தான் இன்றைய அரசின் கணக்கின்படி தரிசு நிலங்கள் இல்லை என்ற விவரம்

சொல்லப்படுகிறது. தரிசு நிலங்கள் குறித்து அரசின் கணக்கிலுள்ள 40 ஆண்டுகளுக்கு முந்தைய விவரங்களை எடுத்து ஆய்வு செய்தால் பல இலட்சம் ஏக்கர் நிலங்கள் எப்படி மோசடியாக அபகரிக்கப்பட்டுள்ளன என்று அறிய முடியும். எனவே அதற்கான ஒரு அதிகாரம் படைத்த கமிஷனை நியமித்து, நீண்ட கால நில மோசடிகளைக் கண்டறிந்து, அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்டெடுத்து, நிலமற்ற ஏழைகளுக்கு இவ்வரசு அதை வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டில் சமீப காலமாக நிலச் சீர்த்திருத்தச் சட்டங்கள் முறையாக அமலாகவில்லை. அதில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை விதிகளை மீறி ஒரு கூட்டம் அனுபவித்து வருகின்றது. இதைத் தடுத்து நிறுத்திட வேண்டும். நிலமற்றோருக்கு நிலம் கிடைத்திட நில உச்சவரம்புச் சட்டத்தைத் தமிழ்நாட்டில் முழுமையாக அமல்படுத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு விவசாய நிலங்களை எந்தெந்தப் பயன்பாட்டிற்கு எடுக்கலாம் என்பது குறித்து அரசு ஒரு கொள்கையை உருவாக்க வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கிராமப்புற விவசாயத்திற்கு சகல வகையிலும் உதவியாக இருக்கும் கூட்டுறவு அமைப்புகளைப் பலப்படுத்துவதுடன் அதனுடைய ஜனநாயகப்பூர்வமான செயல்பாட்டினைச் செயல்படுத்திட கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் தேதியையும் தமிழக அரசு அறிவித்திட வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டமாகிய தேனியும், என்னுடைய தொகுதியாகிய பெரியகுளமும் முழுக்க, முழுக்க விவசாயம் சார்ந்த பொருளாதாரத்தைக் கொண்டவை. இதன் பிரதானமான முன்னேற்றம் என்பது விவசாய மேம்பாடாகத்தான் இருக்க முடியும்.

தேனி மாவட்டத்தில் சுமார் 25 ஆயிரம் ஏக்கரில் மா விவசாயம் நடந்து வருகிறது. இதன்மூலம் 1 இலட்சம் டன் மாம்பழங்கள் வருடத்திற்கு உற்பத்தியாகின்றன. அதில் பழமாக உண்ணப்படுவது 25 சதவிகிதம் மட்டுமே. மற்றவை வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகி பழக்கூழ், ஊறுகாய் போன்றவை தயாரிக்கப்படுகின்றன.



விவசாயிகளுக்கு உற்பத்திக் காலங்களில் கிலோவிற்கு 5 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை மட்டுமே கிடைக்கிறது. இதில் பெரியகுளம் தொகுதியில் மட்டும் 80 ஆயிரம் டன் மாம்பழங்கள் உற்பத்தியாகின்றன. இந்தப் பழங்களைக் கொண்டு பெரியகுளத்தில் ஒரு மாம்பழக் கூழ் தயாரிக்கும் நிறுவனத்தை நிறுவினால் தமிழக அரசுக்கு இந்த பட்ஜெட்டின்மூலம் ரூபாய் 25 கோடி ரூபாய்தான் செலவாகும். இங்கிருந்து ஏற்றுமதியாகும் சுமார் 60 ஆயிரம் டன் மாம்பழங்களைக் கூழாக்கினால் சுமார் 20 ஆயிரம் டன் மாம்பழக் கூழ் கிடைக்கும். இதன் மார்க்கெட் மதிப்பு ரூபாய் இருநூறு கோடி ஆகும். இதனால் அரசுக்கு இலாபம், விவசாயிகளுக்குக் கூடுதல் விலை, சுமார் பத்தாயிரம் பேருக்கு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு போன்றவை உருவாகும். மாம்பழக் கூழை ஆறு மாதங்களுக்கு, குளிரூட்டப்பட்ட அறைகளில் பாதுகாத்து, தேவையான பொருட்களைச் செய்ய முடியும். மாம்பழத்தை நேரடியாகப் பயன்படுத்தினால் ஒரு வாரத்திற்கு மேல் தாங்காது; அழுகிவிடும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதனைப் பரிசீலித்து இந்த நிதிநிலை அறிக்கையில் இணைத்திட வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

நதிகள் இணைப்பு. தமிழ்நாட்டிலுள்ள ஆறுகளை இணைப்பதற்கான திட்டம் வரவேற்கத்தக்கது. தமிழக அரசு எடுத்துள்ள இந்த முயற்சி பாராட்டத் தகுந்தது. மத்திய அரசிடம் அதற்கான நிதியைக் கோருகிற தருணத்தில் அதற்கெனக் காத்திருக்காமல் மாநில அரசே இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூபாய் அறுபது கோடி நிதியை ஒதுக்கி பணியினைத் துவக்குவது என்று அறிவித்திருப்பது மிகச் சிறந்தது; முன்னுதாரணமானது; பாராட்டத் தகுந்தது. அதேபோல, உணவுப் பொருட்களின் விலையேற்றத்திற்குப் பிரதான காரணமான, முன்பேர வர்த்தக ஆணையகக் கட்டுப்பாட்டிலிருந்து உணவுப் பொருட்களை விடுவிக்க மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வோம் என்று தமிழக அரசு அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். அதேநேரத்தில், பெரும்பகுதியான மக்களின் வாழ்வோடும், வயிறோடும் விளையாடி, கோடி கோடியாகக் கொள்ளையடிக்கும் உணவு வர்த்தகச் சூதாட்டத்தை எதிர்த்து வலிவுமிக்கக் குரலை தமிழக அரசு ஒலிக்க வேண்டுமாய் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

மகாத்மா காந்தி 100 நாள் வேலைத் திட்டம். கிராமப்புற 100 நாள் வேலைத் திட்டம் கடந்த காலங்களில் தமிழ்நாட்டில் முழுமையாக அமலாகவில்லை. வருடத்தில் 100 நாள் வேலையோ, அரசு நிர்ணயித்த குறைந்தபட்சக் கூலியோ தமிழ்நாட்டில் எங்கும் கிடைக்கவில்லை. இது பல இலட்சம் ஏழை மக்கள் பயனடைவதற்கும் கிராமப்புற விவசாய மேம்பாடு, நீர்நிலைப் பராமரிப்பு மற்றும் விஸ்தரிப்பு, வாய்க்கால் மராமத்து எனப் பல வகைகளில் விவசாயக் கட்டுமானத்தைப் பலப்படுத்தும் விதத்தில் கொண்டுவரப்பட்ட திட்டம். இதைக் கடந்த அரசு, உரிய முறையில் கண்காணித்துச் செயல்படுத்தவில்லை. அதற்கான மாநில அரசின் வரம்பிற்குட்பட்ட போதிய நிருவாக ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. அந்த பலவீனங்களைக் களைந்து புதிய அரசு கேரளா, கர்நாடகம் போன்ற அண்டை மாநில அனுபவங்களைக் கண்டறிந்து நல்ல முன்னுதாரணத்துடன் இந்தத் திட்டத்தினை அமல்படுத்திட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன். குறைந்தபட்சக் கூலி ரூ.119ஐ உறுதிப்படுத்தவும், வருடத்திற்கு 100 நாள் வேலை கிடைத்திடவும், அதுபோன்று, வேலை நேரம், வேலை அளவை ஒழுங்குபடுத்திட வேண்டுமாயும், அதற்குரிய நடவடிக்கையை புதிய அரசு மேற்கொள்ள வேண்டுமாயும் கேட்டுக் கொள்கிறேன். அதோடு, தலித் மற்றும் ஆதிவாசிகளின் விவசாய நிலங்களை மேம்படுத்தி, பாசன மேம்பாட்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, கேரளா, கர்நாடக மாநிலங்களில் இந்த 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தினை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதைப்போல இங்கே பயன்படுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். இந்தியா முழுவதும் ஒரே நிலைதான் இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடுகிறபோது, அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு கலந்துபேசி, அதிகமாக விவசாய உற்பத்தி செய்கின்றபோது அந்த 100 நாள் வேலைவாய்ப்புகளை எந்த முறையிலே பயன்படுத்தினால் விவசாயிகள் பயன்பெறுகின்ற அளவிற்கு இந்த 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டம் தீவிரமாகச் செயல்படும் என அறிவித்திருக்கிறார்கள். இதுதான் இப்போது படைக்கப்பட்டிருக்கிற ஒரு சாதனை என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அந்தப் பணிகளை ஆற்றுகின்றவர்களை இந்த அரசு எப்படிப் பயன்படுத்துவது என்பதை—மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிடுகிறபோது, இந்த நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் பார்த்திருக்கக்கூடும். — மீண்டும் பரிசீலிப்பதாக மற்றொரு கருத்தையும் இங்கே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்தியஅளவிலே பார்க்கின்றபோது, அம்மா அவர்கள் எடுத்திருக்கிற முதல் நடவடிக்கை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. இந்த இடத்தில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய திட்டத்தில் தலித்துகளுக்கும் ஆதிவாசிகளினுடைய சிறு, குறு நிலங்களை மேம்படுத்திட நீர்ப்பாசன வசதிகளைச் செய்துகொடுத்திட அந்தச் சட்டத்திலேயே அதற்கான முறையில் சில விதிகளை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அது தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் அமலாகவில்லை. இப்புதிய அரசு சிறு, குறு விவசாயிகளுக்கும், ஆதிவாசிகளுக்கும், தலித்துகளுக்கும் அந்தத் திட்டத்தின் அடிப்படையில் நில மேம்பாட்டிற்குப் பாசன வசதிகளைச் செய்து கொடுத்திடவும் நடவடிக்கை எடுத்திட முயற்சிக்க வேண்டுமாய், திட்டமிட வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-15

கல்வி. பள்ளி மாணவ மாணவியருக்கான உதவித் தொகைகள் உயர்த்தப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். அதேபோல, விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியருக்கு, ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு, பள்ளி, கல்லூரிகளில் பயிலுபவர்களுக்கு மாதத்திற்கு தலா ரூ.200/- உயர்த்தியிருப்பதை வரவேற்கும் அதே நேரத்தில், இது இன்றைய விலைவாசி உயர்வோடு ஒப்பிடும்போது போதுமானதாக இல்லை என்பதையும் தமிழக அரசு கணக்கில் எடுத்துக் கொண்டு, இது தினமும் ரூ.20/-, ரூ.30/- என்ற அளவில்தான் வருகிறது. ஆகவே தினம் ரூ.50/- என்ற வகையிலாவது உயர்த்தி வழங்கினால், அது இன்றைய விலைவாசி உயர்வை ஈடுகட்டும்; அந்த மாணவ, மாணவியருக்கும் பேருதவியாக இருக்கும். அதைத் தமிழக அரசு பரிசீலிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையை இங்கே சமர்ப்பிக்கின்றபொழுது, போடி தொகுதியில் ஒரு பொறியியல் கல்லூரியை மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஒப்புதலோடு பெற்றுள்ளார்கள். மிக்க மகிழ்ச்சி. ஏனென்றால், நான் போடி தொகுதிக்குச் சொந்தக்காரன். அவர் பெரியகுளம் தொகுதிக்குச் சொந்தக்காரர். அங்கே நான் சட்டமன்ற உறுப்பினர். நான் போடி தொகுதிக்குச் சொந்தக்காரன். அவர்தான் அங்கே சட்டமன்ற உறுப்பினர். அந்த வகையில், போடி தொகுதிக்கு பொறியியல் கல்லூரி கிடைத்திருப்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி.

அதே நேரத்தில், பெரியகுளம் தொகுதிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய என்னுடைய தொகுதியில் அரசு கலைக் கல்லூரி ஒன்று வேண்டியிருக்கிறது. ஏனெனில், அந்த மாவட்டத்தில் அரசுக் கல்லூரி எதுவும் இல்லை. இப்பொழுது ஒரு பொறியியல் கல்லூரியை முதன்முதலாக மாண்புமிகு நிதி அமைச்சர் மூலமாக முதல்வர் அவர்கள் அனுமதித்திருப்பது வரவேற்கத்தக்கது. நானும் பக்கத்துத் தொகுதிக்காரன். மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்கள், அம்மா அவர்களுடைய செல்லப்பிள்ளை. அதனால், அவர்களுக்கு ஒரு பொறியியல் கல்லூரி கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு உயர்ந்த சாக்லேட்டைக் கொடுத்துக்கொண்டிருக்கும்பொழுது, பக்கத்தில் இருக்கும் நான் அதை ஏமாற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்தால் அது வயிற்று வலியை உண்டாக்கும். *(சிரிப்பு)* அதனால், அவருக்கு வயிற்று வலியும் உண்டாகக்கூடாது; நானும் ஏமாந்து நிற்கக் கூடாது என்ற முறையிலும், அதைத் தமிழக முதல்வர் அவர்களும் ஏற்க மாட்டார்கள் என்கிற முறையிலும், தேனி மாவட்டத் தலைநகரத்தில் ஒரு அரசுக் கலைக் கல்லூரியை உருவாக்கித் தர தமிழக முதல்வர் அவர்கள் இந்த பட்ஜெட்டில் இணைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, தலித் துணைத் திட்டம். தலித் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்திற்கு, நிதி ஒதுக்கீட்டை புதிய அரசு உயர்த்தி அறிவித்துள்ளதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். குறிப்பாக, தலித் மேம்பாட்டுத் திட்ட நிதியை கடந்த ஆண்டைவிட 1,200 கோடி ரூபாய் அதிகமாக இந்த அரசு உயர்த்தி அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது, பாராட்டுக்குரியது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.



கடந்த அரசு இத்துறைக்கு ஒதுக்கிய சுமார் 3,828 கோடி ரூபாயை இலவசத் திட்டங்களுக்கு மடைமாற்றம் செய்து விட்டது. அது கடந்த காலங்களில் பல அமைப்புகளின் சார்பாகக் கண்டிக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்ற ஒரு மோசமான முன்னுதாரணத்தைக் கடந்த அரசு செய்துவிட்டது வருந்தத்தக்கது. தலித் மக்கள் மத்தியிலே ஒரு மிகப் பெரிய அதிருப்தியை அது உருவாக்கியிருக்கிறது. இன்றைக்குத் தமிழக அரசு அந்தத் தொகையை 1,200 கோடி ரூபாயாக உயர்த்தி, ஒரு நல்ல ஆக்கப்பூர்வமான, அந்த மக்கள் வரவேற்கத்தகுந்த அந்த உயர்வினை அறிவித்திருப்பதைப் பாராட்ட வேண்டிய அதே நேரத்தில், இப்போது அமைந்துள்ள இந்தப் புதிய அரசு, இத்திட்டத்தினை முறையாக, தலித்துகளின் மேம்பாட்டுக்கான முறையில், கல்வி, குடியிருப்பு, குடிநீர், சுகாதாரம், சாலை மேம்பாடு என அந்த மக்களுடைய அடிப்படைத் தேவைகளை, வாழுமிடத் தேவைகளைக் கணக்கில் எடுத்து, திட்டமிட்டு, அப்பிரிவு மக்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவதுடன், இதைக் கண்காணித்துச் செயல்படுத்திட ஒரு குழுவினையும் புதிய அரசு நியமித்திட வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

குடிமனைப் பட்டா. தமிழ்நாட்டில் கடந்த ஆட்சியில் குடிமனைப் பட்டா கோரி முப்பது இலட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், கடந்த அரசு ஆறு இலட்சம் பேருக்கு மனைப் பட்டா கொடுத்துள்ளோம் என்று அறிவித்துள்ளது. அதில்கூட, பழைய பட்டாக்களை இரத்து செய்துவிட்டு, அவற்றிற்கே புதிய பட்டா கொடுத்ததாக பல புகார்களும் எழுந்துள்ளன. இப்புதிய அரசு, குடியிருக்க வீடு இல்லாத மக்களின் அவல நிலையையும், குடியிருக்கும் வீட்டுக்குப் பட்டா இல்லாததையும் கணக்கில் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் ஒரு சர்வே செய்து இரண்டுவித கணக்கை எடுத்து, பட்டா இல்லாத வீடுகளுக்குப் பட்டா, பட்டா இல்லாத வீடுகளுக்கு குடியிருக்கத் தகுதியான இடம் என்றால் அவற்றை வகை மாற்றம் செய்து, பட்டா மாற்றம் . . .

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

பேசுகின்றபொழுது 'மாண்புமிகு அம்மா அவர்களுடைய செல்லப் பிள்ளை நான்' என்று சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கின்ற ஒரு கோடி பேர்களும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய செல்லப் பிள்ளைகள்தான் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)

**திரு. ஏ. லாசர்:** அதிலே எந்த மாற்றமும் இல்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற ஒன்றரை கோடி இயக்கத் தோழர்கள் அனைவருமே மாண்புமிகு அம்மா அவர்களுடைய செல்லப் பிள்ளைகள்தான் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மகிழ்ச்சி. அதிலே முதலிலே நீங்கள் இருக்கிறீர்கள் என்று நான் நினைத்தேன்; அவ்வளவுதான். (சிரிப்பு)

அதேபோல, குடியிருக்கத் தகுதியான இடம் என்றால் அவற்றை வகைமாற்றம் செய்து அந்த நிலங்களுக்குப் பட்டா வழங்க வேண்டும். குடிமனை இல்லாதவர்களுக்கு அரசுப் புறம்போக்கு இடங்கள் கண்டறியப்பட்டு இடப் பட்டா வழங்க வேண்டும். புறம்போக்கு இடங்கள் அரசிடம் போதிய அளவு இல்லை என்றால், கடந்த காலங்களில் அரசே தலித் மக்களுக்கு, ஆதிவாசி மக்களுக்கு நில ஆர்ஜிதங்கள் செய்து மனையிடம் வழங்கி வந்தது. சமீப காலங்களில் ரியல் எஸ்டேட் நிலத்தின் விலையேற்றத்தின் காரணமாக அதுபோன்ற நடவடிக்கைகள் குறைந்திருக்கின்றன; அல்லது இல்லை என்று நான் கருதுகிறேன். எனவே, புதிய அரசு, தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையிலான இந்த அரசு, இந்த 5 ஆண்டுக் காலத்தில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே வீடில்லாத அனைவருக்கும் குடிமனை நிலம், குடிமனைப் பட்டா வழங்கிட நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.



அடுத்து, குடிநீர். நகர்ப்புற மேம்பாட்டின் அடிப்படையில் சுத்தமான குடிநீருக்கு இந்த அரசு ரூபாய் 844 கோடி ஒதுக்கீடு செய்துள்ளதை வரவேற்கிறேன். அதேபோல, ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்கு முன்னுரிமையும், நிதியொதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. என்னுடைய தொகுதியான பெரியகுளத்தில் பிரதானமான நகரம் மாவட்டத்தின் தலைநகரமான தேனி நகரமாகும். கடந்த காலங்களில் 10 நாளைக்கு ஒருமுறைதான் அங்கே குடிநீர் கிடைத்து வந்தது. 40 ஆண்டுகளுக்கு முந்தைய திட்டமிடல்தான் இப்போதும் அமலாகி வருகின்ற காரணத்தினால் குடிநீர் கிடைக்காத நிலையுள்ளது. குறிப்பாக, கடந்த ஆட்சியின்போது, இருக்கும் நீரை முறைப்படுத்திக் கொடுக்காததனாலும் பொதுமக்கள் சொல்ல முடியாத கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். நதிகளும், அணைகளும் எனச் சொல்லப் போனால், 5 நதிகள் நிறைந்த மாவட்டம் தேனி மாவட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** நான் இதோ உரையை முடித்துவிடுகிறேன். 4 அணைகளைக் கொண்ட மாவட்டம் அந்த மாவட்டம். அங்கே குடிநீர் இல்லாத நிலையைப் போக்கிட தேனி நகர மக்களுக்கும் என்னுடைய தொகுதிக்குட்பட்ட 5 பேரூராட்சிப் பகுதி மக்களுக்கும் குடிநீர் கிடைத்திட புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தேனி நகரத்திற்கு வைகை அணையிலிருந்து ஒரு புதிய திட்டத்தைக் கொண்டுவந்து குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, முல்லைப் பெரியாறு. முல்லைப் பெரியாறு நீர்த் தேக்கப் பிரச்சினையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை கேரள அரசு நிறைவேற்ற வேண்டும். மத்திய அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், தமிழ்நாட்டிலுள்ள 5 மாவட்டங்களில் குடிநீர் மற்றும் விவசாயம் ஆகியவற்றோடு இணைந்த வாழ்வாதார பாரம்பரிய உரிமைப் பிரச்சினையில் கேரள அரசு எடுக்கும் எந்த முடிவும், புதிய அணை கட்டுவது உட்பட, தமிழக மக்களின் நலன் பாதிக்கப்படும் விதத்தில் இருப்பதை ஏற்க முடியாது என்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் என்னுடைய கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். மத்திய அரசும் இப்பிரச்சினையில் காலத்தே நல்ல முடிவை எடுக்க வேண்டும். உச்ச நீதிமன்றத்தின் முடிவை அமல்படுத்துவதற்குத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, முதியோர் பென்ஷன் மற்றும் அதுபோன்ற நடவடிக்கைகளை அமல்படுத்தி அந்த நலத் திட்டங்களுக்கு ஆயிரம் ரூபாய் தொகையை உயர்த்தி மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பதனால், ஆயிரக்கணக்கில் மனுக்கள் குவிகின்றன. என்னுடைய தொகுதியில் மாத்திரம் 5,000 மனுக்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றை முறையாகப் பரிசீலிக்க தாலுகா அலுவலகங்களில் போதிய ஊழியர்கள் இல்லாத நிலைமை கடந்த காலங்களில் இருந்து வந்தது. பெரியகுளம் தாசில்தார் அலுவலகத்தில் தேவை 42 பேர், இருப்பது 22 பேர். தேனி தாசில்தார் அலுவலகத்தில் தேவை 31 பேர், இருப்பது 22 பேர் என்றால் அம்மாவினுடைய இந்த நல்ல திட்டங்கள் ஓர் ஆக்கப்பூர்வமான முறையில் காலத்தே மக்களிடம் சென்றடைவதில் தேக்கம் ஏற்படும். தமிழகம் முழுவதும் இதுதான் நிலையா என்பதை அறிந்து மொத்தத்தில் இதைத் தீர்க்க உரிய நடவடிக்கையை அரசும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் . . .

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன். (குறுக்கீடு) அவர் உட்கார்ந்து விட்டார். (குறுக்கீடு) நன்றி சொல்லி பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** இறுதியாக, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், முதன்மை ஆசிரியர் அவர்களுடைய நல்ல போதனைகள் மற்றும் பயிற்சியின் மூலமாக சிறந்த முறையில் ஒரு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். முதன்மை ஆசிரியர் என்றால் தெரிந்து கொண்டிருப்பீர்கள்; நம்முடைய முதல்வர் அவர்கள். அதனால் அவர்கள் ஒரு நல்ல அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை, பரீட்சையில் வெற்றிபெறும் ஒரு மாணவனைப்போல, முதன்மை நிலைத் தேர்வில் வெற்றிபெறும் மாணவனைப்போல நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முதல்நிலை மாணவனாக இதில் வெற்றி பெற்றிருக்கிறார் என்பது என்னுடைய கருத்து. அதற்கு என்னுடைய மதிப்பீடு 90 சதவிகிதத்திற்குமேல் மார்க் போடலாம். அவ்வளவு சிறப்பான ஓர் அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார். அந்த 10 சதவிகித மார்க்கையும்கூட எங்களைப் போன்று இருக்கக்கூடிய தோழமைக் கட்சியினர் சொல்லுகின்ற இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான கருத்துகளின்மீது வந்திருக்கக்கூடிய நல்ல சில கருத்துகளையும் ஏற்றுக்கொண்டு, அதையும் இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏற்றுக்கொண்டு செயல்பட்டால், 100-க்கு 100 சதம் வெற்றி பெற்ற மாணவராக நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும், அவருக்கு முதன்மையான ஆசிரியர் என்கின்ற முறையில் நம்முடைய முதல்வர் அவர்களும், தமிழக அரசும் இருக்கும் என்கிற முறையில் பாராட்டி, வாழ்த்தி, இந்த நிதிநிலை அறிக்கையை ஏற்கின்றேன். வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.

***திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய வெற்றியை 108 வைணவத் திருத்தலங்களின் தலைமைப் பீடமாகவும், பூலோக வைகுண்டம் என்று அழைக்கப்படும் ஸ்ரீரங்கத்தில் தொடங்கி வைத்து இன்று தமிழகத்தின் தன்னிகரில்லா முதல்வராக, அன்பின் இருப்பிடமாக, அசாத்திய துணிச்சலால் அகிலத்தை வென்றவராக, சமூக நீதி காத்த தகைசான்ற வீராங்கனையாக, கல்வியில் கலைமகளாக, கருணையின் பிறப்பிடமாக, வாடுகின்ற ஏழைகளின் வாழ்வாதாரமாக, கொள்கையில் உறுதி கொண்ட மாதர்குல மாணிக்கமாக, வீரத்தின் விளைநிலமாக தமிழுக்குத் தொண்டாற்றும் தகைமை சார்ந்த தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கின்ற கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர் தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவிரி நதிக் கரையினில் ஸ்ரீரங்கநாதரே கதி என்று இருந்த இந்தச் சாதாரண தொண்டனை, ஆண்டாள் நாச்சியாரின் அம்சமாக விளங்கும் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அருள் பாலித்து, அரசியல் அங்கீகாரம் கொடுத்து, இன்று திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதியின் மக்கள் பிரதிநிதியாக்கி, ஊருக்கே அடையாளம் தெரியும் வகையில் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து என் போன்ற இலட்சோப இலட்சம் தொண்டர்களுக்கு வாழ்வளித்த காவல் தெய்வம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

தன்னலம் கருதாமல் நாட்டுமக்களின் நலனே எனது நலன் என்கின்ற சீரிய நோக்கோடு உயர்ந்த இலட்சியங்களை மனதிலே பதித்து, சிகரங்களை நோக்கிப் பயணிக்கும் அரசியல் வானில்

துருவ நட்சத்திரமே, எங்கள் குல தெய்வமே, நரகாசூரன் என்னும் நய வஞ்சகர் எண்ணம் கொண்ட எதிரிக் கூடாரத்தை தவிடுபொடியாக்கி, உண்மையை உரைத்து, உறங்கிக் கிடந்த ஜனநாயகத்தைத் தட்டி எழுப்பி இன்று தமிழகத்திற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த எங்கள் அன்னையே, கடந்த 5 ஆண்டுகளாக தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கருணாநிதி தலைமையில் நடந்த மோசமான ஆட்சியில் வளர்ந்துவிட்ட ஊழல், சந்தர்ப்பவாதம், வன்முறை, நில அபகரிப்பு, சமூகச் சீர்கேடு, பொருளாதார நலிவு ஆகிய இவற்றை அறவே ஒழித்து, நாம் எங்கே போகின்றோம் என்று திக்குத் தெரியாமல், திசை மாறிய கப்பலாக இருந்த தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகக் காட்சி அளிக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) என்னையும் ஒரு பொருட்டாக நினைத்து வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிதிநிலை அறிக்கை மீதான நன்றி அறிவிப்பு நிகழ்வில் பங்கு பெறச் செய்த என் தாயை மீண்டும் வணங்குகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை நாடு போற்றுகிறது. நல்லோர்கள் போற்றுகிறார்கள். அரசியல் கட்சித் தலைவர்கள், அறிஞர்கள் போற்றுகிறார்கள். பத்திரிகைகள் பாராட்டுகின்றன. ஒரே ஒருவர் மட்டும்தான் இந்த நிதிநிலை அறிக்கையைக் குறை சொல்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்றால், பட்ஜெட் புத்தகத்தில் பக்கங்கள் கூடிவிட்டன; ஆனால் ஒன்றுமில்லை என்று சொல்கிறார். ஆனால் ஒன்றுமில்லை என்று சொல்வது, 'வரிகள் இல்லை' என்கின்ற அந்த ஒரு வரியைத்தான் அவர் சொல்கின்றார். இந்த நிதிநிலை அறிக்கையிலே பொது மக்களைப் பாதிக்கின்ற அளவிற்கு, நடுத்தர மக்களைப் பாதிக்கின்ற அளவிற்கு, ஏழையெளிய விவசாயிகளைப் பாதிக்கின்ற அளவிற்கு, வியாபாரிகளைப் பாதிக்கின்ற அளவிற்கு எந்த ஒரு வரியும் இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

பாதிக்கக்கூடிய எந்த வரிகளும் இல்லாத பட்ஜெட்டை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நமக்குத் தந்திருக்கின்றார்கள். தன் நலம், தனது குடும்ப நலம் மட்டுமே கருதாமல் நாட்டு மக்களின் நாடித் துடிப்பை அறிந்து தொலைநோக்குப் பார்வையோடு போடப்பட்டது இந்த நிதிநிலை அறிக்கை. பட்ஜெட் புத்தகத்தில் உள்ள 90 பக்கங்களையும் முழுமையாக, முறையாக வாசித்தபோது மக்கள் மன்றத்தில் சிலர் நேசித்துச் சொன்னது இது.



பிற்பகல் 12-30

2011-2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை என்பதைக் காட்டிலும், இந்தியாவின் ஒவ்வொரு மாநிலமும் பின்பற்ற வேண்டிய ஒரு முன்மாதிரியான பட்ஜெட் என்றால் அது மிகையாகாது. அன்னையே! ஒரு தேர்வுக்குச் செல்லும் மாணவனுக்கு அந்தத் தேர்வில் உள்ள நூறு மதிப்பெண்ணும் எவ்வளவு முக்கியமோ அதைப் போன்று இந்த நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு பக்கமும் இன்றியமையாதது. இது தமிழ்நாட்டு மக்கள் என்கின்ற ஆசிரியர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் போட்ட சூப்பர் பட்ஜெட். இரண்டே வரிகளில் இந்த உலகத்தை வாழ்வித்த வள்ளுவன், பாட்டுத் திறத்தாலே இவ்வையகத்தைப் பாலித்திடச் செய்த பாரதி, பெண் உரிமை பற்றி பேனாவில் மெய் போட்டு எழுதிய புரட்சிக் கவி பாரதிதாசன் ஆகிய நேசக் கவிஞர்களின் நேசமிகு கவிதைகளை ஆங்கிலம், அரபு, சீன மொழிகளில் மொழி பெயர்த்து, இணையத்தில் இடம் பெறச் செய்ய, உரிய குழு அமைத்து, அதற்கு நிதி ஒதுக்கிய எங்கள் தாயே! இன்று அகில உலகமெல்லாம் ஒவ்வொரு தமிழனும் உங்களைப் பாராட்டுகிறான்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு, பதினோறாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூபாய் 1,500 ஊக்கத் தொகையும், பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் ஊக்கத் தொகையும், பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடையும், மடிக் கணினியும் வழங்கும் திட்டமும், மாணவர்களின் உயர் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்து,

"அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்"

என்கின்ற உயர்ந்த தத்துவத்தை, பாரதி கண்ட கனவை நிறைவேற்றி, பள்ளிக் கல்வித் தரத்தை உயர்த்திப் பிடித்திருக்கும் எங்கள் சரஸ்வதியே, நன்றி தாயே! நன்றி! நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இட்ட கையொப்பம் ஏழு. ஆம் தாயே! வான வில்லின் வண்ணத்தைப் போல, மக்களின் எண்ணங்களில் நீங்கள் குடியிருக்கிறீர்கள்.

விலையில்லா அரிசி திட்டம், முதியோர் ஓய்வூதிய உயர்வுத் திட்டம், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உயர்வுத் திட்டம்,

தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம், மீனவர்களுக்கு உதவித் தொகை உயர்வு, அரசு பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு விடுப்பு ஆறு மாதமாக உயர்வு, ஏழைகள் குடியிருக்க பசுமை வீடு திட்டம், மக்கள் நல்வாழ்வுக்கென புதிய காப்பீட்டுத் திட்டம், புதிதாக 106 கோயில்களில் அன்னதானத் திட்டம் விரிவாக்கம், போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த 3 ஆயிரம் புதிய பேருந்துகள், சிறுபான்மையினர் நலன் காக்க சிறப்பு நிதி ஒதுக்கீடு, கேபிளை அரசுடைமையாக்கும் திட்டம், தாய்மார்களின் மனம் குளிர இலவச மிக்சி, கிரைண்டர், மின் விசிறி வழங்கும் உன்னதத் திட்டம், தனி நபர் வருமானத்தை இரண்டு அல்லது மூன்று மடங்கு உயர்த்தும் உன்னதத் திட்டம் இப்படி திட்டங்களைப் போட்டு அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து திகைக்க வைத்த என் அன்னையை நான் இந்த நேரத்திலே வணங்குகிறேன்.

நேற்று இரவு நான் திருச்சியிலிருந்து புகை வண்டியிலே சென்னைக்கு வந்தபோது அந்தப் புகை வண்டியிலே வந்த சிலர் என்னிடத்திலே பேசிய கருத்துகளை இந்த மன்றத்திலே பதியவைக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காலத்தில் ஏது புகை வண்டி? நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்காக தனியாக ஒரு பழைய புகை வண்டியை திருச்சியிலிருந்து விட்டார்களா என்று தெரியவில்லை. இப்பொழுது எல்லாமே டீசல் என்ஜின்தானே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.

**திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு அம்மா அவர்களைப் பற்றி அவர்கள் பேசுகின்றபோது, அவர்கள் மதுரையைச் சார்ந்தவர்கள்; அவர்கள் சொன்ன கருத்தை இந்த மன்றத்திலே நான் கண்டிப்பாகப் பதிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மதுரையை மீட்ட சுந்தரபாண்டியர் என்றும், (மேசையைத் தட்டும் ஒலி) மீனவ நண்பன் என்றும், தொப்புள் கொடி உறவுக்கு உரிமைக் குரல் கொடுப்பவர் என்றும் அவர்கள் வாழ்த்திப் பேசினார்கள். ஏனென்று



சொன்னால், இன்றைக்கு மதுரையிலே ஒரு சுதந்திரம் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. மதுரை மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதும் இன்றைக்குச் சுதந்திரம் கிடைத்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் நிதர்சனமான உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேரறிஞர் அண்ணா வழியில் வந்தவர்கள். "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்று சொன்னதைப் போல, நில அபகரிப்புப் புகாரில் திமுக. வினர் தற்போது தொடர்ந்து சிறைச்சாலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த சிறைச்சாலைக்கும் செம்மை சேர்க்க நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

"ஆடு மற்றும் கறவை மாடு வழங்கும் திட்டத்தின்மூலம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய எங்களின் தாயே, மாசில்லா உங்கள் உள்ளத்தைப் போல தமிழகத்தையும் மாசில்லா மாணிக்கமாக்க, சுற்றுச்சூழலை மேம்படுத்திட, வனப் பாதுகாப்பைப் பெருக்கிட, நிதி உதவியை உயர்த்தி வழங்கியுள்ள அன்னையே, சூரிய ஒளியில் மின்சாரம் தயாரிக்கும் பூங்கா ஒன்றினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாடு நிறுவனம் அமைக்க ஏற்பாடு செய்து, பிற மாநிலங்களுக்கு மின் துறையிலும் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தி, இருண்ட தமிழகத்தின் இருளை நீக்கி, எல்லோரின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒளியைப் பரப்பிய தமிழகத்தின் ஒளி விளக்கே" என்கிறார்கள் மக்கள்.

பிற்பகல் 12-35

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மீது எல்லையில்லா கருணை கொண்டு, ஈடில்லா பல்வேறு புதிய திட்டங்களை வகுத்து, வாழும் அம்பேத்கர் ஆகவும், மக்களின் இதயக் கனியாகவும் திகழும் எங்கள் அன்னையே! உங்களுக்கு எத்தனை கோடி நன்றி சொல்வது? கருணாநிதியைப் போல வாய் வார்த்தைகளில் சொல்லாது, எல்லாத் துறைகளும் ஏற்றம் பெறுகின்ற வகையில் நிதியை வாரி வாரி வழங்கியிருக்கும் நவீன கர்ணன் அம்மா நீங்கள்! எத்தனை நன்றிகள் எப்படித் தங்களுக்குச் சொல்வது? 'காடு விளைந்தென்ன மச்சான், நமக்குக் கையும் காலும்தானே மிச்சம்' என்று பட்டுக்கோட்டை

கல்யாண சுந்தரம் பாட்டில் உள்ள உள்ளுணர்வை மனதிலே கொண்டு விவசாயிகளின் வாழ்க்கையில் வசந்தங்கள் வீச பல திட்டங்களை நீங்கள் அறிவித்துள்ளீர்கள் தாயே!

நீர் வளம் பெருக, நதிநீர் இணைப்புத் திட்டம். காவிரி, வைகை, குண்டாறு, மணிமுத்தாறு ஆகிய நதிகளை இணைக்க எண்ணற்ற திட்டங்கள், தமிழக வரலாற்றிலேயே குறிப்பிட்ட தேதிக்கு முன்பாகவே மேட்டூர் அணையிலிருந்து நீரை விடுவிக்க ஆணை பிறப்பித்து விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்துவிட்டீர்கள் தாயே!

தற்போது திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் மகளிருக்கென ஒரு தோட்டக் கலைக் கல்லூரி, தேசிய சட்டக் கல்லூரி, இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம், (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சி, அண்ணல் காந்தி மருத்துவமனையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு சிகிச்சை மையம், காவிரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை, ஏழையெளிய மாணவர்கள் படித்துப் பயன்பெறும் வகையில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி என திட்டங்களை அறிவித்துள்ளீர்கள். மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் எதிர்காலத்தில் திருச்சியில் தோட்டக்கலைக் கல்லூரியில் பூக்க உள்ள ஒவ்வொரு மலரின் சார்பாகவும் உங்களை மண்டியிட்டு வணங்குகிறேன், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அன்னையே! உங்களின் நிதிநிலை அறிக்கையைப் பார்த்து தமிழகமே மகிழ்ச்சியோடு, மனநிறைவோடு, எல்லையில்லா இன்பத்தில் திளைத்துள்ளது. இது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை. தலை குனிந்த தமிழகம் தலை நிமிர்ந்து நின்றது. இருளடைந்த தமிழகம் ஒளி வெள்ளம் கொண்டது. அமைதியிழந்த தமிழகம், அமைதி பெற்றது. நிலையிழந்த தமிழகம் வளர்ச்சிப் பாதையில் செல்கிறது அம்மா.

இந்த பட்ஜெட் ஒரு சாதாரண பட்ஜெட் அல்ல, சரித்திரம் படைக்கும் பட்ஜெட். இந்தியாவிலே உள்ள பெரிய மாநிலங்களான உத்தரப்பிரதேசம், மஹாராஷ்டிரம், ஆந்திரம் இவற்றிற்கு அடுத்தபடியாக — நான் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு இந்தியாவிலேயே இருக்கின்ற மிகப் பெரிய மாநிலம் உத்தரப்பிரதேசம். அந்த மாநிலத்தினுடைய ஓராண்டு பட்ஜெட் 1 இலட்சத்து 69 ஆயிரம் கோடி ரூபாய். மஹாராஷ்டிரா மாநிலத்தினுடைய ஓராண்டு பட்ஜெட் ஒரு இலட்சத்து 54 ஆயிரம் கோடி ரூபாய். ஆந்திராவினுடைய ஓராண்டு பட்ஜெட் ஒரு இலட்சத்து 28 ஆயிரம் கோடி ரூபாய். அந்த வரிசையிலே இந்த



மாநிலங்களைவிட சிறிய மாநிலமான நம்முடைய தமிழகத்தில் இன்றைக்கு வரலாற்றிலே எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு ஒரு இலட்சத்து 1,388 கோடி ரூபாய் அளவிற்கு நீங்கள் பட்ஜெட்டை இன்றைக்கு அறிவித்து இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து நீங்கள் மேற்கொண்டு வருகின்ற பொருளாதார நடவடிக்கைகளால் நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவில் இருக்கின்ற உத்தரப்பிரதேசம், மஹாராஷ்டிரா, ஆந்திரா போன்ற மாநிலங்களைவிடக் கூடுதலாக அடுத்து வரும் ஆண்டுகளில் நிச்சயமாக பட்ஜெட்டில் நிதி வழங்குவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குப் பாதகமாக வெளியே எறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு சாலை போடும் திட்டத்தை இந்த பட்ஜெட்டில் அறிவித்திருக்கிறார்கள். அது முற்றிலும் புதியது. உலகிலேயே அரிது. நாம் நடைமுறைப்படுத்துவதைப் பார்த்து பிளாஸ்டிக் கழிவுகளை நமது நாட்டிற்கு அனுப்பும் அமெரிக்கா, ஜெர்மன் போன்ற நாடுகளும் அதை நடைமுறைப்படுத்த முன்வரலாம், முன்வரவேண்டும். அனைத்து நாடுகளுக்கும் இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் திசை, அம்மா அவர்கள்தான் பாதை, அம்மா அவர்கள்தான் பயணம்.

அதேபோல, திடக்கழிவு மற்றும் கழிவு நீர் மேலாண்மை, எவரும் யோசித்திராத அறிவியல் திட்டம் இது. அதை நடைமுறைப்படுத்த ஹெலிகாப்டரில் சென்னை மாநகரம் முழுவதையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுற்றிப் பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். இன்னும் மூன்று மாத காலத்தில் குப்பையில்லா சென்னையைப் பார்ப்பதற்கு இன்றைக்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். அம்மா பார்த்தால் அது குரு பார்வை, அப்புறம் வேண்டாம் மறு பார்வை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-40

மாநிலத்தின் வளர்ச்சியில் தொழில் வளர்ச்சி முக்கியம். எனவே, தொழிற்சாலைகளைக் கொண்டு வருவதற்குத் தேவையான நிலங்களை விவசாயிகளிடமிருந்து பெறுவதில் புதிய திட்டங்களை வகுத்திருக்கின்றார்கள். எனவே, இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையிலே, இரவு பகல் பாராமல் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ணுங்கருத்துமாகப் பணியாற்றி ஒரு

புதிய அணுகுமுறையைத் தமிழகத்திலே கொண்டு வந்திருக்கின்றார்கள். தொழிற்பூங்காக்கள் ஏற்படுத்தப்படும் என்று பட்ஜெட்டிலே அறிவித்திருக்கின்றார்கள். சமீபத்திலே நம்முடைய தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. உதயகுமார் அவர்களுடன், திருச்சியிலே ஒரு I.T. Park-ஐப் பார்க்கச் சென்றிருந்தோம். அந்த I.T. Park-ஐப் பார்க்கின்றபொழுது என்ன தோன்றியதென்று சொன்னால், Real Estate வியாபாரிகளுக்காகவே ஒரு இடத்தைத் தேர்வு செய்து 60 கோடி ரூபாய் முதலீட்டில் அங்கே ஒரு கட்டடத்தைக் கட்டியுள்ளார்கள். எந்தப் பன்னாட்டு நிறுவனமும் அங்கே இதுவரை வரவில்லை. எந்தப் பன்னாட்டு நிறுவனமும் தொழில் தொடங்குவதற்கு, படித்த மாணவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு அங்கே வரவில்லை. 10 நிறுவனங்கள் இடம் வேண்டுமென்று அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். அப்படி ஒப்பந்தம் செய்கின்றபோது அங்கே இருக்கின்ற தி.மு.க.-வினுடைய முக்கியப் புள்ளிகள், மாவட்டச் செயலாளர்கள் போன்றவர்கள் எல்லாம், வரக்கூடிய அந்தப் பன்னாட்டு நிறுவனங்களை மிரட்டி, தங்களையும் தங்கள் குடும்பத்தாரையும் அந்தத் தொழிலிலே பங்குதாரர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று மிரட்டியதன் காரணமாக, எந்த நிறுவனமும் அங்கே இதுவரை வரவில்லை. இப்படித்தான் கடந்த தி.மு.க. ஆட்சியிலே I.T. Park-கள் எல்லாம் எங்கேயும் தொடங்கப்படாமல் கிட்டத்தட்ட 60 கோடி ரூபாயை அங்கே வீணடித்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டத்தின் காரணமாக, இன்றைக்கு உண்மையான தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் நிச்சயமாக தமிழ்நாட்டில் வரும். திருச்சியிலே இருக்கின்ற அந்தப் பூங்காவும் மேன்மைபெற இந்த நேரத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். இப்போது அறிவித்திருக்கின்ற இந்த பட்ஜெட்டை அனைவரும் பாராட்டுகிறார்கள். நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியாளர்களால் தமிழகத்திலே 7 இடங்களிலே 8 நிலையங்களாகத் தொடங்கப்பட்டிருக்கிற தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள்-I.T. Parks என்று சொல்லக்கூடியவையெல்லாம் சிறுவர் பூங்காவிற்குக்கூட தகுதி





இல்லாத நிலையிலே, விளம்பரத்தை மையமாக வைத்துத் தொடங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம், வாழும் மனித தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, தகவல் தொழில்நுட்பத் துறைக்கு உரிய ஆணைகளை வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையை ஏற்று, 7 மாவட்டங்களிலே அமைந்திருக்கின்ற I.T. Park-களையெல்லாம் ஆய்வு செய்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் சொன்னவாறு, ஒரு Real Estate Lay-out ஆகத்தான் அவை இருக்கின்றதேயொழிய, உண்மையாக M.N.C. என்று சொல்லக்கூடிய நிறுவனங்கள் அங்கே தொழில் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு எந்த அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லை. அதைத்தான் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால், இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையிலே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிதிநிலை அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது. மிக விரைவாக உரிய மார்க்கெட்டிங், Road Show-க்களெல்லாம் மிக விரைவாக மேற்கொண்டு, உண்மையான M.N.C. கம்பெனிகளை தொழில் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக இந்த மன்றத்திற்கு நான் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.

**திரு. ஆர். மனோகரன்:** நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒவ்வொரு திட்டத்திற்கும் இந்த ஆண்டுக்கு எவ்வளவு நிதி தேவை என்று நிதி ஒதுக்கி, அந்தத் திட்டங்களையெல்லாம் செயலாக்குவதற்காக நம்முடைய கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் கோட்டைக்கு வந்து அதிகாரிகளையும் அமைச்சர்களையும் அழைத்து, இரவு பகல் பாராமல் அந்தத் திட்டங்களை உருவாக்கி இன்றைக்கு வடித்திருக்கின்ற இந்த பட்ஜெட் முழுக்க முழுக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணத்தில் உருவான பட்ஜெட் என்பதுதான் நிதர்சனமான உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு நாட்டு மக்கள் எதை எதிர்பார்த்தார்களோ அதைத்தான் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியாக இருந்த 5 ஆண்டுக் காலத்தில் அவர்கள் பொதுக் கூட்டங்களிலே அறிவித்த அறிவிப்புகளையெல்லாம் இன்றைக்கு நடவடிக்கையில் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் நில அபகரிப்புச் சட்டத்தின்மூலம் நில அபகரிப்புச் செய்தவர்கள்மீது இன்றைக்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். யார் யார் கடந்த ஆட்சியிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்கள்தான் இன்றைக்குக் காவல் துறையிலே புகார் செய்து, அந்தப் புகார்களின் அடிப்படையிலே தி.மு.க.வினர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இன்றைக்கு கருணாநிதியும், அவருடைய மகனும், ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் பழி வாங்குகிறார்கள் என்ற ஒரு கருத்தைத் தவறான முறையிலே பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் யாரையும் பழி வாங்க நினைப்பவர் அல்ல; கருணாநிதியும், கருணாநிதியின் குடும்பமும், கடந்த 5 ஆண்டுக் காலம் செய்த அட்டூழியங்கள், தி.மு.க.-வினர் செய்த அட்டகாசங்களையெல்லாம் இன்றைக்கு நாட்டு மக்கள் வெறுத்துதான், திருத்தணியிலேயிருந்து, கன்னியாகுமரி வரை இருக்கின்ற ஒட்டுமொத்த தமிழர்கள் அத்துணைப்பேரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வாக்களித்து, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக வெற்றிபெறச் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு தி.மு.க.-வினர் தாங்கள் செய்த தவறுகளை மறைப்பதற்காக, ஏதோ பழி வாங்குகின்ற நிகழ்வு என்று அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு காவல் துறையிடம் மக்கள் கொடுக்கின்ற புகாரின் அடிப்படையிலேதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு பட்ஜெட்டிலே அறிவித்திருக்கின்ற அத்துணைத் திட்டங்களும், நாட்டு மக்களுடைய நல்ல வளர்ச்சிக்காக, நாட்டினுடைய வளர்ச்சிக்காக அறிவிக்கப்பட்டுள்ளன. கடந்த தி.மு.க. ஆட்சியில் ஊழலுக்கும், வன்முறைக்கும், நில அபகரிப்புக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைத்தவர் கருணாநிதி. தி.மு.க-வின் நில அபகரிப்பால் பாதிக்கப்பட்டோரிடமிருந்து ஆயிரக்கணக்கான புகார்கள்



நாள்தோறும் வந்தவண்ணம் உள்ளன. சரியான நடவடிக்கைகளை எடுத்து, இன்றைக்குச் சட்டம்-ஒழுங்கைச் சீராக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பராமரித்து வருகிறார்கள். நோயற்ற வாழ்வு, பொருளாதார வளர்ச்சி, திருப்திகரமான விளைச்சல், தகுந்த பாதுகாப்பு உள்ளிட்ட ஐந்தும் ஒரு நாட்டிற்குச் சிறப்பு அளிப்பவை. அந்த வகையிலே இந்த பட்ஜெட்டை கண்ணுங்கருத்துமாகத் தயார் செய்து தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையிலே கொண்டு செல்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில், மாண்புமிகு உறுப்பினர், திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14-ஆவது சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின் முதல் நிதிநிலை அறிக்கையில், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் என்னைப் பேச அனுமதித்ததற்காக தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். நமது தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையோடு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்வைத்த நிதிநிலை அறிக்கையை, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பொதுவாக நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். கடந்த 4ஆம் தேதி, இதே அவையில், நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், நிதிநிலை அறிக்கையை காலை 10-40 மணிக்குத் துவக்கி, வாசித்துக் கொண்டிருந்த நேரத்தில், நேரம் செல்லச் செல்ல, இந்த அவையிலே எதிர் வரிசையிலே அமர்ந்திருந்த நான், ஒரு நேரத்தில் என்னையே நான் கிள்ளிப் பார்த்துக் கொண்டேன். நீண்ட காலமாக, இப்படிப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கைமூலம் தமிழகத்திற்குத் திட்டங்கள் வரவேண்டுமென்று போராடிக்கொண்டிருந்த எங்களுக்கு, இப்படி வந்திருக்குமா என்ற சந்தேகத்தோடு, இது உண்மைதானா என்று என்னை நானே கிள்ளிப் பார்த்துக்கொண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது உண்மைதான் என்று தெரிந்தது. இருந்தாலும் நேரம் செல்லச் செல்ல அதுவும் எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தி, பக்கத்திலேயிருந்த எங்களுடைய குழுவின் தலைவர் திரு. ஆறுமுகத்தையும் கிள்ளிப் பார்த்துக்

கொண்டேன். (சிரிப்பு) அவர், திடீரென்று ஏன் கிள்ளுகிறீர்கள் என்று கேட்டார். இல்லை, இது உண்மைதானா என்று கேட்டேன். அதனடிப்படையில் ஒரு வேளாண் துறையை, எந்த அளவிற்கு நுனியிலிருந்து அடி வரை ஆராயமுடியுமோ, அப்படி ஆராய்ந்து, ஒவ்வொரு பகுதியாக; அதனுடைய தொடர்ச்சியாக, கால்நடை வளர்ப்பு, மீன் வளம் என்று இணைத் தொழில்களையும் இணைத்து, நிலவளம், நதிநீர் என்று எல்லா அம்சங்களிலும் அதைச் சிறப்பாகச் செய்திட வேண்டுமென்ற அடிப்படையில் திட்டங்களைத் தீட்டி, அதோடு நிதிகளும் ஒதுக்கீடு செய்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதுமட்டுமல்ல; நிதிநிலை அறிக்கை, என்ன காரணத்தாலோ தெரியாது; 99 பக்கங்களைக் கொண்டதாக அமைந்திருக்கிறது. பொதுவாக தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும், ஒரு பழக்கம் இருக்கிறது. எதையும் குத்தகைக்கு எடுத்தால், 99 வருடம் lease போடுவதாகச் சொல்கிறார்கள். என்ன காரணம் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையை இங்கே முறையாகச் செயல்படுத்தினால், 99 ஆண்டுகளுக்கு தமிழகத்தை, அதனுடைய வளர்ச்சியை யாராலும் தடுத்திட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு ஒரு சிறப்புக்குரிய நிதிநிலை அறிக்கையாக இன்றைக்கு இதை முன் வைத்திருக்கிறார்கள். எனவே, இதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். தமிழ்நாட்டில் மக்கள் தொகை 7 கோடியைத் தாண்டியுள்ள நிலையில் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டம் ரூபாய் ஒரு இலட்சம் கோடியைத் தாண்டியுள்ளதை மகிழ்சியோடு வரவேற்கிறேன்.

பிற்பகல் 12-50

வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் இரண்டு அம்சங்களை நான் பார்க்கிறேன். ஒன்று, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடிய மக்கள் வாழ்கின்ற தமிழகத்தில் இன்றைக்கு அவர்களுக்கான உடனடித் தேவையான மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான திட்டங்களும், நிதி ஒதுக்கீடுகளும் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் இலவச அரிசி, திருமண உதவித் திட்டம், மாணவ மாணவியருக்கான மடிக் கணினி வழங்குவது, விவசாயத் தொழிலாளர்களுக்குக் கறவை மாடுகள், ஆடுகள் மற்றும் மிக்சி, கிரைண்டர், மின் விசிறி இவற்றோடு குழந்தை பெறும் மகளிருக்கு உதவித் தொகை ரூபாய் 12 ஆயிரம், முதியோர் ஓய்வூதியம் ரூபாய் ஆயிரம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். அப்படி எல்லாத் திட்டங்களையும்,



உருவாக்கியிருக்கிறார்கள். அதேசமயத்தில், தமிழகத்தினுடைய வளர்ச்சியை மையமாகக் கொண்டு வேளாண் தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை, கால்நடை வளர்ச்சி, மீன்பிடித் தொழில் வளர்ச்சி, சிறு, குறு தொழில்கள் மற்றும் உள்கட்டமைப்புகள் மற்றும் மின் உற்பத்தியில் கூடுதல் கவனம் என்ற வகையில் நிலையான வளர்ச்சிக்குக் கவனம் செலுத்தியதையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன்.

வரவு-செலவுத் திட்டம் தமிழகத்தின் உண்மையான வளர்ச்சியில் அக்கறைகொண்டு உருவாக்கப்பட்டுள்ளதாக உணர்கிறேன். இந்தியாவிலே நகரமயமாக்கல் என்பது தமிழகத்தில் அதிவேகமாக நடந்தாலும், இன்றும் தமிழக கிராமப்புறங்களில் 20 சதவிகிதம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களின் வாழ்வாதாரமாக விவசாயம் உள்ளது. இந்நிலையில் பெரும்பகுதி மக்கள் சார்ந்துள்ள வேளாண் தொழிலுக்கு, முதன்மைத் தொழில் என்றும் அதன் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்படுமென்றும் ஆளுநர் உரையில் கூறியதுபோல, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து, செயல் திட்டத்தை அறிவித்ததற்காக மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண் தொழில் வளர்ச்சி என்பது ஒரு சவாலான பணியாகும். ஆனால், இத்தொழிலின் வளர்ச்சிதான் பெரும்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும். அந்தவகையில் வேளாண் துறையைச் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்துவதில் மிகுந்த எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் இருக்க வேண்டுமென்பதைக் கூறிக்கொள்கிறேன். வேளாண் தொழில் வளர்ச்சிக்கு அதன் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்து பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முனைந்ததை வரவேற்கிறேன். வேளாண் தொழிலோடு ஒருங்கிணைந்து செயல்படுத்த வேண்டிய கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடித் தொழிலுக்கு முக்கியத்துவம் அளித்ததையும் வரவேற்கிறேன். அதேசமயத்தில், Bt. கத்தரிக்காய், பருத்தி போன்ற பயிர்களைப் பரவலாக்குவோம் என்பதை தமிழக அரசு கைவிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்,

Bt. கத்தரிக்காயை ஊக்கப்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். உணவுப் பொருட்களைப் பொறுத்தவரையிலும் இந்த அரசு அதுபோன்ற நிலைகளை மேற்கொள்ளாது என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் முதலிலேயே தெரிவித்திருக்கிறார்கள். Bt. பருத்தியைப் பொறுத்தவரையிலும் நாம் அதை உற்பத்தி செய்து விதைகளைத் தருவதும் இல்லை. தனியார் தந்து கொண்டிருக்கிறார்கள். அதைப்போல, குஜராத் போன்ற மாநிலங்கள் 90 சதவிகிதம் அதைப் பயன்படுத்தி, பருத்தியை உற்பத்தி செய்திருக்கிறார்கள். மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா போன்ற பகுதிகளிலும் செய்திருக்கிறார்கள். ஆனால், இந்த அரசு அதை ஊக்கப்படுத்துவது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயத்திற்கு நிலம் மிக அவசியம். வேளாண் நிலங்கள் பற்றிய தெளிவான கொள்கையை மாநில அரசு உருவாக்குவது காலத்தின் அவசியம். அறிக்கையில், "தொழில் வளர்ச்சிக்காக நிலத் தேவையை நிறைவு செய்ய 'நில வங்கி' துவக்கப்படும்; அதில் முன்கூட்டியே நிலம் கையகப்படுத்தி தேவைக்குப் பயன்படுத்தப்படும்" என்று சொல்வது சரியான நடைமுறையை உருவாக்காது என்று கருதுகிறேன். ஏனெனில், வளர்ந்துவரும் தேவைகளுக்கேற்ப நிலத்தின் மதிப்பு ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டே வரும் நிலையில், முன்கூட்டியே நிலத்தைக் கையகப்படுத்துவது மக்களுக்கு மிகப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தும். எனவே, தேவைக்கேற்ப தேவையான காலத்தில் விவசாயமற்ற நிலங்களைப் பயன்படுத்துவதும், கூடுதல் மதிப்பில் நிலம் கையகப்படுத்துவமான நடைமுறைகளை உருவாக்குவதும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளின் விளைபொருட்களுக்கு இலாபகரமான விலை என்பது மிக மிக அவசியமாகும். எனவே, விவசாய விளைபொருட்களுக்கான விலையைப் பற்றிய தெளிவான கொள்கையை நமது அரசு உருவாக்கிட வேண்டும். விளைபொருட்கள் மதிப்பைக் கூட்டுவது, விவசாயிகள் குழுக்கள், கிராமப்புற நில பயன்பாடு, உற்பத்தி, விளைபொருட்கள் சந்தைப் படுத்தப்படுதல், இவற்றில் நம்மைவிட கூடுதலான மக்கள்தொகையைக் கொண்ட



சீனாவில் பல வழிமுறைகள் வெற்றிகரமாகக் கையாளப்படுகின்றன. இதன்மூலம் கிராமப்புறப் பொருளாதாரம் வளர்வதோடு உணவுப்பொருட்களின் உற்பத்தியும் தன்னிறைவை அடைந்துள்ளன. எனவே, தமிழகத்திலிருந்து சீனாவிற்கு ஒரு குழுவை அனுப்பி ஆய்வுகள் மேற்கொண்டு நம்முடைய சூழலுக்கு ஏற்ப நாமும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

தமிழகத்தில் எல்லாப் பகுதிகளிலும் சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்தப்படும் என்ற கொள்கை தொடர்ந்து கூறப்பட்டாலும், இதுவரை தேவையான அளவு தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படாத நிலையே நீடிக்கிறது. குறிப்பாக Graphite என்ற அரிய கனிமம் சிவகங்கை மாவட்டத்தில் கிடைக்கிறது. நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்தில்தான் Graphite கனிமத்தைச் சுத்திகரிக்கக்கூடிய தொழிற்சாலை தொடங்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை அதிலிருந்து உபத் தொழில்கள் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. ஆனாலும், அந்தத் திட்டம் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி Graphite உபதொழிற்சாலையை உடனடியாகத் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நில உரிமையாளர்களைப் பாதிக்காத வண்ணம் தனியார் நிலத்தைக் கையகப்படுத்த நில வங்கியை அரசு ஏற்படுத்தும் என்று தெளிவாக அறிக்கையில் கூறியுள்ளார்கள் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வீட்டுமனைப் பட்டா இல்லாமல் சுமார்

ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய இயக்கம் தொடர்ந்து அதற்கான இயக்கங்களை எல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், மூன்று சென்ட் நிலத்திற்கு வீட்டுமனைப் பட்டா இல்லாத குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்கும் திட்டத்தையும், ஏற்கெனவே குடியிருந்து வரக்கூடியவர்களுக்கு பல காரணங்களினால் பட்டா கிடைக்காத நிலை இன்னும் நீடித்துக்கொண்டிருக்கிறது; அவர்களுக்குப் பட்டா கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையையும் நமது அரசு ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நலத் திட்டங்கள் பயனாளிகளுக்கு எளிதாகக் கிடைக்கும் நடைமுறைகளை உருவாக்க வேண்டும். திட்டங்களைச் சிறப்பாக அறிவித்து, அதனுடைய பயன் பயனாளிகளுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னால், 'நரி திராட்சைப் பழத்தைக் கவ்வ' நினைத்த கதையாக மாறிவிடும். எனவே, நிபந்தனைகளைத் தளர்த்திட வேண்டுமென்று அன்புபோடு கேட்டுக்கொள்கிறேன். இதில், முதியோர் உதவித் தொகை, விதவைகள் உதவித் தொகை, உடல் ஊனமுற்றவர்கள் உதவித் தொகை என்பவை வாழ்க்கையில் எந்தப் பிடிமானமும் இல்லாத மக்களுக்கான திட்டங்களாகும். எனவே, இப்பிரிவு மக்களுக்கு அந்தத் திட்டங்கள் போய்ச் சேருவதற்கு வயது மட்டுமே நிபந்தனை என்ற அடிப்படையில், அந்த உதவித் தொகைகளை வழங்கிட வேண்டும். ஏனென்று சொன்னால், இன்றைக்கு மத்திய அரசு வழங்கக்கூடிய இந்திரா நினைவு முதியோர் உதவித் தொகையில், வறுமைக் கோடு என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது. வறுமைக் கோட்டுப் பட்டியல் என்பது, 10 ஆண்டுகளுக்கு முன்னால் எடுக்கப்பட்டது. அது தவறான பட்டியல். எனவே, உண்மையான ஏழைகளுக்கு முதியோர் உதவித் தொகை கிடைக்காத நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. எனவே, வயதை மட்டுமே நிபந்தனையாக வைத்து உதவித் தொகைகளை வழங்கிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். விதவைப் பெண்களுக்கான உதவித் தொகை வழங்குவதற்குரிய நிபந்தனைகளும் தளர்த்தப்பட வேண்டும். 18 வயது நிறைந்த மகன் இருந்தால்கூட, அந்த விதவைகளுக்கான உதவித் தொகை நிறுத்தப்படுகிறது. அந்த நிபந்தனையும் தளர்த்தப்பட வேண்டும்.

அதைப்போல, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த திருமண உதவித் திட்டம் சிறப்பானது; அதை நான் வரவேற்கிறேன். கடந்த ஆளுநர் உரையிலும் அதை நான் வரவேற்றுப் பேசியிருக்கிறேன். ஆனால், அந்த உதவித் திட்டத்தில் ஆண்டு



வருமானம் ரூ.24,000/- என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, பல பேருக்கு அந்த உதவித் தொகை கிடைக்காத ஒரு நிலை நீடிக்கிறது. ஆண்டு வருமானம் ரூ.24,000/- என்பதை மாற்றி, ரூ.1,00,000/- வரை வருமானம் இருக்கக் கூடியவர்களுக்கு அந்த உதவித் தொகை கிடைக்க வேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்கினால், பெரும் பகுதி மக்களுக்கு அந்தத் திட்டத்தின் பயன் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வறுமைக் கோட்டு பட்டியல் என்பதை யதார்த்த நிலையிலிருந்து தேர்வு செய்யப்பட வேண்டும். வறுமைக் கோட்டுப் பட்டியலுக்கு விதிக்கப்பட்டிருக்கிற நிபந்தனைகள் மறுபரிசீலனை செய்யப்பட்டு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூபாய் இரண்டு கோடியாக உயர்த்தியதை வரவேற்கிறேன். அதேசமயம், தொகுதி மறுசீரமைப்பில் வாக்காளர்களின் எண்ணிக்கையை மட்டுமே வைத்து இன்றைக்குத் தொகுதிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், சிவகங்கை போன்ற தென் மாவட்டங்களில் இருக்கக்கூடிய கிராமப்புறங்களைச் சார்ந்திருக்கின்ற தொகுதிகள் எல்லாம் பரப்பளவில் மிகப் பெரியதாக மாறியிருக்கின்றன. என்னுடைய சிவகங்கை தொகுதியில் ஒரு நகராட்சி, ஒரு பேரூராட்சி, மூன்று ஒன்றியங்கள் இருக்கின்றன. அதிலே கிட்டத்தட்ட 105 ஊராட்சிகள், 500-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. எனவே, அப்படிப்பட்ட தொகுதிகளுக்கு ஒரே அளவிலான ரூபாய் இரண்டு கோடி கொடுக்கும்போது நாங்கள் கண்டிப்பாக ஒரு கிராமத்திற்கு ஒரு ஊராட்சிக்குக்கூட நிதியை ஒதுக்க முடியவில்லை. எனவே, அப்படிப்பட்ட தொகுதிகளுக்குக் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். மக்கள் தொகையை மட்டுமே பார்த்து அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். பரப்பளவைப் பார்த்து, கிராமங்களுடைய எண்ணிக்கையைப் பார்த்து, அதற்குத் தகுந்தாற்போல் கொஞ்சம் ஏற்ற இறக்கங்கள் இருந்தாலும்,— கிராமப்புறங்களிலிருந்து வந்திருக்கிற எல்லா உறுப்பினர்களும் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். — அப்படி ஒரு திட்டத்தை நீங்கள் தயாரித்து, கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்தபட்சம் எல்லோருக்கும் இல்லையென்றாலும், கிராமப்புறங்களைச் சார்ந்திருக்கக்கூடிய எங்களுடைய தொகுதிகளுக்கு ரூ. 4 கோடி அளவிலாவது நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சு. குணசேகரன்] [2011 ஆகஸ்ட் 8
பிற்பகல் 1-00

அதைப்போல, தமிழகத்தின் தொழில் மற்றும் விவசாய வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் மக்களின் அன்றாடப் பயன்பாட்டிற்கு மின்சாரம் மிகவும் அவசியம். அதை உணர்ந்து, மின் தேவை பூர்த்தி செய்யப்படும் என்பதை வரவேற்கிறேன். அதில் குறிப்பாக, சூரிய மின் சக்திக்கு முக்கியத்துவம் அளித்து, தெரு விளக்குகள் பயன்பாட்டில், சூரிய மின் விளக்குகளுக்கு வழிவகுத்தது சரியானது. ஆனால், தற்போதுள்ள நடைமுறையில் அந்த மின் விளக்குகள் அமைப்பதைத் தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு மின் விளக்குக்கும் தனியாக சூரிய ஒளிமூலம் மின்சாரம் எடுக்கிறார்கள். அது பராமரிக்கப்படாமல் போகிறது. அதற்குப் பதிலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 20, 25 மெகா வாட் அளவிற்கு உற்பத்தியைத் தொடங்குகிற அளவில் சூரிய ஒளி மின் நிலையங்களை அரசே அமைத்தால், அதிலிருந்து தெரு விளக்குகளுக்கு மின்சாரம் வழங்கிட முடியும்.

அதைப்போல, சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் அதிகமான சூரிய வெளிச்சம் கிடைக்கக்கூடிய பகுதிகள்; உஷ்ணம் நிறைந்த பகுதிகள். அந்தப் பகுதிகளிலே ஆய்வுக் கூடங்களையும், சூரிய மின் உற்பத்திக்கான உதிரி பாகங்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளையும் கொண்டுவந்து, தொழில் வளத்தையும் இதன் மூலமாகப் பெருக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வரவு-செலவுத் திட்டத்தில், சாலைகள், பேருந்து நிலையங்கள் மற்றும் வணிக வளாகங்கள் போன்றவற்றை அமைப்பதற்குத் தனியாரையும் பயன்படுத்துவோம் என்ற ஒரு சூழலைச் சொல்லியிருக்கிறீர்கள். அந்தத் தனியார் என்பதை எடுத்துவிட்டு, அரசே முழுமையாகச் செயல்படுத்திட வேண்டுமென்று நான் அன்போடு தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஒரு இலட்சம் கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது; பெருமைக்குரிய செயல். அதேநேரத்தில், 1,18,000 கோடி ரூபாய் கடன் என்பதும் அதிர்ச்சி அளிக்கக்கூடிய ஒரு செய்தியாக இருக்கிறது. மக்கள் நலத் திட்டங்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் 9,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள்; மகிழ்ச்சி. ஆனால், அதே சமயத்தில் வட்டி மட்டுமே ஆண்டுக்கு 8,000 கோடி ரூபாயைக் கட்டுகிறோம். இதுபோக,



2011 ஆகஸ்ட் 8] [திரு. சு. குணசேகரன்]

இந்தத் திட்டங்களில் வரக்கூடிய பணம்—9,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், வட்டி மட்டுமே 8,000 கோடி ரூபாய் கட்டுகிறோம்—எனவே, உற்பத்தி சார்ந்த திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து ஊழலற்ற திட்டச் செயலாக்கத்தின் மூலமாகவும், பாகுபாடற்ற நிருவாக நடைமுறைகளைச் செயல்படுத்துவதன் மூலமாகவும் எதிர்காலத்தில் தமிழகத்தின் கடன் சுமையைக் குறைக்க முடியும். இதில் அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு நாம் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, நமது மாநிலத்தின் ஆண்டு வருமானத்தில் சுமார் ரூபாய் 17,000 கோடி வருவாய் டாஸ்மாக் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இது தமிழக மக்களின் நலனுக்கு உகந்ததுதானா? தமிழக மக்களின் உடல் நலத்தை, மன வலிமையை, சிந்தனை ஆற்றலைச் சூறையாடும் மதுவை விற்பதும், இலாபம் பார்ப்பதும் 'கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கியவன்' கதையாக முடிந்துவிடும். எனவே, மதுக் கொள்கையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு சில முடிவுகளை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தல், காலத்தில் அறிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், ஒன்றியப் பெருந்தலைவர்கள், நகரமன்றத் தலைவர், பேரூராட்சி, மாநகராட்சித் தலைவர்கள் ஆகியோர் நேரடியாக மக்கள் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற நடைமுறையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட 11-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில், நான்கு ஆண்டுகளில் விவசாய வளர்ச்சிக்கு 0.51 சதவீதமும், தொழில் வளர்ச்சி, எதிர்பார்க்கப்பட்ட 9.2 விழுக்காடு இல்லாமல் 4.43 விழுக்காடு வளர்ச்சியாகவும், சிறு, குறு தொழில்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது உண்மைதான். அந்த அடிப்படையில்தான் அதனுடைய வளர்ச்சி கடந்த காலத்தில் இருந்திருக்கிறது. அது மட்டுமல்ல; அடிப்படையான மின்சாரத் துறையில் 40,000 கோடி ரூபாய் கடனும், 38,000 கோடி ரூபாய் திரண்ட நஷ்டமும் என்று, ஆக மொத்தம் 78,000 கோடி ரூபாய் நஷ்டத்தில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மிகப் பெரிய துறையான போக்குவரத்துத் துறை மிகப் பெரிய நஷ்டத்தில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் புள்ளிவிவரத்தில் ஒரு சிறு திருத்தம். 38,000 கோடி ரூபாய் அல்ல, 45,000 கோடி ரூபாய் அளவுக்குக் கடந்த ஆட்சிக் காலத்தில் நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** நன்றி. இந்நிலையில், தமிழகத்தில் தொழில், விவசாய வளர்ச்சி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் மிகப்பெரிய கேள்விக்குறியாக மாறும் அபாயம் இருப்பதாக நினைக்கிறேன். இவற்றை ஈடுகட்ட மக்கள் மீது வரி உயர்த்துவது என்ற நிலையிலிருந்து மாறுபட்டு, விவசாயம் மற்றும் தொழில் சார்ந்த உற்பத்தியைப் பெருக்குவதுதான் தீர்வாகும். அந்த அடிப்படையில், வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, மாநிலத்தின் மொத்தக் கடன் அளவு கவலையை அளிப்பதாக இங்கே தெரிவித்தார். மாநில அரசுக்குள்ள மொத்தக் கடன் அளவு 1,18,610 கோடி ரூபாய். மாநில அரசின் தற்போதைய கடன் சுமை, 2011-2012 ஆம் ஆண்டின் இறுதியில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 20.39 விழுக்காடு அளவே இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது 13-வது நிதிக் குழு நிர்ணயித்துள்ள அளவான 24.50 விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக 13-வது நிதிக் குழு என்ன சொல்லியிருக்கிறது என்றால், ஒரு மாநில அரசுக்கு 24.50 விழுக்காடு வரை கடன் இருக்கலாம் என்று சொல்லியிருக்கிறது. ஆகவே, மாநில அரசின் கடன் 20.39 விழுக்காடு என்ற அளவில் அதைவிடக் குறைவாகவே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமச்சீர் கல்வி தரம் உயர்த்தப்படவேண்டும் என்ற அரசின் கொள்கையில் மாறுபட்ட கருத்து யாருக்கும் இருக்கமுடியாது. ஆனாலும், சமச்சீர் கல்வியை இந்த ஆண்டே நடைமுறைப்படுத்தி, பாடத் திட்டங்கள் எதிர்காலத்தில் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். சமச்சீர் கல்வி என்பது பாடத் திட்டத்தில் மட்டுமல்லாது வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், ஆசிரியர் விகிதாச்சாரம் போன்ற எல்லாவற்றிலும் சமநிலையை உருவாக்கிட வேண்டும். ஒரே பாடத் திட்டமாக இருந்தாலும் தரமான கல்வி தங்கள் குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டுமென்ற எண்ணம் மக்கள் மத்தியிலே இருக்கிறது. அந்த எண்ணத்தில்தான் தனியார் பள்ளிகளை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தில் இந்த மாநில அரசுக்கு எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை; மாற்றுக் கருத்து கிடையாது. உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம்; உச்ச நீதிமன்றத்தின் ஆணையை எதிர்பார்த்து இருக்கிறோம். உச்ச நீதிமன்றம் இன்றேகூட தனது ஆணையை வழங்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். உச்ச நீதிமன்றத்தின் ஆணை பெறப்பட்டவுடன், உச்ச நீதிமன்றம் என்ன ஆணையிடுகிறதோ, அதன்படி இந்த மாநில அரசு நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்தில் சமச்சீரான கல்வி

எல்லோருக்கும் கிடைப்பதற்குத் தனியார் பள்ளிகளையும் அரசே ஏற்று நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி பிரச்சினைகள். என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய கல்லல் நகரம் என்பது, ஒன்றியத் தலைநகராக இருந்து கொண்டிருக்கிறது. சுமார் பதினைந்தாயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அங்கே இதுவரை ஒரு பேருந்து நிலையம்கூட கிடையாது. அதைப்போல ஒரு சுகாதார நிலையம்கூட இல்லை. ஆரம்ப சுகாதார நிலையமே இல்லாத ஓர் ஒன்றியத் தலைநகராக, தமிழ்நாட்டில் இது ஒன்று தான் இருக்கிறது. எனவே, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அங்கே ஒரு மருத்துவமனையை உருவாக்கிட வேண்டும். பேருந்து நிலையத்தையும் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க காளையார்கோவிலைத் தனி வட்டமாக உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிவகங்கையில் கிராஃபைட் தொழிற்பூங்கா அமைத்து கிராஃபைட் உபதொழில்கள் தொடங்கிடக் கேட்டுக்கொள்கிறேன். சிவகங்கையில் பொறியியல் கல்லூரி ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காளையார்கோவில் ஒன்றியத்தில் 2005 ஆம் ஆண்டு வெள்ளத்தால் உடைந்த விளங்காட்டூர், பாளையேந்தல் மற்றும் சிவகங்கை ஒன்றியம் தாம்போகி பாலங்களைச் சீரமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காளையார்கோவில் ஒன்றியம், கல்லல் ஒன்றியத்தில் விடுபட்டுப்போன காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கடந்த ஆட்சியில் பல கிராமங்கள், பாதிக்கும் மேற்பட்ட கிராமங்களுக்குக் குடிதண்ணீரே கிடைக்கவில்லை; இணைப்பே கொடுக்கவில்லை. ஆனாலும் அந்தக் கிராமங்களில் இன்றைக்கும் நிலத்தடி நீரின் TDS 2000-க்கும் மேலே தாண்டிப்போய்விட்டது. அதனாலே அந்தத் தண்ணீரையெல்லாம் பயன்படுத்தமுடியாத ஒரு நிலை நீடிக்கிறது. எனவே புதிய காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், அந்தப் பகுதிகளை இணைத்து எல்லா கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். சிவகங்கை ஒன்றியம், மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட பெரியார் அணையிலிருந்து நேரடியாகக் குழாய் மூலமாக தண்ணீர் கொண்டுவந்தால், சிவகங்கை மாவட்டத்திற்கு மட்டுமல்ல; மதுரை மாவட்டம் உள்ளிட்ட எல்லா மாவட்டங்களுக்கும் குடிதண்ணீர்



கொடுக்கலாம். எனவே, அந்தத் திட்டத்தை நமது தமிழக முதல்வர் அவர்கள் ஆய்வு செய்து மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை வட்டத்தில் வருவாய்க் கிராமங்களாக இருக்கும் காஞ்சரங்கால், பையூர் பிள்ளைவயல், மேலவாணியங்குடி, கொட்டக்குடி உள்ளடக்கிய நகரம் முழுவதும் இருக்கக்கூடிய A, B, C, D, E, F உள்ளடக்கிய 66 பிளாக்குகளில் எப்படியோ தெரியவில்லை, சர்க்கார் புறம்போக்கு என்று தவறுதலாகப் பதிவேடுகளில் பதிந்திருக்கிறார்கள். அதன் காரணமாக ஏற்கெனவே பட்டா வைத்திருப்பவர்கள்கூட சொத்துக்களை விற்றால், கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாகப் பட்டா வாங்கவே முடியவில்லை. சர்க்கார் புறம்போக்கு என்று தரமாட்டேன் என்கிறார்கள். கடந்த ஆட்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கு ஒரு குழுவை அமைத்தார். ஆனாலும் அந்த ஆட்சி முழுவதுமே பல முறை முயற்சி மேற்கொண்டும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இன்னும் அந்த நிலை நீடிக்கிறது. எனவே, நமது ஆட்சியில் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்தத் திருத்தத்தைச் செய்து பட்டா வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு, பட்டா தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல கிராமப்புற. . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், இதில் என்ன point of clarification?

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்றுமுன் நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, Bt பருத்தியை அரசு ஊக்குவிக்கிற முறையிலே இல்லை என்று தெரிவித்தார்கள். ஆனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையில் Bt பருத்தியைப் பரவலாக்குவது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், எதை எதைப் பரவலாக்குவோம், எதை எதைத் தீவிரப்படுத்துவோம் என்கிற முறையில் ஒரு பட்டியல் இங்கே போடப்பட்டிருக்கிறது. அதிலே Bt பருத்தி பரவலாக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அறிக்கையிலே இருப்பதற்கும், அமைச்சர் அவர்கள் சொல்வதற்கும் சற்று முரணாக இருக்கிறதே, அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு விளக்கத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். முதலிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, உணவுப் பொருளாக இருக்கிற Bt கத்தரிக்காயைப் பற்றிச் சொல்லி, அதற்குப் பிறகு Bt பருத்தியைப் பற்றியும் குறிப்பிட்டார். அப்போது நாங்கள் குறிப்பிடுகிறபோது—உணவுப் பொருள் எதுவாக இருந்தாலும், அதை இந்த அரசு அனுமதிப்பதில்லை என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைக்கே முடிவு செய்தார்கள்; இன்றைக்கும் அதே நிலைதான் இருக்கிறது. பருத்தியைப் பொறுத்தவரையில், இங்கே குறிப்பிடுகிறபோது, எல்லா நிலைகளிலும் இன்றைக்கு, நெல், பருத்தி போன்ற பல்வேறு தொழில்நுட்பத்தின்மூலமாக, அவை அதிகமாக உற்பத்தி செய்யப்பட வேண்டுமென்ற அடிப்படையிலேதான், அது அங்கே கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) பல்வேறு தொழில்நுட்பங்களை மனதிலே கொண்டு, இதுபோன்ற கருத்துகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

பருத்தியைப் பற்றிச் சொல்கிறபோது, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், பருத்தி உற்பத்தி குறைந்து கொண்டேயிருக்கிறது; நூற்பாலைகள் அதிகமாக இருக்கின்றது. இந்த நிலையில், அண்டை மாநிலங்களாக இருக்கிற குஜராத் போன்ற மாநிலங்களில் 90 சதவிகிதம் அதை அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல, கர்நாடகம், ஆந்திரா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான், நம்முடைய மாநிலத்திலும் அதை விரிவுபடுத்துவதற்கு - பருத்தியை மட்டும் விரிவுபடுத்துவதற்கு அரசு முனைந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதிலே நான் குறுக்கிடுவதாக நினைக்க வேண்டாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** முடித்துவிடுகிறேன். ஆனால், Bt பருத்தியைப் பொறுத்தவரையில், முதன்முதலில் ஆந்திராவில்தான் பயன்படுத்தினார்கள். அந்தப் பருத்தியைப் பயன்படுத்தித்தான் அங்கே நிலவளம் கெட்டு, விவசாயிகளுக்கு மிகப் பெரிய நஷ்டம் ஏற்பட்டது; விவசாயிகள் தற்கொலையே அப்போதுதான் தொடங்கியது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே, அந்த Bt பருத்தியில்கூட நமது அரசு கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். முன்பு நமது முதல்வர் அவர்கள்கூட, Bt பருத்தி, Bt கத்தரிக்காய் என்று வருகிற நேரத்தில், அவர்களுக்கு எதிர்ப்பாக நின்று, ஆதரவுக் குரல் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே, அந்த அடிப்படையில், அந்த Bt இரகத்தையே எடுத்து விடவேண்டும். அது மரபணு மாற்றம் செய்யப்பட்டது; அதனால் நிலமும், சுற்றுச்சூழலும் பாதிக்கப்பட்டு, மனித உடலுக்குமே தீங்கு ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டு, வெளிநாடுகளில் எல்லாம் தடை செய்திருக்கிறார்கள். எனவே, அந்த இரகத்தையே நாம் அங்கீகரிக்கக்கூடாது என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புற, நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில், நீண்ட காலத்திற்கு முன்பே கடன் பெற்று வீடு கட்டியவர்கள் கடன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, ஆந்திர மாநிலத்தில் இதுபோன்று பருத்தி உற்பத்தி செய்கிறபோது, அங்கு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அரசு அதைப்பற்றி வேளாண்மைத் துறையின் மூலமாக ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மிக்க நன்றி. கிராமப்புற, நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் நீண்ட காலத்திற்கு முன்பே கடன் பெற்று வீடு கட்டியவர்கள் பெற்ற கடன் தொகை தமிழகம்

முழுவதும் மொத்தம் 915 கோடி ரூபாய் உள்ளது. இதைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் கடன் பெற்றவர்கள், வாங்கிய கடனுக்கு மேல் பணம் செலுத்தியும், இன்னும் அந்த வங்கிகளிலே, “வட்டிக்கு, அபராத வட்டிக்கு” என்று வரவு வைக்கப்பெற்று, சொத்தினுடைய மதிப்புக்கு மேலாகக் கடன் இருக்கிறது. எனவே, அந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, ஒன்றியச் சாலைகள்; அந்தச் சாலைகளிலே பெரும் பகுதி பராமரிக்கப்படாமலே இருக்கிறது; ஒன்றியச் சாலைகள்தான் கூடுதலாக இருக்கின்றன. கடந்த காலத்தில் ஒன்றியச் சாலைகள் ஒரு குறிப்பிட்ட அளவு, ஆண்டுக்காண்டு, நெடுஞ்சாலைத் துறையிடம் தரமுயர்த்திக் கொடுக்கப்பட்டது. அது கடந்த 5 ஆண்டுக் காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற காரணத்தாலும், ஒன்றியச் சாலைகள் பராமரிக்கப்படாமலிருக்கிற காரணத்தாலும்—இன்றைக்குக் கிராமப்புறச் சாலைகள் எல்லாம் மிகவும் சீரழிந்து கிடக்கின்றன—நமது தமிழக முதல்வர் அவர்கள் ஆலோசனை வழங்கி, அந்தச் சாலைகளை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, இங்கே பாருங்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இந்த நிதிநிலை அறிக்கையில், ஏற்கெனவே பழுதடைந்த, ஏற்கெனவே போடப்பட்ட சாலைகளுக்கு நிதி ஒதுக்கியுள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நான் நிறைவாக மீண்டும் ஒரு கருத்தைச் சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமர்கிறேன். இங்கே நமது அருமை சட்டமன்ற உறுப்பினர் திரு. லாசர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிற நேரத்தில், “தமிழக முதல்வருக்கு யார் செல்லப்பிள்ளை?” என்று



ஒரு பிரச்சினை எழுந்தது. என்னைப் பொறுத்தவரையில், இந்த நிதிநிலை அறிக்கையை அரசு கவனத்தோடு சிறப்பாகச் செயல்படுத்தினால் உங்களுக்கு மட்டுமல்ல, தமிழக முதல்வர் தமிழகத்திலே இருக்கிற அத்தனை மக்களுக்கும் செல்லத் தாயாக இருப்பார்கள் என்று சொல்லி, எனக்குப் பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்கள்.

***திருமதி ஆர். ராஜலட்சுமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென்றவரவரைக் கூத்தாட்டு
வானாகி . . . ”

நிற்கின்ற 7 கோடி தமிழக மக்களின் முதல்வரே! ரங்கநாயகி உடனுறை ரங்கநாதர்கூட பள்ளி கொள்கின்ற திருத்தலமாம் ஸ்ரீரங்கத்திலே, ஓய்வறியா உன்னதத் தலைவி; உமக்கு ஓர் இடம் கொண்டீர். மாலவன் பாதம் பட்டதால் மலர்ந்த மலர்போல உங்கள் கடைக்கண் கடாட்சம் பெற்று, நான் கனவில்கூட நினைத்திராத ஒரு மாபெரும் வாய்ப்பாக மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியிலே எனக்குப் போட்டியிடுவதற்கு ஒரு பெரிய வாய்ப்பையும் அளித்தீர்கள் அம்மா. அம்மா, உம்மை நான் எம் தலைவியாய்ப் பெற என்ன தவம் செய்திட்டேன் நான்? எத்தனை பிறவி எடுத்து அம்மா இக்கடனை நான் தீர்ப்பேன்? என் இன்னுயிரை ஈந்தேனும் போயஸ் தோட்டத்தின் படிக் கல்லைச் சுமந்தேனும் அம்மா, உம் கடனை நான் தீர்த்திடுவேன் அம்மா! அம்மா! ஆன்றோர்களும், சான்றோர்களும் நிறைந்திருக்கின்ற இந்த மாபெரும் சபைதனில் உங்கள் முன்னிலையிலும் பட்ஜெட்டைப்பற்றிப் பேசுவதற்கு எனக்கு ஒரு வாய்ப்பளித்தமைக்காக உங்கள் பாதம் பணிந்து பல கோடி

நன்றி மலர்களை நான் காணிக்கையாக்குகிறேன் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா நீங்கள்,

பாராட்டும் பெண்டிருக்கு பாட்டுடைத் தலைவியாய்,
பசித்திருக்கும் வறியவருக்குப் பிணி தீர்க்கும் பூரணியாய்,
பகை முடிக்கும் அமர்க்களத்தில் போர்ப்படைத் தளபதியாய்,
பண்புமாறா கூட்டணிக்குக் குற்றமற்ற உற்றவராய்,
பார் போற்றும் தலைவருமே தாம் போற்றும் தாரகையாய்
விளங்கி நிற்கும் தூயவரே,
எங்கள் குடும்ப குல விளக்கே,
கழகத்தின் காவல் தெய்வமே,
ஏழைகளின் ஏந்தலே (மேசையைத் தட்டும் ஒலி)
இயக்கத்தின் இமயமே,
மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ,
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ,
அம்மா! யாழிடைப் பிறவாய் இசையே என்கோ,
அம்மா! பொன்மனச் செம்மல் புடம் போட்ட தங்கம் நீவிர்,
புரட்சித் தலைவர் எமக்கெல்லாம் தேடித் தந்திட்ட
ஒரே தலைவி நீவிர். (மேசையைத் தட்டும் ஒலி)

"சுழன்றும்ஏர்ப்பின்னது உலகம் . . ."

சொன்னவன் நமக்கெல்லாம் தமிழ்ப் பாட்டன் வள்ளுவன்;

அம்மா, சுழலும் நமது இயக்கம் உம்மாலே; எமக்கெல்லாம் தமிழ்க் குடிமகள் நீர்; முத்தமிழுக்கும் முத்தாய்ப்பு இசைத்தமிழ் அம்மா; முத்தமிழோடு நான்காம் தமிழும் வந்து முத்தமிடும் இனிய தமிழ் நீர்; அம்மா தட்டுங்கள் திறக்கப்படும் என்றுதான் கூறினார் ஏசுநாதர்கூட; தட்டாமலே திறப்பார் எங்கள் தங்கத் தலைவி. தொண்டர்கள் தட்டாமலே (மேசையைத் தட்டும் ஒலி) தம் மனக் கதவைத் திறப்பார். கரம் பிடித்து உயர்த்தி கண்ணீரைத் துடைப்பார். "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ், அம்மா நீர் ஆளாவிட்டால் இந்தத் தமிழ்நாடே பாழ்". அம்மா நீரின்றி அமையாது இங்கு அரசியல், உன் தலைமையேயின்றி இனியேது தலைப்புச் செய்தி தமிழருக்கு இனி. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா நீரின்றி அமையாது அரசியல், இது பழந்தமிழர் வாக்கு. அம்மா நீரின்றி அமையாது இங்கு அரசியல். இது தமிழர் உமக்கு அளித்த சத்திய



வாக்கு. வாய்ச் சொல்லில் வீரர்கள் நிறைந்திருந்த நாட்டினிலே, அம்மா வாய்மையைத் தவிர எல்லாமே செயல்தான் உனக்கு. தனியொரு தலைவியாய் தோப்பானாய்! எமக்கெல்லாம் மெய்க்காப்பானாய்! கஜானாவைக் காலி செய்து குடும்ப அரசியல் செய்த காகிதப் புலிகளைக் கண்டதுண்டு கடந்த காலத்தில். ஆனால், உடல், பொருள், ஆவி அத்துணையும் அர்ப்பணித்தேனும் தமிழர் உய்ய வேண்டுமெனும் நீ அன்றோ தூய தமிழ்? அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-20

அம்மா, சிறுபான்மைக் கூட்டமே அம்மா உம்மை எதிர்க்கின்ற கூட்டம். ஒரு கால மாற்றத்தில் அவையெல்லாம் ஓடப்போகும் இடம் சிறைக்கூடம். அம்மா, நீரின்றி அமையாது இங்கு அரசியல் அணி. உம் தலைமையே இன்றி இனி ஏது தலைப்புச் செய்தி தமிழர்க்கினி? அம்மா, எத்தனைதான் தலைவர்கள் அணிவகுத்து நின்றாலும் எட்ட முடியாத உயரத்தில் நீர் நிற்கின்ற காரணத்தால் தலைமைக்கு இலக்கணத்தை நீர் வகுத்துவிட்டீர். தமிழர்க்கு தலைமை எது என விளக்கிவிட்டீர். அம்மா, இனி உம் இலக்கு எத்திசையில் பாயும்? அது இத்தாய்த் திருநாட்டை நீர் ஆளப்போகும் காலம். இந்திய நாட்டிற்கதுவே பொற்காலம். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, ஈடில்லா தமிழகத்தின் இணையில்லா தலைவர் ஆனீர். தமிழகத்தின் நலம் காக்கும் தனிப் பெரும் முதல்வர் ஆனீர். மைனாரிட்டி முதல்வர் அல்ல அம்மா, மெஜாரிட்டி முதல்வர் ஆனீர். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, எதையெதையோ எட்டாவது அதிசயம் என்பார், எட்டாத அதிசயம் நீரே எங்கள் தலைவர். ஒப்பாரும் மிக்காரும் இல்லாத இயக்கத்தின் இமயமே, தலைவர் உங்களுக்கே சரண் நாங்களே.

அம்மா, நீங்கள் அளித்த நிதிநிலை அறிக்கையை ஒரு நெடிய கவிதை என்றே கூறலாம். அதிலும், வரிகளே இல்லாமல் ஒரு அதிசய கவிதையைப் படைத்திருக்கிறீர்கள் அம்மா. அது எப்படிச் சாத்தியமாயிற்று அம்மா? அம்மா,

"முறை செய்து காப்பாற்றும் மன்னன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்பது வான்மறை வள்ளுவனின் வாக்கு. அம்மா, "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" என்பதற்கேற்ப, மெஜாரிட்டி முதல்வராய் விளங்கும் நீங்கள், மக்கள் குறை தீர்க்கும் மகத்தானதொரு அறிக்கையைத்

தந்துள்ளீர்கள் அம்மா. நிதிநிலை அறிக்கையிலே தங்களின் கருணைப் பார்வை படாத துறைகளே இல்லை எனலாம். “Talent is what we possess! Genius is what possesses us” என்கின்ற முதுமொழிக்கேற்ப, அம்மா, நீங்கள் அறிவின் வீச்சை அறிந்தவர்; அன்பின் தகைமையை உணர்ந்தவர். நடமாடும் பல்கலைக்கழகமாய் மிளிர்பவர், வருங்காலத் தமிழகமாய் ஒளிர்பவர். “A true leader is one who reveals that which lies asleep in our knowledge and leads us to the wisdom of the State of our own soul” என்ற கருத்திற்கேற்ப தலைமைப் பண்புகளின் புகலிடமாய்ப் பொலிபவர். உங்கள் தொண்டர்களின் உள்ளங்களை உம் உள்ளங்கையாய்ப் படித்தவர்.

அம்மா, நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் சட்டம்-ஒழுங்கையும் காக்கின்றீர், சமூக நீதியையும் கரை சேர்க்கின்றீர்.

சாலைகளைப் பாதுகாக்க நிதி செய்த நீங்கள், சிறைச்சாலைகளுக்கும் சேர்த்து நீதி செய்துள்ளீர்கள்.

கால்நடையைக் கவனித்து வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட நீங்கள், மீன் வளத்தையும் பாதுகாத்து நீலப் புரட்சிக்கும் வழிகண்டுள்ளீர்கள். மீனவர் நலனைக் கருத்தில் கொண்டு, கொடுத்த வாக்கினையும் உறுதி செய்து, சிறப்புத் தொகையும் அளித்துள்ளீர்கள் அம்மா!

‘விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி’ என்ற சிலம்புச் செல்வனின் வழியேற்று, குடகிலிருந்து குதித்தோடி வரும் காவிரி, தமிழர்தம் வாழ்வை வளமாக்குதல் போல, அனைத்துத் தமிழருக்கும் நலத் திட்டங்களை வாரி வாரி வழங்கி இருக்கிறீர் அம்மா.

தமிழகத்தின் நீராதாரத்தை முறைப்படுத்த ‘நதிகள் இணைப்பு’, ‘நீர் செறிவூட்டல்’ போன்ற புதுமைத் திட்டங்களுக்கும் பஞ்சம் இல்லை அம்மா.

மகளிருக்குக் கிட்டாத 33 சதவிகிதம் வனங்களுக்கேனும் கிடைத்திடல் வேண்டும் என்ற உயரிய நோக்கிலே, வனப் பெருக்கம் செய்ய வழி செய்தீர். வன விலங்குகளுக்கும்கூட ஒரு முறை செய்தீர்.

அம்மா, சுற்றுச் சூழலைப் பாதுகாக்க பல விதங்களிலே செம்மை செய்தீர். பிளாஸ்டிக் குப்பை என்ற தீமை ஒழிப்பை ஒரு மக்கள் இயக்கமாகவே அறிவிக்க, மாட்சிமை மிக்க மக்கள் சக்தி உம் ஒருவரால்தான் இயலும் அம்மா.



தொழில் துறையை மேம்படுத்த ‘நில வங்கி’ என்ற நவீன உத்தி உண்மையிலேயே ஓர் உயர்ந்த சிந்தனை. மனித வள மேம்பாட்டிற்கான ‘திறன் மேம்பாட்டு நிறுவனம்’ இளைஞர்களின் எதிர்கால அரசு முத்திரையுடன் அவர்கள் பெறப்போகும் ‘திறன் அடையாள அட்டையே’ அதற்குக் கட்டியம் கூறிடும்.

இருண்ட தமிழகத்திற்கு ஒளியேற்ற அம்மாவின் மின் கொள்கை வழி செய்யும். அது ஒன்றே இருண்ட தமிழர்களின் வாழ்வை வளம் செய்யும்.

இன்றைய இளைஞர்களே நாளைய சமுதாயம், நாட்டின் மனித வளம் என்பதை மனதில் கொண்டு மாணவர்களுக்கு மகத்தான திட்டங்களைத் தந்துள்ளீர்கள் அம்மா. 10 ஆம் வகுப்பு, +1 படிக்கும் மாணவர்க்கு ஊக்கத் தொகை ரூ.1,500/-உம், +2 மாணவர்க்கு ஊக்கத் தொகை ரூ.2,000/-உம் கல்வி இடை நிற்றலை நிச்சயம் நிறுத்திடும். இளைஞர் சமுதாயத்தை மேம்படுத்த, அவருக்குக் கல்வியும் தந்து, கம்பீரமாய் உடுக்க உடையும் தந்து, உடைக்குத் தைக்க கூலியும் தந்து, பிள்ளைகளைப் பெற்றோரே சுமையாய்க் கருதினாலும், “கலங்காதே, நான் இருக்கிறேன், உமக்கு ஒரு சுமை தாங்கியாய்; நீங்கள் எனக்கு ஒரு சுகமான சுமைதான்” (மேசையைத் தட்டும் ஒலி) எனக் கூறி, “அம்மா” என நாங்கள் உம்மை அழைப்பதை நிரூபித்து உங்கள் தாயுள்ளத்தைப் பதிவு செய்துள்ளீர்கள் அம்மா.

பிற்பகல் 1-25

அம்மா, நீங்கள் மாணவர் எதிர்காலம் எண்ணி, மடிக் கணினியும் வழங்குகிறீர்; நங்கையர் மணமுடிக்க தாலிக்குத் தங்கமும் தருகின்றீர்; திருநங்கை நலன் காக்கும் திட்டமும் தருகின்றீர்; சிறுபான்மை நலன் காக்க சீர்பாடுகளையும் செய்கின்றீர்; உலகத் தமிழர் நலம் உயர தீர்மானம் செய்த நீங்கள், ஈழத் தமிழர் வசதிக்காக உதவித் தொகையும் தருகின்றீர்; பத்திரிகையாளர் நலன் காக்க ஓய்வூதியம் தரும் நீங்கள், பழங்குடியினருக்குப் பலப் பலவும் செய்திருக்கின்றீர். தாய்மார்கள் நேரம் காக்க மின் கருவிகளும் தரும் நீங்கள், அவற்றை இயக்குவதற்குத் தடையில்லா மின்சாரமும் தந்திருக்கிறீர் அம்மா. நோயுற்றோர் நலமடைய நடமாடும் மருத்துவமனையும் உண்டு; அவர்தம் பணம் காக்க காப்பீட்டுத் திட்டமும் உண்டு. முதியோருக்கு ஓய்வூதியம் உயர்த்தித் தந்தீர். அவர்களுக்கு இல்லத்திலே மதிப்பும் தந்தீர். மகிழ்வோடு மக்கள் வாழ விலையில்லா அரிசி தந்தீர். மழைநீர் சேகரிப்பு எனும் மகத்தான திட்டம் தந்தீர் அம்மா.

சீர்மிகு சென்னையைப் பொறுத்தளவில், என் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சிங்காரித்து வலம் வந்தாலே போதும் எனும் அளவிற்குத் திட்டங்கள் பலப் பல அம்மா.

மாநகரத் தேவைகளாம், மாசற்ற குடிநீர், தடையில்லா மின்சாரம், நெரிசலில்லா சாலைகள், கழிவுநீர்க் கால்வாய்கள், தேவைக்கேற்ற வீட்டு வசதி, சுத்தமான சுற்றுச்சூழல், விரைவாய்ச் செல்ல வாகனங்கள் என எதையும் விடவில்லை அம்மா நீங்கள். சென்னையின் தாகத்தை இன்றளவும் தீர்த்துக் கொண்டிருக்கும் நீங்கள், இன்னும் எண்ணற்ற தீர்வுகள் கண்டு இமாலயப் புகழை அடைகின்றீர். திட்ட மட்டுமே தெரிந்த மாந்தர்கள் வாழும் ஊரிலே, உம்மை எதிர்ப்போருக்கும் சேர்த்து நலன் சேர்க்கும் நற்றமிழ் முதல்வர் நீர் ஒருவர்தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா ஆலயத்தில் ஆன்மீகர், அநேகர் அதில் வறியோரே! அன்னமிட்ட கை இட்டதோர் ஆணை. அங்கு சமயமும் தழைத்தது; சமையலும் மணத்தது. மொட்டுவிடும் பெண் சிசுவைச் சுட்டு விடும் சமுதாயம், பட்டுத் தாய் திட்டமிட்டார்! தொட்டிலிட்டுப் பூ வளர்த்தார், சிறுவர்களின் இளம் தோள்களிலே பெருத்த மூட்டை, அவர்களின் இதயங்களிலோ ஆயிரமாயிரம் கோட்டை; பார்த்தார் கண்ணியத்தாய்! "நீர் கனவுகளை மட்டுமே சும" என்றார்.

பள்ளிக்கூடமோ பலகாத தூரம்! பரிதவிப்பில் பெற்றோரும், மாணவர்களும், துயர் நீக்க அம்மா அளித்தார் இலவச மிதிவண்டி; பிள்ளைச் செல்வங்கள் இறக்கை இல்லாத பட்டாம் பூச்சிகளாகவே பறந்து சென்றனர். அம்மா நீர் காவல் துறையினரின் காவல் தெய்வம். வீரப்பனை வீழ்த்திட்ட வீரத் தெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) வீராணம் திட்டம் தந்த விவேகத் தெய்வம், மீனவர்களைக் கரை சேர்க்கும் கலங்கரை விளக்கம். மா-நிலமெல்லாம் செழித்திடவே, மாநிலங்களை மீட்டெடுத்தீர், உழவனைப் பாதுகாத்திடவே உழவர் பாதுகாப்புத் திட்டத்தையும் அளித்திட்டீர், பொன் நகையெல்லாம் துறந்திட்டீர், புன்னகை ஒன்றை மட்டுமே அணிந்திட்டீர். துறவி போல வாழும் நீங்கள் தமிழர் உறவு ஒன்றை மட்டுமே பேணிக் காத்திட்டீர்.

தமிழகத்தை நாட்டின் முதன்மை மாநிலமாக்கவும் உமதரசை (மேசையைத் தட்டும் ஒலி) உலகிற்கே வழிகாட்டியாய் விளங்குவதற்கும் உம் ஊனுயிரை வருத்தி, உம் உழைப்பையே எமதாக்கும் தாயே! தமிழினம் காக்கும் தங்கத் தாரகையே! உம்மை நான் அம்மா என்று அழைக்க என்ன தவம் செய்தனன்? என்னுயிர்



ஈந்தேனும், உம்முயிரைக் காத்திடுவேன்! போயஸ் தோட்டத்துப் படிக்கல்லாய் அமைந்தேனும், பிறவிப் பயன் பெற்றிடுவேன்! எங்கோ பிறந்த என்னை, எனக்கே அறிமுகப்படுத்திய அரசியல் சிற்பியே!

"யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே"

என்ற வரிகளுக்கொப்ப, நீங்களும், நம் கழகமும் பிரிக்க இயலாதபடி இரண்டறக் கலந்து விட்டீர்களே அம்மா! அம்மா நீங்களே எம் ஒரே தலைவி, நீர் பெறும் நலனே தாம் பெற்ற பேறு என்று வாழும் மகளிர்க்கும், தாய்மார்களுக்கும் நீங்கள் அளித்திட்ட நலம் அளப்பரியது.

"பெருந் தடங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே"

என்ற கம்ப நாடனின் பெண்ணுரிமைப் பாடலுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்திட்ட ஒரே தலைவி. யாமறிந்த வரையினிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர இப்புவிதனிலே யாரும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா சத்துணவு கண்ட சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒரே அரசியல் வாரிசு, கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர் அம்மா நீங்கள்.

"The hand that gives, and know not the pain of giving, it is through the hand of such the God speaks" என்ற உலக மகாகவி Khalil Gibran-இன் வைர வரிகளுக்கு உதாரணமாய் வாழ்பவர் அம்மா நீங்கள். அறுசுவை உணவு மறந்து, சுகபோக வாழ்வு துறந்து, உம் அடி தேடி வரும் கழகத் தொண்டர்களுக்காகவே தியாக வாழ்வு வாழும் உம்மை தலைவியாய்ப் பெற என்ன தவம் செய்தனன் நான்?

அம்மா! நீர் என்னை வேட்பாளராக நிறுத்திய மயிலையில் வட்டங்கள் 13 உண்டு. கோரிக்கைகளும் சில உண்டு. 94 ஆம் வட்டத்திலே உள்ள மெக்காபுரத்திலே ஏழைகள் மருத்துவமனையைச் சீரமைத்திட வேண்டுகிறேன். 96 ஆம் வட்டத்தில் வெளுக்கும்

சலவையாளர் உழைப்பிடத்தைச் செம்மைப்படுத்திட வேண்டுகிறேன். 115 ஆம் வட்டத்தில் உள்ள மகப்பேறு மருத்துவமனையைச் சீரமைக்கக் கோருகிறேன். 116 ஆம் வட்டத்திலே ஆபத்து சூழ்ந்துள்ள நந்தனம் கால்வாயைக் கட்டித் தர மழை நீர் வடிகால் வாரியத்திற்கு ஆணையிட வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-30

142 ஆவது வட்டத்தில் உள்ள விசாலாட்சி தோட்டத்திலே சிறுவர் பூங்கா அமைத்துத் தர பணிவோடு வேண்டுகிறேன். 143 ஆவது வட்டத்திலே குடிசைப் பகுதியில் கழிவுநீர் அகற்ற வகை செய்ய வேண்டுகிறேன். 144 ஆவது வட்டத்திலே முண்டகக்கண்ணி அம்மன் கோயில் தெருவிலே சமுதாயக் கூடம் அமைத்துத் தர வேண்டுகிறேன். 145 ஆவது வட்டத்திலே நொச்சிக்குப்பத்திலே மீன் மார்க்கெட் அமைத்திட வகை செய்ய வேண்டுகிறேன். 146 ஆவது வட்டத்தில் பிளாக் 53, 54-இல் தாண்டவராயன் தெருவிலே பாயும் கழிவுநீர் தேங்காமல் வகை செய்ய வேண்டுகிறேன். 147-ஆவது வட்டத்திலே மசூதி தெருவிலே slum ஏரியா பகுதியில் சிமென்ட் சாலை அமைக்க வேண்டுகிறேன். 148-ஆவது வட்டத்தில் மந்தைவெளியில் சமூக நலக் கூடம் கட்டித் தர வேண்டுகிறேன். 149-ஆவது வட்டத்தில் வள்ளீஸ்வரன் தோட்டத்தில் குடிசை மாற்று வாரிய வீடுகளைச் சீரமைக்க வேண்டுகிறேன். 150-வது வட்டத்தில் கழிவுநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுகிறேன்.

அம்மா, மயிலை தொகுதிக்கு மேலும் ஒரு கோரிக்கையாய், அனைத்து கோயில், குளங்களையும் சீரமைத்துத் தர வேண்டுகிறேன்.

வேண்டிய அனைத்தும் நிறைவேற்றும் அட்சய பாத்திரமே, தொண்டர் உளம் நிறைய வாரி வாரி வழங்கும் அமுத சுரபியே, எங்கள் தலைவியே, நீங்கள் இதனை நிச்சயம் நிறைவேற்றுவீர்கள். ஏனென்றால், செயற்கரிய செய்யும் தலைவியே, எங்கள் தங்கத் தாரகை, முத்தமிழின் சுவையோடு, முக்கனியின் சக்தியோடு, மூவேந்தர் திறத்தோடு, மூன்றாம் முறையாக அரியணையில் வீற்றிருக்கும் எங்கள் மீனாட்சி, தானாட்சி செய்துவரும் தமிழகத்தில், இல்லை என்ற சொல்லே இனி இல்லை அம்மா. "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்தனன் யான்?" முத்தமிழே, உம்முன்னே உரையாற்றும் இவ்வரிய வாய்ப்பை அளித்தமைக்காக என் உயிர் உள்ளளவும், என் தாய்த் தமிழ் உள்ளளவும் உம் நன்றி நான் மறவேன். என்னுயிரை ஈந்தேனும் உம் புகழைக் காத்து நிற்பேன்.



புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எல்லா வளமும் பெற்று நீடுழி வாழ பள்ளி கொண்ட ரங்கனையும், மயிலாடும் ஈசனையும் வேண்டி அமைகிறேன். நன்றி, வணக்கம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

***திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு பெண் முதலமைச்சர் தலைமைப் பொறுப்பேற்றிருக்கும் இந்த 14-ஆவது சட்டமன்றப் பேரவைக்கு நான் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு பெரு மகிழ்ச்சியடைகிறேன். இந்தச் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாசத்திற்குரிய அனைத்து சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு இந்தத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவியும், இந்தியாவின் வழிகாட்டியுமான அன்னை சோனியா காந்தி, இளம் தலைவர் ராகுல் காந்தி, பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், என்னை இந்த மாமன்றத்திற்கு முதன்முறையாகத் தேர்ந்தெடுத்து, அறிமுகப்படுத்தி, கோரிக்கைகளையெல்லாம் சபையின்முன் வைக்கவும், சபையிலே பேச வைத்தும், சபையிலே உட்கார வைத்தும் அழகு பார்க்கும் விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011-2012 ஆம் நிதியாண்டின் நிதிநிலை அறிக்கையை தமிழக மக்களின் வாழ்வில் ஒளியேற்றி வைக்கும் வகையில் மாண்புமிகு நிதி அமைச்சர் பேரவையில் சமர்ப்பித்ததை நோக்குங்காண், தொலைநோக்குப் பார்வையும், சமூகப் பொருளாதார மேம்பாடு அடைய வழிவகை செய்கிறது. மத்தியில் ஆளுகின்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் ஒவ்வொரு துறைக்கும் தனித் தனியே தன்னிகரில்லாத் திட்டங்களைச் செயல்படுத்தி, மக்களை வறுமையிலிருந்தும், அறியாமையிலிருந்தும் விடுபட வழிவகை காண்கிறார்.

மத்திய அரசின் திட்டங்களான ஜவஹர்லால் நேரு நகர நிர்மாண் திட்டம், தேசிய ஊரக சுகாதாரத் திட்டம், தேசிய

வேளாண் வளர்ச்சி உணவு உற்பத்தித் திட்டம், தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம், இந்திரா வீட்டுவசதித் திட்டம், தேசிய சுற்றுலாத் திட்டம், அனைவருக்கும் கல்வி இயக்கம், தேசிய குழந்தைகள் மற்றும் மகளிர் மேம்பாட்டுத் திட்டம், சொர்ண ஜெயந்தி சுழல் நிதித் திட்டம் ஆகிய இந்தத் திட்டங்கள் அனைத்திற்கும் தமிழ்நாட்டில், தமிழக அரசும் தன் பங்கிற்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்து மேற்குறிப்பிட்ட திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இந்தியாவை, தகவல் தொழில்நுட்பத்திலும், கணினிப் பயன்பாட்டிலும் வல்லரசு நாடாக மாற்ற எடுத்த முயற்சியின் பயனாக தமிழக அரசும் மின் ஆளுகையின் மூலமாக தமிழக அரசின் செய்திகள், தகவல்கள் அனுப்பப்படுகின்றன. தமிழக நிதிநிலை அறிக்கையின்படி முதன்மைத் துறையும், உற்பத்தித் துறையும், சேவைத் துறையும் இணைந்து முக்கிய பங்காற்றுகின்றன.

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் இரண்டாவது பசுமைப் புரட்சியைக் கொண்டு வருவதற்கு வசதியாக விவசாய விளைபொருள்கள் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கவும், நவீன தொழில்நுட்ப உத்தியும், விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடனும் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வழங்க நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், தமிழகம் முழுவதும் விவசாய விளைநிலங்கள், குறிப்பாக நெல் சாகுபடி செய்யும் நெல் வயல் நன்னீர் நிலப் பரப்பு, ரியல் எஸ்டேட்களாக, வீட்டு மனைகளாக விலைக்கு விற்கும் நிலங்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, விவசாயம் சார்ந்த குமரி மாவட்டத்தில் 1977 ஆம் ஆண்டு நெல் சாகுபடிப் பரப்பு 53,000 ஹெக்டேராக இருந்து, 1980 ஆம் ஆண்டு 44,000 ஹெக்டேராகக் குறைந்து, 1997 ஆம் ஆண்டு 23,000 ஹெக்டேராக மீண்டும் குறைந்து, 2011 இல் வெறும் 8,000 ஹெக்டேராகச் சுருங்கியுள்ளது. உயர் தொழில் நுட்பமும், பண்ணை விவசாயமும், உரம், இடுபொருள்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு மானியம் வழங்கினாலும் தமிழக பட்ஜெட்டில் கூறியது போன்று 115 இலட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி இலக்கை அடைவது கடினமே. காரணம், விவசாய நெல் வயல் பரப்பு சுருங்கியுள்ளது. இதற்குக் கேரள அரசு சட்டம் இயற்றியதற்கு நிகராகத் தமிழ்நாட்டிலும் நெல் வயல் நன்னீர் பாதுகாப்புச் சட்டம் (Conservation of Paddy Land and Wet Land Act) இயற்ற ஆவன செய்யுமாறு அரசிடம் கேட்டுக்கொள்கிறேன்.



மார்த்தாண்டத்தை மையமாக வைத்து, தேன் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், தேன் சார்ந்த தொழில் செய்யும் விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள் வளம் பெறும் வகையில், தேன் ஆராய்ச்சி மையம் அமைத்துத் தருவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித இனத்திற்கு அடிப்படை உணவாகிய பசும்பால் உற்பத்தி செய்ய இலவச கறவை மாடு வழங்கும் திட்டம் பாராட்டிற்குரியது. எங்கள் குமரி மாவட்டத்திற்கு அரசுக் கால்நடை மருத்துவக் கல்லூரி, அரசு வேளாண் கல்லூரி, அரசுக் கலை அறிவியல் கல்லூரி, அரசுச் சட்டக் கல்லூரி போன்ற கல்லூரிகள் அமைத்துத் தந்து அங்குள்ள மாணவர்களுக்கும், பிள்ளைகளுக்கும் நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிக நீண்ட கடற்கரையைக் கொண்ட தமிழகத்தின் மீனவர்கள், எந்திரப் படகு வாங்க ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு மீனவர்கள் வாழ்க்கையை வளமாக்கும். மீன்பிடி அல்லாத காலங்களில் மீனவர் குடும்பத்திற்கு தேசிய மீனவ சேமிப்பு மற்றும் நிவாரண நிதியில் இருந்து ரூபாய் 4,000 உதவித் தொகை வழங்குவது பாராட்டுதற்குரியது. மீன்பிடி தடைக் காலங்களில் கடலில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு அளிக்கப்படும் நிவாரணத் தொகைக்கு நிகராக தலைச்சுமடு மற்றும் சிறிய மீன் வியாபாரிகளுக்கும் இந்த நிவாரணத் தொகை ரூபாய் 2,000 வழங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். எங்கள் குமரி மாவட்டத்தில் மேற்கேயுள்ள அரபிக் கடல், கடும் சீற்றம் கொண்டது. எனவே, கடற்கரை ஓரங்களில் கடல் அலை தடுப்புச் சுவர், தூண்டில் வளைவு அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய நலன் கருதி தமிழகமெங்கும் ஆறுகள் இணைப்பதுபோல் குமரி மாவட்டத்தில் கடைமடை கடைவரம்புப் பகுதிகள் வரை தண்ணீர் செல்ல கால்வாய்கள், வாய்க்கால்கள், channel-கள் தூர் வாரப்பட்டு, கரைகள் சிமெண்ட் கான்கிரீட்மூலம் பலப்படுத்தப்பட்டு, மடைகள், ஷட்டர்கள் சீரமைக்கப்பட வேண்டும். நீராதாரங்களான பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளின் கொள்ளளவுகளில்

[திருமதி எஸ். விஜயதரணி] [2011 ஆகஸ்ட் 8

30 சதவிகிதம் மணல், மண், கல், சேறு, சகதி நிரம்பியுள்ளன. எனவே, அவை தூர் வாரப்பட வேண்டும். பாசனக் குளங்கள் தூர் வாரப்பட்டு அளவீடுகள் செய்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும்.

விளவங்கோடு தொகுதியின் தலையாய பிரச்சினையான நெய்யாறு இடதுகரை channel-இல் தண்ணீர் விடுவதற்கு கேரள அரசுடனும், மத்திய நீர்வளக் கமிஷனுடனும் பேச்சு வார்த்தை நடத்தி விவசாயிகளின் நிலங்களும், அவர்களின் மனமும் குளிர தண்ணீரைக் கொண்டு வர, அரசு துரித நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் பத்து வருவாய்க் கிராமங்களும், பத்தாயிரம் ஏக்கருக்குட்பட்ட நிலங்கள் பாசனம் பெறுவதுடன், நிலத்தடி நீர் உயர வழி வகை செய்யும். கேரள அரசுடன் நமது தமிழக அரசு பேச்சு வார்த்தை நடத்தும் பட்சத்தில் நிச்சயமாக நல்ல தீர்வு ஏற்படும் என்று நம்புகிறேன்.

திற்பரப்பு நீர்வீழ்ச்சியிலிருந்து ஓடி வரும் தண்ணீர் தாமிரபரணி ஆற்றில் விழுந்து வீணாகக் கடலில் கலக்கும் தண்ணீரை மேற்கு நோக்கித் திருப்பி விடுவதற்கு வசதியாக புதிய கால்வாய் வெட்டும் திட்டம் அல்லது நெய்யாறு இடதுகரை channel-இல் கீழிருந்து மேற்கிலாவது தண்ணீர் விட்டு விளவங்கோடு தொகுதியில் அதலபாதாளத்தில் சென்றுள்ள நிலத்தடி நீரை மேல் நோக்கிக் கொண்டுவர ஆவன செய்யுமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-40*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் மணல் திருட்டைத் தடுக்கவும், மணல் குறியீடுகளைத் தாண்டி துஷ்பிரயோகம் செய்யாதிருக்கவும், கட்டுமானப் பணிகள் தடைபடாமல், கட்டுமானத் தொழிலாளர்கள் பாதிப்புக்கு உட்படாமல் இருக்கவும், மணல் சம்பந்தமான விலை, குறியீடுகள் நிர்ணயம், குவாரிகள் அமைப்பது, உரிமம் வழங்குவது போன்ற அனைத்து விஷயங்களையும் அரசே நிர்ணயிக்கும் வகையில் அரசு மணல் ஆணையம் கொண்டுவர வழிவகை செய்யவேண்டும். பாறைப்பொடி, ஜல்லி, குண்டுக்கல் போன்றவற்றிற்கு குமரி மாவட்டத்தில் பெரும் தட்டுப்பாடு உள்ளது. எனவே, சுரங்கம் மற்றும் புவியியல் துறை தனிக் கவனம் செலுத்தி உரிமம் வழங்க முயற்சிகள் மேற்கொள்ள இந்த அரசு ஆவன செய்ய வேண்டும்.



2011 ஆகஸ்ட் 8] [திருமதி எஸ். விஜயதரணி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதியின் இதயப் பகுதியான மார்த்தாண்டம், போக்குவரத்து நெரிசலில் சிக்கித் திணறுகிறது. பேருந்துப் பயணிகளும், வர்த்தகர்களும், பொதுமக்களும் இலகு ரக, கன ரக மற்றும் இரு சக்கர வாகனங்களில் செல்பவரும், பாதசாரிகளும் வேதனைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதற்கு நிரந்தரத் தீர்வாக மார்த்தாண்டம் நகரில் மேம்பாலம் அமைக்க பிரேரணை தயாரித்து, அரசு நிருவாக அனுமதியும், மத்திய அரசின் நிதி உதவியும் பெற்று, பணிகளைத் துவக்க ஆவன செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலையோர சாலைகள் அனைத்தும் தரமற்ற முறையில் உள்ளன. பேச்சிப்பாறையிலிருந்து கடையாலுமூடு வரை, களியலிலிருந்து நெட்டா வரை, அருமனையிலிருந்து ஆலஞ்சோலை வழி ஆறுகாணி வரை, உத்தரங்கோட்டிலிருந்து முக்கூட்டுக்கல் வரை, மஞ்சாலுமூட்டிலிருந்து மாலைக்கோடு-இடைக்கோடு வரை, அண்டுகோட்டிலிருந்து ஈந்திக்காலை வழி இடைகோடு வரை, மருதங்கோட்டிலிருந்து புத்தன்சந்தை வரை, மூவோட்டுக்கோணத்திலிருந்து மேக்கோடு வழி களியக்காவிளை வரை, அருமனையிலிருந்து திருவரம்பு வரை, காப்புக்காட்டிலிருந்து ஐரேனிபுரம் வரை உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

எனது விளவங்கோடு தொகுதியில் கேரளாவைப் போன்று அடிக்கடி மழை பெய்வதால் சாலைகள் எளிதில் பழுதாகி விடுகின்றன. ஒப்பந்தக்காரர்களின் பணியின் தரம் குறைவாக உள்ளது. எனவே, சாலைகள் இந்திய தர நிர்ணயப்படி—Standard Specification—என்று அழைக்கப்படும் அந்தத் தரத்தின்படி அமைய திறமையான, நேர்மையான ஒப்பந்தக்காரரிடம் சாலைப் பணிகளை ஒப்படை செய்யவும், அதற்குத் தகுந்தாற்போல் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறேன். விளவங்கோடு தொகுதியில் உள்ள மாவட்ட இதர சாலைகள், கிராமச் சாலைகள் அனைத்தையும் இருவழிச் சாலைகளாக அகலப்படுத்தி பலப்படுத்த வேண்டும். சாலையின் இருமருங்கிலும் பலவீனமான பகுதிகளில் தடுப்புச் சுவர் அமைத்து சாலை ஓரங்களில் வடிகால் வசதியுடன் தரமிக்க சாலை அமைக்க இந்த அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையாலுமூடு பேரூராட்சிக்குட்பட்ட மோதிர மலை, தலக்குமலை, வட்டப்பாறை, வெல்லறக்குமலை, புறுத்திமலை, மூக்கறக்கல் போன்ற மலைவாழ் மற்றும் பழங்குடியினர், ஆதி திராவிட மக்கள் வாழும் கிராமங்களில் புதிய சாலை வசதி, போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதி ஆகியவற்றை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நான் குறிப்பிட்ட இந்த மலைகளில் வாழும் மக்களுக்கு சாலை வசதிகளே கிடையாது. இதுவரை மிகவும் பாதிக்கப்பட்ட நிலைமையில் இருக்கக்கூடிய அந்த மக்கள், உடல்நலம் குறைவாக இருக்கும்பொழுதும்கூட ஆட்கள் கையில் தூக்கிச் சென்று அவர்களுக்கு மருத்துவம் பார்க்கும் நிலைமையில்தான் அந்தக் கிராமங்களிலெல்லாம் இன்னும் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இதற்குண்டான அனைத்து வசதிகளையும் செய்து தருமாறு அரசைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திக்குறிச்சி, பயணம், வள்ளக்கடவு இடையே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்படவிருக்கும் பாலப் பணியை நிதி ஒதுக்கீடு செய்து ஒப்பந்தம் கோர இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மார்த்தாண்டம் - கருங்கல் சாலையில் விரிகோடு பகுதியில் அமைந்துள்ள ரெயில்வே கிராசிங்கில் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையாலுமூடு பேரூராட்சியையும், பேச்சிப்பாறை ஊராட்சியையும் இணைக்கும் ஆம்பாடி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட நெடுஞ்சாலைத் துறை முயற்சி மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தல் எதிர் வரும் அக்டோபர் திங்களில் நடத்துவது மகிழ்ச்சிக்குரியது. மத்திய அரசு கொண்டு வந்துள்ள உள்ளாட்சி அமைப்பில் மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவைப் பின்பற்றி, தமிழ்நாட்டிலும் மகளிருக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவிகிதம் பிரதிநிதித்துவம் வழங்கிட வகை செய்யும் சட்டத் திருத்தம் கொண்டுவர ஆவன செய்யவேண்டும்.

கடந்தகால ஆட்சியில் மாநகராட்சி மேயர், நகர சபை, பேரூராட்சி, மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களை மறைமுகமாகத் தேர்வு செய்யும் நிலை இருந்தது.



இதனை மாற்றி நேரடியாகத் தேர்வு செய்ய சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும். நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக மாற்றம் செய்ய ஆவன செய்ய வேண்டும்.

*பிற்பகல் 1-45*

நாகர்கோவில் நகராட்சி கடும் குடிநீர்த் தட்டுப்பாட்டில் உள்ளது. அதனைப் போக்க உலக்கை அருவியில் புதிய அணை கட்டி தண்ணீரைச் சேமித்து குடிநீர் வழங்க முயற்சிகள் மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்ட ஊராட்சிகளில் சுமார் 30 ஆண்டுகளாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் 180 குடிநீர் உடனாளர்களையும், பேரூராட்சிகளில் தினக்கூலிகளாகப் பணிபுரியும் கணினி இயக்கும் தொழிலாளர்களையும் நிரந்தரப் பணியாளர்களாக்கி அவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மார்த்தாண்டத்தில் நடைபெற்றுவரும் பேருந்து நிலையப் பணிகளைத் துரிதப்படுத்தி முடிக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு நிதிநிலை அறிக்கையில் புதிய வரிகள் விதிக்கப்படவில்லை. இது பாராட்டுக்குரியது. ஏழை மக்கள், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாயவிலைக் கடையில் வாங்கும் மண்ணெண்ணெய்க்கு உயர்த்திய விலையைத் திரும்பப் பெறவேண்டும். ஜவுளி, மின் சாதனங்களுக்கு உயர்த்தப்பட்ட மதிப்புக் கூட்டு வரியைக் குறைக்கவேண்டும். சமாதான் திட்டத்தின்மூலம் வரிகளை வசூலித்து வரி வருவாயைப் பெருக்குவது பாராட்டுதற்குரியது.

வருவாய்த் துறை, பொது விநியோகத் துறை, ஊரக வளர்ச்சித் துறை போன்ற அரசுத் துறைகளிலும் ஏராளமான பணியிடங்கள் காலியாக உள்ளதால் அரசு இயந்திரம் இயங்குவதற்கும், நலத் திட்டங்கள் பயனாளிகளைச் சென்றடைவதற்கும் பெரும் சிரமமாக உள்ளது. எனவே, ஓய்வுபெற்றதால் ஏற்பட்ட காலிப் பணியிடங்களை நிரப்பி, தமிழக இளைஞர்கள் வாழ்வில் ஒளியேற்றிட வேண்டும். அரசுப் பள்ளிகளில் இடைநிலை, பட்டதாரி மற்றும் முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இப்பணிகளை வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையில் பணியமர்த்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு ஆவன செய்யவேண்டும்.

[திருமதி எஸ். விஜயதரணி] [2011 ஆகஸ்ட் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து ஊழியர்களை அரசு ஊழியர்களாக்குவதற்கு முயற்சிகள் எடுக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியினுள் அமைந்துள்ள படந்தாலுமூடு, குழித்துறை (மார்த்தாண்டம்), திருவட்டாறு பணிமனைகளில் இருந்து இயக்கப்படும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் பல ஓட்டை, உடைசல்களாகவும், மழை நேரங்களில் ஒழுகியும், பேருந்துக்குள் இருக்கைகள் இல்லாமலும் மிக மோசமான பராமரிப்புடன் இயங்குகின்றன. மக்கள் தொகைக்கு ஏற்ப கூடுதல் வழித் தடங்களில் பேருந்துகளை இயக்குவதாலும், ஓய்வு பெறுகின்ற தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியிடம் காலியானதாலும், காலிப் பணியிடங்கள் ஏற்படுகின்றன. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பேருந்துக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் (Assistant Tradesman) என்ற விகிதாச்சாரத்தில் இருந்தது. தற்போது அது குறைந்து 0.65 என்ற நிலையில் உள்ளது.

அதுமட்டுமல்ல; போக்குவரத்துக் கழகப் பணிமனைகளில் உதிரிப் பாகங்கள், டயர்கள் தட்டுப்பாடு பெருமளவில் உள்ளது. பேருந்துகள் பெருகிய அளவிற்கு தொழில்நுட்பப் பணியாளர்களையும், உதிரிப் பாகங்களையும் நிருவாகம் வழங்கவில்லை. இதனால் பேருந்துகள் தகுந்த பராமரிப்பின்றியும், B.D. Check up இல்லாததால் பேருந்துகள் நடுவழியில் பழுதாகி நிற்கின்றன. இதனால் பொதுமக்களும், பயணிகளும் மிகுந்த இன்னலுக்கு ஆளாகின்றனர். அரசு இந்த வருடம் புதிதாக வாங்கவுள்ள 3,000 பேருந்துகளில் குமரி மாவட்டத்தைச் சார்ந்த பணிமனைகளுக்கு 200 பேருந்துகள் ஒதுக்கித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். 1998-க்கு முன்னர் ஓய்வுபெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கவேண்டும். 1992 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட சேமநல நிதி, 15 ஆண்டுகள் என்று கால நிர்ணயம் செய்யப்படாமல், ஓய்வுபெற்ற அனைவருக்கும் ஆயுட்காலம் முழுவதும் வழங்கவேண்டுமென்று இந்த அரசைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதிய சொந்த வசதிமிக்க கட்டடம் கட்ட திருத்துவபுரம் அருகே உள்ள புறம்போக்கு நிலத்தைத் தேர்வு செய்து அரசு ஆணை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2011 ஆகஸ்ட் 8] [திருமதி எஸ். விஜயதரணி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில், படித்த இளைஞர்கள் அதிகம் உள்ளனர். எங்கள் மாவட்டத்தில் தொழிற்சாலைகள் இல்லை. எனவே, சிறப்புப் பொருளாதார மண்டலத்தினை மார்த்தாண்டத்தில் ஏற்படுத்த வேண்டும். மென்பொருள் பூங்கா, அரசு ரப்பர் தொழிற்சாலை, தென்னை சார்ந்த பொருள்களை மூலதனமாகக் கொண்ட தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ரப்பர், தென்னை, வாழை, கிழங்கு, கமுகு, தோட்டப் பயிர்கள், மலர்கள் ஆகியவற்றின் சாகுபடியை மேம்படுத்த ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தேசிய சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின்மூலம் ஆசிய வளர்ச்சி வங்கியில் இருந்து ரூபாய் 450 கோடி பெற்று, சுற்றுலாவை மேம்பாடு அடையச் செய்துள்ளது. அந்த வகையில், தமிழகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதற்கு மத்திய அரசிற்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

எங்கள் மாவட்டத்தில் கன்னியாகுமரி, வட்டக்கோட்டை, உதயகிரிக்கோட்டை, திற்பரப்பு அருவி, மாத்தூர் தொட்டிப் பாலம், மற்றும் எனது விளவங்கோடு தொகுதியில் உள்ள சிதறால் மலைக்கோயில் ஆகியவற்றைச் சிறந்த சுற்றுலா தலங்களாக மேம்பாடு செய்ய, நிதித் ஒதுக்கீடு செய்துதர தகுந்த ஆணைகள் பிறப்பிக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதியில் ஏழைகள், வறுமைக்கோட்டிற்குக்கீழ் வசிப்பவர்கள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், அரசுப் புறம்போக்கு, நத்தம் புறம்போக்குகளில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும். கடையாலுமூடு பேரூராட்சிக்குட்பட்ட சிற்றாறணை ஓரங்கள், நீர்வழிப் புறம்போக்கு, சாலையோரப் புறம்போக்கு, மலையோரங்கள், வன ஓரங்கள் மற்றும் அங்கு வசிப்பவர்களுக்கு மாற்று இடங்களிலாவது வீட்டுமனைப் பட்டா வழங்க ஆவன செய்யவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. சீக்கிரமாக உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** வலியயேலா போன்ற வனப் பகுதிகளில் 500-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்களுக்கு மத்திய அரசின் அனுமதி பெற்று பட்டா மற்றும் மின்சாரம் வழங்க வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். நெய்யாறு இடதுகரை channel-ல் கடந்த 7 ஆண்டுகளாக தண்ணீர் வராததால் குளங்கள், ஆறுகள், கிணறுகளில் தண்ணீர் வற்றிப் போய் உள்ளது. இதனால் குடிநீர்த் திட்டம் இல்லாத ஊராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரிதும் குடிநீருக்காகக் கஷ்டப்படுகிறார்கள். எனது தொகுதியில் உள்ள விளாத்துறையில் நடைபெறும் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் விரைவாக நடைபெற ஆவன செய்யுமாறு வலியுறுத்துகிறேன். பாகோடு பேரூராட்சிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் புதிய குடிநீர் ஆதாரம் ஏற்படுத்த அரசுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாகர்கோவில் கிராமக் குடிநீர்த் திட்ட அலுவலகம் அனுப்பிய பிரேரணை மதிப்பீடுகளுக்கு நிருவாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி வழங்கி நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசின் நிதியுதவியோடு தமிழகத்தில் செயல்பட்டுவரும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் கட்டமைப்பு மற்றும் வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்ற குறிப்பாக, சென்னை மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதுபோல் நாகர்கோவில், மார்த்தாண்டம் நகரங்களுக்கு நகர நிர்மாண் திட்டத்தின்கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுக்க வேண்டியிருக்கிறது. உரையை சீக்கிரம் முடியுங்கள். இல்லையென்றால் நான் Bell அடிக்க வேண்டியிருக்கும்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மேலும் குழித்துறை, அருமனை மற்றும் ஆசாரிப்பள்ளம் போன்ற மருத்துவமனைகளில் அனைத்து பணிகளுக்கான காலியிடங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றையெல்லாம் நிரப்பி, மக்களுக்கு அனைத்து சேவைகளையும் செய்து தரவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில்



மார்ஷல் நேசமணிக்கு மணி மண்டபம் கட்டும் பணியைத் துரிதப்படுத்திட அரசு ஆவன செய்ய வேண்டும். இதுபோல் தொல்காப்பியருக்கும் காப்புக் காட்டில் சிலை அமைக்க இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள். *(குறுக்கீடு)*

**திருமதி எஸ். விஜயதரணி:** முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Thanks, சொல்லிவிடுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** சமூகப் பாதுகாப்புத் திட்டப் பயனாளிகள், தாங்கள் பெறும் ஓய்வூதியத்தை, மத்திய அரசால் அறிமுகப்படுத்தவிருக்கும் தபால் வங்கிகள் மூலம் பெறுவதற்கு வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ள Smart Card திட்டம் வரவேற்கத்தக்கது. மேலும், ஆண் குழந்தைகள் இருந்தாலும் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மக்களுக்குக் கிடைக்குமாறு இந்த அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழில் போன்று தென்னை மற்றும் அதனைச் சார்ந்த தொழில் மிகவும் பிரசித்தி பெற்றது. அதற்கென கயிறு உற்பத்தி விற்பனை தொழில் கூட்டுறவுச் சங்கம் சிறப்பாகச் செயல்படுகிறது. வடசேரியில் செயல்படும் விற்பனை அலுவலகப் பணியாளர்கள் சிப்பந்திகள் 6 பேர் மிகக் குறைவான சம்பளத்தில் பணியாற்றுகின்றனர். அவர்களது அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தவும் பணிக்கொடை போன்ற வசதிகள் செய்யவும் அரசு ஆவன செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மார்த்தாண்டம் நகரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகள் வளர்ந்து வரும் பகுதிகளாகும். இங்கு, தொழில், வர்த்தகம், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் போன்றவை ஏராளமாக இருப்பதால் மின்அழுத்தக் குறைவு உள்ளது. எனவே, மார்த்தாண்டம் நேசமணி பாலத்திற்கு அருகில் ஏற்கெனவே அமைந்துள்ள 110கேவி/11கேவி துணை மின்நிலையத்தைத் தரம் உயர்த்தி 230/110கேவி துணை மின்நிலையமாக அமைக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் "அனைவருக்கும் கல்வித் திட்டம்" தமிழகத்தில் சிறப்பாகச் செயல்படுகிறது. மத்திய அரசு மற்ற எல்லா மாநிலங்களிலும் செயல்படுத்தி வரும் தரமான நவோதயா பள்ளி முறை அல்லது அதற்கு நிகரான கல்வித் திட்டத்தைத் தமிழகத்தில் நிறுவ தமிழக அரசு ஆவன செய்யவேண்டும்.

மார்த்தாண்டம் அரசு ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பல ஆண்டுகளாகச் சிறப்பாகச் செயல்பட்டு பாடப் புத்தகங்களும் வழங்கி வந்த ஆசிரியர்கள் பயிற்றுவித்த முறைப்படி மலையாளம், ஆங்கிலம் (Malayalam and English Medium) வழிக் கல்வி மீண்டும் பயிற்றுவிக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தைச் சார்ந்த ரப்பர் தோட்ட விவசாயிகள் தனியார் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் உட்படுத்தப்பட்ட தங்கள் பட்டா நிலங்களைத் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க ஆவன செய்யவேண்டும்.

ஏழை விவசாயிகள் தங்களது பட்டா நிலங்களை விலை செய்யவோ, அரசு வங்கிகளில் அடமானம் வைக்கவோ முடியாத சூழ்நிலை உள்ளது. அதனால், அவர்களுடைய குழந்தைகள் திருமணம், கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசியச் செலவுகளுக்குப் பணம் பெறுவதற்கு வழி இல்லாமல் உள்ளது. இதற்குத் தகுந்த தீர்வாகப் பத்திரப் பதிவு அலுவலகத்தில் நிரந்தர பத்திரப் பதிவு செய்ய அரசு ஆவன செய்யவேண்டும். இவர்களது நீண்ட நாள் பிரச்சினையைத் தீர்க்கும் விதமாக நமது தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தி வனப் பாதுகாப்புச் சட்டத்தில் சட்டத் திருத்தம் கொண்டுவர அரசு ஆவன செய்ய வேண்டும். அரசு மற்றும் தனியார் ரப்பர் பால்வெட்டும் தொழிலாளர்களுக்கும் முந்திரித் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கவும், நிர்ணயிக்கவும் அரசு தேவையான நடவடிக்கை எடுக்க ஆவன செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் பெருந் தலைவர் காமராஜர் அவர்களால் கொண்டு வரப்பட்ட ஆரல்வாய்மொழியில் அமைந்துள்ள கன்னியாகுமரி கூட்டுறவு நூற்பு ஆலைக்குப் புத்துயிர் ஊட்ட ரூ.18 கோடி மதிப்பீட்டில் நவீன மயமாக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு



அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு அரசு ஈட்டுறுதி கொடுத்து N.C.D.C. வங்கிமூலம் நிதி கிடைக்க அரசு ஆவன செய்யவேண்டும். கூட்டுறவு நூற்பு ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள சுகாதாரப் பணியாளர், மருத்துவமனைப் பணியாளர், மருத்துவ மாது, X-கதிர்கள் தொழில்நுட்ப உதவியாளர்கள், ஆய்வக உதவியாளர், மகப்பேறு மருத்துவர், மருந்தாளுநர், செவிலியர், மருத்துவர்கள், சிறப்பு மருத்துவர்கள் போன்ற மருத்துவப் பணியிடங்களை நிரப்பிட அரசு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 15 ஆண்டுகளுக்கு முன்னர் உள்ள பழுதான சி.டி. ஸ்கேன்-ஐ மாற்றம் செய்து புதிய கருவி நிறுவ வேண்டும். மேம்படுத்தப்பட்ட வசதி, முதுகலை மருத்துவப் படிப்பு, கட்டண வார்டு, மற்றும் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளான இருதய நோய்ப்பிரிவு சிறுநீரகத் துறை போன்ற துறைகளையும் அதற்குண்டான மருத்துவ நிபுணர்களையும் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யவேண்டும். அரசு பல் மருத்துவக் கல்லூரியை குமரி மாவட்டத்திற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யவேண்டும். கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி தகுந்த மருத்துவப் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யவேண்டும். ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஏழையெளிய நோயாளிகள் பயன்பெறும்வகையில் புதிய எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதியை உடனடியாகத் தொடங்க அரசு ஆவன செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மலையோர கிராமங்களில் வசிக்கும் ஏழை விவசாயிகள், தங்கள் பட்டா நிலங்கள் மற்றும் மலையோர விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள விளைபொருள்களைச் சேதப்படுத்துகின்ற வன விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க மலையைச் சுற்றிலும் தடுப்புச் சுவர் அல்லது மின்சார வேலி (Electrical fence) அமைக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட ஏழைகள், வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள், குடும்ப அட்டைகள்மூலம் அரசின் இலவச எரிவாயு இணைப்புகிடைக்கப்பெறாதவர்கள், தவறுதலாக எரிவாயு இணைப்புப் பெற்றதாக எரிவாயு இணைப்பு நிறுவனங்கள் கொடுத்த தவறான உத்தரவின் பேரில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வழிவகை செய்ய அரசு ஆவன செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்த்தாண்டம் நகரை மையமாக வைத்து மார்த்தாண்டம், களியக்காவிளை, அருமனை, திருவட்டாறு, கொல்லங்கோடு, கருங்கல், புதுக்கடை, நித்திரவிளை ஆகிய காவல் நிலையங்களை உள்ளடக்கிய காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் (DSP) அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத் தலைநகரம் நாகர்கோவிலில், இணையதளம் (Internet) சார்ந்த குற்றப் பிரிவு காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

எங்கள் தலைவி, அன்னை சோனியா காந்தி, உடல் நலன் பெற்று தொடர்ந்து இந்த நாட்டு மக்களின் துயர் துடைக்கும் தன்னிகரில்லாத தலைவியாகச் செயல்பட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, வாய்ப்பளித்த முதல்வருக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள். நீங்கள் இன்றையதினம் இரண்டு மணிவரை பேசலாம். அதன்பிறகு, சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர், நாளை அவருடைய பேச்சைத் தொடரலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னில் பிறந்தவர்க்கு ஆட்சி நடத்தியவர்களின் சகாப்தம் முடிந்து, இந்த மண்ணில் பிறந்தவர்க்காக ஆட்சி நடத்தும் எங்கள் மாதரசியே, ஏர் பிடிக்கும் குடும்பத்தில் பிறந்த எனக்கு நாட்டின் சீர்மிகு சட்டமன்றத்தில் இடம். சமஸ்கிருதம் சொல்லுகின்றது,



'தெய்வம் மனுஷ ரூபேண என்று. என் மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கின்ற திசைநோக்கி என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

கொங்கு மண்டலத்திலே பெருந்துறைக்கு அருகில் தோப்புப் பாளையம் என்ற சிற்றூரிலே சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்து, மாணவப் பருவத்திலேயிருந்து கழகத்தின்பால் ஈர்க்கப்பட்டு, மாறாத விசுவாசத்தோடு பணியாற்றி வந்த என்னை, பேரூர் வட்டக் கழகத்தினுடைய செயலாளராக, மாவட்டத்தினுடைய அம்மா பேரவையினுடைய தலைவராக, ஒன்றியத் தொழிற்சங்கத்தினுடைய செயலாளராக, ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராக, ஈரோடு புறநகர் மாவட்டத்தினுடைய செயலாளராக, பெருந்துறை தொகுதியினுடைய சட்டமன்றப் பேரவை வேட்பாளராக படிப்படியாகப் புடம்போட்டு வார்த்தெடுத்த பெருமை மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதங்களைச் சாரும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

காட்டில் விதையாக விழுந்து கிடந்த என்னை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் தோட்டத்திற்குக் கொண்டு வந்து, பாசத்துடன் வளர்த்து, ஆளாக்கி சட்டமன்றப் பேரவை உறுப்பினர், சட்டமன்றப் பேரவை உறுதிமொழிக் குழுத் தலைவர் என மிகப் பெரிய பொறுப்புகளையெல்லாம் கொடுத்து, அழகு பார்த்த தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்றென்றும் நானும் எனது குடும்பமும் தலைமுறை தலைமுறையாய் விசுவாசத்தோடு நன்றி உள்ளவர்களாக இருப்போம் எனக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆசியோடு எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த பெருந்துறை தொகுதி மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி எனது சட்டமன்ற கன்னிப் பேச்சைத் துவக்குகிறேன்.

மே 13, ஆம் நாள், தமிழக மக்கள் மீண்டும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் திருநாளாக அமைந்தது. "மாகாளி ரஷ்ய நாட்டின்மேல்

கடைக்கண் வைத்ததால், ஆங்காங்கே ஆகாவென்று எழுந்தது பார் யுகப் புரட்சி" என பாரதி பாடியதுபோல, தமிழகத்தில் அமைதிப் புரட்சி நடைபெற்றது. சீனப் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி போல தமிழகத்திலே ஒரு குடும்ப ஆட்சிக்கு வாக்குச் சீட்டு எனும் ஆயுதத்தால் மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் ஒன்று திரண்டு முடிவுரை எழுதினார்கள்.

மங்கம்மா சபதம் என்பது போல, எங்கம்மா சபதத்தால் தமிழகம் மீட்கப்பட்டது. தேனாம்பேட்டையிலே கோட்டையிலே குடியேறி தமிழகத்தை கண்ணம்மாபேட்டை ஆக்கியவர்களை பொதுத் தேர்தலில் பொங்கி வந்த மக்கள் சக்தி என்ற புதுவெள்ளம் அடித்துச் சென்றது. "காலத்தை வென்றவர் நீங்கள்; காவியமானவர் நீங்கள், வேதனை தீர்த்தவர் நீங்கள், விழிகளில் நிறைந்தவர் நீங்கள், வெற்றித் திருமகள் நீங்கள்" எனத் தமிழகத்தினுடைய மக்கள், தேர்தல் வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த கால தி.மு.க. ஆட்சியிலே கடுமையான மின் வெட்டு, நில அபகரிப்பு, அரிசி கடத்தல், மணல் கொள்ளை, வழிப்பறி, திருட்டு எனத் தமிழ்நாட்டிலே உள்ள ஒவ்வொரு குடும்பமும் ஏதேனும் ஒரு வகையில் கடந்த ஆட்சியாளர்களால் பாதிக்கப்பட்டிருந்தது. அந்த நிலை தற்போது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மாற்றப்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

கடந்த ஆட்சியிலே குடும்பச் சண்டையால் பத்திரிகை அலுவலகத்திற்கு தீ வைத்து 3 உயிர்களைப் பலி வாங்கிய சம்பவம், திரைத் துறையிலே, கேபிள் துறையிலே ஆதிக்கம், மிரட்டல், வழிக்கறிஞர்களுக்கு அடி, உதை, நீதிபதியே தாக்கப்பட்ட சம்பவம், கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் கட்சிக்காரர்களைத் தவிர, மற்றவர்களுக்கு வேட்பு மனுவே தராமல் அராஜகம் செய்தது ஆகியவை அவர்களுடைய சாதனைகளாகும்.

உள்ளாட்சித் தேர்தலில் தேர்தல் முறைகளை மாற்றி, தில்லுமுல்லு செய்து, மிரட்டி, பதவிகளைக் கைப்பற்றிய அராஜகமும் தி.மு.க. ஆட்சியிலே நடைபெற்றது. தேர்தலில் வெற்றி பெற்றால் தமிழகமெங்கும் நடைபெற்ற நில அபகரிப்பு வழக்குகளைப் பதிவு செய்து, பறிகொடுத்த நிலங்கள், சொத்துக்கள் மீட்டுத் தரப்படும்



என்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையிலேயே தெரிவித்திருக்கின்றார்கள். அதன்படி சட்டப்படி தீர விசாரித்து பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அளிக்கின்ற புகார்களின் பெயரிலே காவல் துறை நடவடிக்கை எடுப்பதை, பொதுமக்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு எடுக்கிற நடவடிக்கையை வரவேற்று வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

குற்றவாளிகளோ, 'அய்யோ, அய்யோ' என்று கூக்குரல் இடுகின்றார்கள். உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்துத்தானே ஆக வேண்டும் ? பாவத்தின் சம்பளம் திகார் சிறை என்ற காலத்திலே இருக்கிறோம் என்பதை மறந்துவிட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொய் வழக்குப் போடுவதாகக் கதை வசனம் எழுதிக் கொண்டிருப்பதை மக்கள் நம்பத் தயாராக இல்லை.

நீறு பூத்த நெருப்பாக இருந்த மக்கள் கோபத்தை திருமங்கலம் ஃபார்முலாமூலம் அணைத்துவிடலாம் எனத் தி.மு.க.வினர் போட்ட தப்புக் கணக்கு புரட்சித் தலைவி தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய தலைமையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கட்டுக் கோப்பாகக் கொண்டு சென்ற காரணத்தினாலே தவறாக மாறிற்று. 'இன்றைக்கு முடிவு காலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நெருங்கிவிட்டது' என மதுரையிலே இருந்து எக்காளமிட்டனர்; காலச் சக்கரம் சுழன்றது; பொதுத் தேர்தல் வந்தது; மக்கள் தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நம்பினார்கள்; 'நம்பினார் கெடுவதில்லை, இது நான்குமறை தீர்ப்பு' என்பதற்கிணங்க, மக்கள் அம்மா அவர்களின் மேல் வைத்த அன்பினாலும், நம்பிக்கையினாலும் வரலாறு காணாத வெற்றியடைந்தார்கள்.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள் நாளை தன் உரையைத் தொடரலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*[2011 ஆகஸ்ட் 8*

## 7. அரசினர் தீர்மானம்

### பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அரசினர் தீர்மானம். பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

*"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2011) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

*என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

## 8. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2011

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்) 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2011), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*



*2011 ஆகஸ்ட் 8]*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

*"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2011)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *இச்சட்டமுன்வடிவின்மீது பேசுவதாக இருந்தால் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

**திரு. கு. லிங்கமுத்து:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு என்பது மக்கள் தலைமை தாங்கி மக்கள் பங்கேற்கும் இயக்கமாகும். ஆனால் கடந்த ஆட்சியில் கூட்டுறவு இயக்கத்தைக் காற்றில் பறக்க விட்டு, ஜனநாயகத்தைக் காற்றில் பறக்கவிட்டு, தேர்தலே நடத்தாமல், தனி அதிகாரிகளை வைத்து நடத்தினார்கள். மேலும், தேர்தல் ஒன்றை நடத்தி அதன்மூலம் மிகப் பெரிய அதிகார அத்துமீறலே நடந்தது. இதை இந்திய கம்யூனிஸ்டு கட்சி உட்பட ஜனநாயகத்தை ஆதரிக்கின்ற கட்சிகள் அனைத்தும் எதிர்த்தன. இந்நிலையில் புதிதாக மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள நீங்கள், கடந்த ஆட்சியைப்போல் தனி அதிகாரிகளின் காலத்தை நீட்டிக்காமல் இதைக் கடைசியாக வைத்துக்கொண்டு வரும் மாதங்களில் தேர்தலை நடத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளையோடு இப்போதிருக்கிற தனி அலுவலர்களுடைய பதவிக் காலம் முடிவடைகிறது. ஆகவே, இப்போது இந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. அப்படி ஒரு கட்டாயத்தில் இந்தச் சபை இருக்கிறது. இந்தக் கட்டாயத்திற்குக் காரணமானவர்கள், கட்டாயத்திற்குக் காரணமாக இருந்த சூழ்நிலைகள் மீண்டும் நமக்கு நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு இந்த அரசிற்கு இருக்கிறது என்பதை நான் வலியுறுத்துகிறேன். 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற*

@ 8–8–2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஆகஸ்ட் 8

தேர்தலில் பின்பற்றப்பட்ட அணுகுமுறைகள், தில்லுமுல்லுகள், வேட்பு மனுவைக்கூட தாக்கல் செய்ய முடியாமல் தடுத்த ஏற்பாடுகள், அதை எதிர்த்து கூட்டுறவு உறுப்பினர்கள் ஒரு பெரும் கொந்தளிப்பை அடைந்தார்கள். அவர்களே அதை நிறுத்தி வைக்க வேண்டிய அளவுக்கான ஒரு எதிர்ப்பு வந்தது. இந்தத் தேர்தலை நடத்துவதற்குப் புதிய முறைகளை நாம் கையாள வேண்டும். அதற்குத் தனி ஆணையம் நிறுவ வேண்டும். அந்தந்த அமைப்புகளே நடத்திக்கொள்ளட்டும் என்கிற முறையிலே அதை பலவீனமாக விட்டுவிடக்கூடாது. மீண்டும் மீண்டும் இப்படிப்பட்ட தவறுகள் நிகழாமல் இருப்பதற்கான சூழ்நிலையை நாம் உண்டாக்க வேண்டுமென்று சொல்லி ஒரு காலவரையறையில் தேர்தலை நடத்த வேண்டும் என்கிற அந்த நிபந்தனையோடு இந்தத் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்தல் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்குப் பிறகு, உடனடியாக தீர்ப்பின் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கான வழிமுறைகள் நிச்சயமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும் எனக் கோருகிறேன்.

*பிற்பகல் 2-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.



2011 ஆகஸ்ட் 8][பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை செவ்வாய்க்கிழமை (19-08-2011) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2011 ஆகஸ்ட் 8

# 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*13. வணிக வரி மற்றும் பதிவுத் துறையினால் 19-4-2010 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட SRO A-13(a)/2010 ஆம் எண் அறிவிக்கையில் பிழைத் திருத்தம் செய்தது குறித்து 14-1-2011 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு(H1)-த் துறையின் அரசாணை எண் 4-இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*14. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து 14-1-2011 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (பி1) துறையின் அரசாணை எண் 5-இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*15. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் நடுவர் ஆயம்) கூடுதல் உறுப்பினர் (நீதிமுறை) நியமித்தது குறித்து 7-2-2011 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (இ2)-த் துறையின் அரசாணை (2டி) எண் 25-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*16. ஊரக வளர்ச்சித் துறையினால் 13-4-1995 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(2)/ஊவ/1439(b-17)/95 மற்றும் II(2)/ஊவ/1439(b-15)/95 ஆம் எண் அறிவிக்கைகளில் திருத்தங்கள் செய்தும் மற்றும் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களாக அமைந்துள்ள உள்ளூர் பகுதிகளைக் கொண்டு திருப்பூர் மாவட்டத்திற்கான மாவட்ட ஊராட்சி ஏற்படுத்தியது குறித்தும் 25-2-2011 ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ2)-த் துறையின் அரசாணை எண் 26-இல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*



2011 ஆகஸ்ட் 8]

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*3. 2011-2012 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை மற்றும் வரவு-செலவுத் திட்ட வெளியீடுகள் எண்கள் 56 முதல் 59 வரை (திருத்திய நிதிநிலை) (58 புத்தகங்கள்).*

*4. 2011-2012 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள். (திருத்திய நிதிநிலை)*

*5. 2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை. (திருத்திய நிதிநிலை)*

*6. 2011-2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு - பகுதி-1. (திருத்திய நிதிநிலை)*

*7. 2011-2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு - பகுதி-2. (திருத்திய நிதிநிலை)*

*8. 2011-2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள். (திருத்திய நிதிநிலை)*

*9. 2011-2012 ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டம்-வரவு செலவுத் திட்ட இணைப்பு) (2011-2012 ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு). (திருத்திய நிதிநிலை)*

*10. 2011-2012 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி-2 திட்டங்கள்). (திருத்திய நிதிநிலை)*

*11. 2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள். (திருத்திய நிதிநிலை)*

*12. 2011-2012 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல் (திருத்திய நிதிநிலை). (தமிழ், ஆங்கிலம்)*

*13. 2011-2012 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)*

*14. 2011-2012 ஆம் ஆண்டு திருத்திய நிதிநிலை அறிக்கை குறித்த நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)*

*****